ஒக்ரோபர் 31 - நவம்பர் 06, 2010 October 31 - November 06, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI
வார மலர்



## முல்லைத்தீவில் நடப்பதென்ன?

## நிலம் திரும்பிய இந்துபுரம் மக்கள்

# தீபாவளி வாழ்த்துகள்

# போரால் ஏற்பட்ட களங்கம்; துடைத்தெறிய சர்வதேச உதவி

முப்பது வருடகாலமாக நடந்த போர் முடிவுக்கு வந்துவிட்டது. அந்தப் போர் காரணமாகச் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள களங்கம் இன்னும் முடிவுக்கு வரவில்லை.

அந்தப் போர் காரணமாக ஏற்பட்ட மனித உரிமைமீறல் செயற்பாடுகள் இன்னமும் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகளாகத் தொடர்கின்றன.

இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று இருக்கிறது. அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பமானதுதான் போர்.

முப்பது வருடங்களாகத் தொடர்ந்த அகிம்சை வழியிலான போராட்டங்களைச் சிங்களத் தலைமைகள் ஏற்காத காரணத்தால், ஆயுதம் ஏந்திய உரிமைப் போராட்டம் ஆரம்பமானது. அந்தப் போராட்டத்தைத் தனது சிநேகித நாடுகளின் உதவியுடன் இலங்கை முறியடித்து விட்டாலும் -

அந்தப் போர் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட களங்கம் துடைக்கப்பட முடியாதவாறு தொடர்கிறது.

மேற்குலக நாடுகளிலும் ஐ.நாவிலும் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தை - அபகீர்த்தியை - துடைத்தெறியப் பலகோடி ரூபாவைக் கொட்டவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பிரிட்டனில் உள்ள பெல் பொற்றிங்கர் என்ற பொதுசன நல்லுறவு பேணும் நிறுவனத்தை இலங்கை வாடகைக்கு அமர்த்தியுள்ளது. இலங்கையின் நற்பெயரைப் பாதுகாக்க அமர்த்தப்பட்டுள்ள அந்த நிறுவனத்துக்கு வருடாந்தம் மூன்று மில்லியன் பவுன்ஸை இலங்கை வழங்குகிறது.

போர் காரணமாகப் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தைக் களைய இந்த நிறுவனத்தை இலங்கை நியமித்துள்ளது.

இந்த நிறுவனம் போன்று வேறு பல நிறுவனங்களையும் இலங்கை வாடகைக்கு அமர்த்தியுள்ளதாகத் தகவல்கள் வெளிவருகின்றன.

இந்த நிறுவனங்களுக்கு அப்பால் இலங்கையின் தூதரகங்களின் வலையமைப்பு ஊடாகவும் இலங்கை பிரசாரங்களை முன்னெடுத்துள்ளது.

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைமீறல்கள் காரணமாக இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் களங்கத்தை இல்லாமல் செய்யவேண்டுமானால், குற்றச்சாட்டுக்களுக் குப் பதில் அளிக்க வேண்டும். குற்றச்சாட்டுக்கான காரணத்தைக் கண்டறிந்து குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போர் ஓய்ந்து ஒருவருடம் பூர்த்தியானபோதும், அதன் காரணமாக இலங்கைக்கு எதிராக எழுந்த குற்றச்சாட்டுக்கள் இன்னமும் ஓய்வதாக இல்லை.

அண்மையில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பிரிட்டன் சென்றபோது, போர்க் காலத்தில் எடுக்கப்பட்ட படங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. படையினர் மீது குற்றம் சுமத்தும் வகையில் அந்தப் படங்கள் அமைந்திருந்தன.

அந்தப் புகைப்படங்கள் போலியானவை, படையினர் அவ்வாறு செயற்படவில்லை என்று பேராசிரியர் பீரிஸ் மறுத்தார்.

கற்றிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை இலங்கை நியமித்திருந்தது. அந்த ஆணைக்குழுவில் பதிவாகும் சாட்சியங்கள் இலங்கைக்கு மேலும் களங்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளன.

அந்தச் சாட்சியங்களை ஐ.நாவுக்கு அனுப்பப் போவதாக இலங்கை பெருமையாகக் கூறுகின்றது.

அந்தச் சாட்சியங்கள் இலங்கைக்கு எதிரான விடயங்களைக் கொண்டிருப்பதால், இலங்கைக்கு எதிராக ஐ.நா.நியமித்துள்ள நிபுணர்குழுவுக்குப் பயன் உள்ளதாக அமையும்.

அந்த நிபுணர் குழு இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பாகச் சாட்சியங்களை அனுப்புமாறு பகிரங்கமாகக் கேட்டுள்ளது.

அதற்கான உதவியை வழங்கப்போவதாகப் பிரிட்டனின் தமிழ்ப் பேரவை அறிவித்துள்ளது.

போரின் போது நேரில் பாதிக்கப்பட்டவர்கள் நிபுணர் குழுவுக்குச் சாட்சியங்களை வழங்கப் போகிறார்கள்.

அதன்மூலம் இலங்கைக்கு எதிராக ஏற்படப்போகும் அபகீர்த்திக்கு மேலும் பலகோடி ரூபாவை இலங்கை செலவிட வேண்டிவரும்.

பாதுகாப்புச் செலவினத்தைத் தனது வரவு - செலவுத் திட்டத்தில் இலங்கை அதிகரிப்பது இதுபோன்ற செலவுகளுக்கா எனக் கேள்வி எழுப்பப்படுகிறது.

எதுவாக இருந்தாலும் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள அபகீர்த்தியைத் துடைத்தெறிய வேண்டுமானால், போருக்கான அடிப்படைக் காரணமான இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும். அந்தப் பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றை இலங்கை கண்டால், சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுள்ள களங்கத்தை நீக்க முடியும்.

தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை விரைந்து வழங்குவதன் மூலம் இலங்கை தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

ஆளும் கட்சி மட்டுமல்லாது தெற்கில் உள்ள சகல கட்சிகளும் இணைந்து செயற்பட்டு தீர்வு ஒன்றைக் காண்பதன்மூலம் இலங்கை மீதான களங்கத்தை முடிவுக்குக் கொண்டுவரமுடியும்.

அவ்வாறு செயற்படாவிட்டால் இலங்கையின் நற்பெயர் காப்பாற்றப்பட மாட்டாது. போருக்குச் செலவிட்டதுபோன்று நற்பெயரைப் பாதுகாக்கப் பலகோடியைச் செலவிட வேண்டிய நிலைதான் தொடரும்.

அது நிற்க -

பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்ட வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் முக்கிய கருத்து ஒன்றை அங்கு வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் மீண்டும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டவிழ்த்துவிட முடியாது என அறிந்துகொண்ட விடுதலைப் புலி ஆதரவாளர்கள் வேறு வழிகளில் நாட்டைச் சீர்குலைப்பதற்கு முனைப்புக் காட்டி வருகிறார்கள். நாட்டின் பொருளாதாரத்தை வலுவிழக்கச் செய்ய முயற்சி செய்து வருகிறார்கள் என்று பீரிஸ் கூறியுள்ளார்.

பீரிஸ் கூறுவதை ஆராய்ந்தால், போர் முடிந்த போதும் இன்னும் ஏதோ வழியில் அச்சுறுத்தல் இலங்கைக்கு இருப்பதாகவே தெரிகிறது.

சர்வதேச மட்டத்தில் தமிழ் மக்கள் மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு முடிவு ஏற்படவேண்டுமானால், அதற்குக் காரணமான இனப்பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்படவேண்டும்.

சர்வதேசம் அதையே வற்புறுத்துகிறது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் எல்லாம் வலியுறுத்துவது அதைத்தான்.

இலங்கை அந்த விடயத்தில் அக்கறை காட்டாமல், ஆட்சியை எப்படி நீடிக்கலாம் என்பதில் அக்கறை காட்டிக் கொண்டிருந்தால் இலங்கை மீதான அச்சுறுத்தல் தொடரத்தான் போகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்டுமாயின், இலங்கை மீதான அச்சுறுத்தல் அகலும். நற்பெயர் பாதுகாக்கப்படும்.

இலங்கைத் தலைவர்கள் இதைச் செய்வார்களா என்பதே இன்று எழும் கேள்வியாகும்.

## சிறுபான்மை மக்களைப் பாதிக்கும் உள்ளூராட்சி சட்டத் திருத்தம்

அது நிற்க -

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச உள்ளூராட்சித் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

சிறுபான்மை இனத்தைப் பாதிக்கும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் கூறியுள்ளன. இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக அக் கட்சிகள் அறிவித்துள்ளன.

பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐ.தே.கட்சியும் மட்டுமே உள்ளூராட்சிச் சபைகளை ஆட்சி செய்யும் வகையில் இந்தச் சட்டமூலம் அமைந்துள்ளது. ஏனைய சிறுபான்மைக் கட்சிகள் ஆட்சி செய்ய முடியாதவாறு திட்டமிட்டு இச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது எனத் தமிழ், முஸ்லிம் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

சிறுபான்மை மக்களின் உரிமையைக் குழிதோண்டிப் புதைக்க இச்சட்ட மூலம் உதவும் என்று அந்தக் கட்சிகள் கூறுகின்றன.

இச் சட்டமூலம் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் என்று அக் கட்சிகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்து நியாயம் கேட்கப் போகிறோம் என்று அந்தக் கட்சிகளின் தலைவர்கள் கூறுகின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முனைப்புக் காட்டாமல் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பறிக்க முயற்சிக்கப்படுகிறது என்று தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

— யாழவன்




## நாடளாவிய கிளைகள்

| | | | |
|---|---|---|---|
| கோட்டை | தொ: 011 5731888 | கம்பஹா | தொ: 033 5628889 |
| பம்பலப்பிட்டி | தொ: 011 2585330 | காலி | தொ: 091 5457777 |
| நுகேகொடை | தொ: 011 5529888 | மாத்தறை | தொ: 041 5629888 |
| மொறடுவை | தொ: 011 5528888 | இரத்தினபுரி | தொ: 045 5678887 |
| ஜா-எல | தொ: 011 5731730 | நீர்கொழும்பு | தொ: 031 5678880 |
| களனி | தொ: 011 5552008 | களுத்துறை | தொ: 034 5629888 |
| இராஜகிரி | தொ: 071 4440555, 5347632, 5357632 | அம்பலன்கொடை | தொ: 091 5678888 |
| கண்டி | தொ: 081 5673333 | அநுராதபுரம் | தொ: 025 5628889 |
| குருநாகல் | தொ: 037 5672562 | கேகாலை | தொ: 035 5628889 |
| மாத்தளை | தொ: 066 5678886 | பண்டாரவல | தொ: 057 5678889 |

## முகவர்கள்

- மட்டக்களப்பு - சனபில் ஸ்போட்ஸ், 362, பிரதான வீதி, காத்தான்குடி. தொ: 060 2652848, 077 3512341
- மன்னார் - உஷா சேல்ஸ் சென்டர். தொ: 023 2222010
- திருகோணமலை - அஜ்மீர் டிரேடர்ஸ், 186, என்.சீ. வீதி. தொ: 026 2222702
- வவுனியா - 'கணேஷ்' 100, ஸ்டேசன் வீதி, வைரவ புளியங்குளம். தொ: 024 4924775
- யாழ்ப்பாணம் - 'யாழகம்' 568, ஹொஸ்பிடல் வீதி. தொ: 021 2225563

**HOTLINE: 5652652 www.esermarketing.com**

# ரவுடித்தனத்தால் ஆட்சியை இழக்கப் போகும் தி.மு.க.?

தமிழகத்திலுள்ளோருக்கும் அதற்கு வெளியில் தமிழக அரசியலைக் கூர்ந்து நோக்குவோருக்கும் இன்றைய நிலையில் மண்டைக் குடைச்சலை ஏற்படுத்தும் ஒரே விஷயம் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி உடையுமா, இல்லையா என்பதுதான்.

மதுரையில் நடந்த அ.தி.மு.க. கூட்டத்தில் ஜெயலலிதா வேறு புதிராகப் பேசிவிட்டுப்போய்விட்டார். அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அமையும் என அவர் அறிவிக்கவில்லை. தி.மு.கவும் கூட்டணி பற்றி எதுவும் பெரிதாகப் பேசுவதில்லை. காங்கிரஸிலும் இளங்கோவன், கார்த்தி சிதம்பரம் தவிர எவருக்கும் பகிரங்கமாகக் கூட்டணியைப் பற்றிப் பேசத் துணிவு கிடையாது. ஆக, ஜனவரி மாதம் வரை இந்தப் பீடிகை தொடரத்தான் போகிறது.



இப்போதைக்குத் தெளிவாகத் தெரியும் ஒரே அம்சம் பாட்டாளி மக்கள் கட்சி அ.தி.மு.க. அணியில் சேராது என்பதும் விஜய்காந்த் தி.மு.க. அணியில் சேரப்போவதில்லை என்பதுமே. இதனைத் தவிர வேறு எதுவுமே துலாம்பரமாகத் தெரியவில்லை.

இதற்கிடையில் ஏற்கனவே எதிரும் புதிருமாக இருந்த விடுதலைச் சிறுத்தைகளும் காங்கிரஸும் மேலும் முட்டிக்கொண்டுள்ளன. கலைஞரின் சாணக்கியத்தால் இவ்விரு கட்சிகளும் ஒரே அணியில் இருந்தபோதும் ''விடுதலைச் சிறுத்தைகளை வெளியேற்று'' எனக் காங்கிரஸ் கோரும் நேரம் வந்துவிட்டது எனக் கூறப்படுகிறது. ஆனால், காங்கிரஸ் அ.தி.மு.க. அணிக்குப்போகாது என்பது நிச்சயமானால் மட்டுமே விடுதலைச் சிறுத்தைகளை வெளியேற்றுவது என்ற நிலைப்பாட்டில் கலைஞர் உள்ளார். அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாக காங்கிரஸின் கோரிக்கைக்காக திருமாவளவனைக் கைவிட்டு பின்னர் காங்கிரஸும் தி.மு.க. அணியில் இருந்து வெளியேறுமாயின் தனக்கு இரட்டை நஷ்டம் என்பது தி.மு.க. தலைமைக்குத் தெரியும். இப்போதைக்கு ராமதாஸுடன் கூட சுமுகமாக அவ்வப்போது சந்திப்பதும் இந்த நோக்கில்தான் என்பதும் வெளிப்படை. ஆக, கருணாநிதியைப் பொறுத்தவரை காங்கிரஸுடன் உறவைத் தொடர்வதும் காரியம் கையைமீறி காங்கிரஸ் வெளியேறினால் இருக்கவே இருக்கின்றன பா.ம.க., இடதுசாரிகள், விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகள். வேண்டுமானால் இடதுசாரிகளைவிட்டு பி.ஜே.பியுடனும் சேரமுடியும். இதற்காகவே பி.ஜே.பியும் காத்துக்கொண்டிருக்கிறது. எனவே, தி.மு.க. - பி.ஜே.பி. - பா.ம.க. - விடுதலைச் சிறுத்தைகள் என பலமான அணியை உருவாக்கவும் முடியும். எப்படிப் பார்த்தாலும் தி.மு.கவுக்கு நஷ்டமில்லை. காங்கிரஸுக்குத்தான் படுநஷ்டம் ஏற்படும். அ.தி.மு.கவுக்கோ நூறு மடங்கு லாபம் கிடைக்கும். தி.மு.கவுடனான உறவு முறிந்தால் மத்தியில் காங்கிரஸ் அரசு வீழ்வது நிச்சயமாகும். அத்தருணத்தில் பி.ஜே.பி. தலைமையில் மத்திய அரசு அமையும் வாய்ப்புள்ளது. காங்கிரஸ் கூட்டணியிலுள்ள மம்தா பானர்ஜி, சரத்பவார் இருவரும் எந்தநேரமும் சோனியா காந்தியை கைவிடத் தயாராக உள்ளனர். இதன்படி பார்த்தால் பி.ஜே.பி. தலைமையிலோ அல்லது தி.மு.க. அல்லது சரத் பவார் தலைமையில் பி.ஜே.பி. ஆதரவுடனோ மாற்று அரசு உண்டாகவும் கூடும். அந்தப் புதிய கூட்டணியின் லோக்சபா ஆசனப் பலம் பின்வருமாறு இருக்கலாம்.

| கட்சி | ஆசனங்கள் |
|---|---|
| பி.ஜே.பி. | 114 |
| தி.மு.க. | 17 |
| திருணாமுல் காங்கிரஸ் (மம்தா) | 19 |
| சரத் பவார் கட்சி | 08 |
| ஜனதா தளம் (ஐ) | 22 |
| அகாலிதள் | 05 |
| அஸாம் கணபரிஷ்த | 02 |
| தெலுங்கு தேசம் | 08 |
| பிஜு ஜனதா தளம் | 14 |
| தேவகவுடாவின் ஜனதா தளம் | 03 |
| லோக்தள் (அஜித் சிங்) | 04 |
| சிவசேனா | 12 |
| தேசிய மாநாடு (காஷ்மீர்) | 04 |
| மொத்தம் | 242. |

இந்த 242 உடன் மாயாவதியின் 19 அல்லது முலாயம் சிங்கின் 21 எம்.பிக்களையும் சேர்த்தால் 272ஐ அண்மிக்க வாய்ப்புள்ளது. அதாவது காங்கிரஸ் லல்லு, முலாயம் மற்றும் இடதுசாரிகள் தவிர்த்து சகல கட்சிகளும் பி.ஜே.பி. தலைமையில் ஆட்சி அமைக்கமுடியும். காங்கிரஸுக்கு 208 எம்.பிக்களும், இடதுசாரிக்கு 26 எம்.பிக்களும் லல்லு, முலாயமுக்கு உள்ள 25 பேரும், அ.தி.மு.கவுக்கு 8 பேரும் மட்டுமே பி.ஜே.பிக்கு எதிரானவர்கள். இவ்வகையில் பி.ஜே.பி. எதிரிகள் என்போர் 267 பேர்தான். மீதி 277 பேர் காங்கிரஸுக்கு எதிராகக் திரளக் கூடியவர்களே. உதாரணமாக ஒரே ஒரு எம்.பியை (ஈரோடு கணேசமூர்த்தி) கொண்ட ம.தி.மு.க. கூட பி.ஜே.பி. அரசில் இணையலாம். இவ்வகையில் தி.மு.கவை உதறுவது என்பது காங்கிரஸைப் பொறுத்தவரை தற்கொலைக்குச் சமனாகும். அந்தத் தற்கொலையைச் செய்யுமளவுக்கு ராகுல் காந்தி ஒரு முட்டாளா என்பது வெகு விரைவில் தெரியவரும். இத்தகைய முட்டாள் முடிவை செயற்படுத்தும் பட்சத்தில் இந்திராவும் சஞ்சயும் 1973 - 1977 காலப்பகுதியில் எடுத்த அடிமுட்டாள் முடிவு; 1984 - 1989இல் ராஜீவ் செய்த அரசியல் தற்கொலைகளை மீஞ்சிய மகாபெரும் வீழ்ச்சியுண்டாக்கும் முடிவாக அது இருக்கும். நவம்பர் 19ஆம் திகதி சென்னை தீவு திடலில் இளைஞர் காங்கிரஸின் பெரும் மாநாட்டில் ராகுல் காந்தி கலந்துகொள்ளவுள்ளார். அப்போது தி.மு.கவை உதறும் முடிவை வெளியிடுவார்; அல்லது ஜெயலலிதாவைச் சந்தித்து ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பார் எனக் காங்கிரஸில் உள்ள தி.மு.க. எதிரிகளும், அ.தி.மு.கவில் உள்ளவர்களும் எதிர்பார்க்கின்றனர். திருச்சிக் கூட்டத்தில் சோனியா, தி.மு.க. கூட்டணியை உதறும் முடிவை வெளியிடவில்லை. ராகுலாவது தங்கள் வாயில் 19ஆம் திகதி பாலை வார்க்கமாட்டாரா என ஏக்கத்துடன் உள்ளனர் அ.தி.மு.கவினர். இப்போதைக்கு ம.தி.மு.க. - கம்யூனிஸ்ட் இரண்டு கட்சிகள்தான் அ.தி.மு.கவின் அணியிலுள்ளன. பா.ம.க. வரமாட்டாது என்று உறுதியாகிவிட்டது. தே.மு.தி.க. அதிக இடங்களை ஜெயலலிதாவிடம் கேட்டு அடம்பிடித்து வருகிறது. காங்கிரஸ் அ.தி.மு.க. அணிக்கு வராவிட்டால் வேறு வழியின்றி தே.மு.தி.க. கேட்கும் இடங்களைத் தர அ.தி.மு.கவுக்கு நிர்ப்பந்தமுண்டாகும். அதுவும் சரிப்படாவிட்டால் பழையபடி அ.தி.மு.க. - ம.தி.மு.க. - கம்யூனிஸ்ட் கூட்டணியே மிஞ்சும். எனினும், மதுரையில் திரண்ட அ.தி.மு.க. கூட்டத்தை காட்டியாவது காங்கிரஸ் மற்றும் தே.மு.தி.கவுடன் பேரம் பேச முடியும் என ஜெயலலிதா கருதுகிறார்.

ஜெயலலிதா செல்லுமிடமெல்லாம் திரளும் கூட்டம் வாக்காக மாறாது எனக் கலைஞர் கூறியுள்ளார். 1962இல் காஞ்சிபுரம் கூட்டத்தில் அண்ணா பேசும்போது இலட்சக்கணக்கில் கூட்டம் திரண்டது; 1971இல் காமராஜர் - ராஜாஜி பேசிய கூட்டம் கண்டு தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை கைவிடுவோமோ என இந்திரா மயங்கினார். இருந்தும் கூட்டம் திரண்ட அக்கட்சிகள் வெல்லவில்லை என்பதை கலைஞர் சுட்டிக்காட்டியுள்ளார். 1971 தேர்தலில் இந்திரா - கலைஞர் கூட்டணி கரைசேர்ந்தது. அதுபோல சோனியாவுக்கு இப்போது சற்றுத் தயக்கம் இருந்தாலும் கடைசியில் கலைஞர் - சோனியா அணி வெல்லலாம் என்பதே அதன் கருத்து. கூட்டம் திரள்வதற்கு முக்கிய காரணம், ஆளும் கட்சி மீது மக்கள் வெறுப்பில் இருப்பதும் அதை எடுத்துப்பேச வசீகரமான பெண் எதிர்க்கட்சித் தலைவர் இருப்பதுமேயாகும். அந்த வகையில்தான் தமிழகமே திரண்டு ஜெயலலிதாவின் கூட்டத்தை நோக்குகிறது எனலாம். தி.மு.க. ஆட்சியில் ரவுடிகளின் தொல்லை என்பது உச்சக்கட்டமாகவுள்ளது. விலைவாசி உயர்வு முல்லை பெரியாறு அணையைக் காக்க தி.மு.க. செயலில் இறங்காதது என வேறு பிரச்சினைகளும் தி.மு.கவுக்கு உள்ளன. ஆனால் தி.மு.கவினரைப் பொறுத்து ஒரே ஆறுதல் தி.மு.க. தலைமை களநிலவரங்களைக் கூர்மையாக அவதானித்து வருவதே. உதாரணமாக, மதுரையில் அழகிரியின் தர்பாரை மீறி ஜெயலலிதா கூட்டம் நடத்தமுடியுமா என அ.தி.மு.கவினரே சந்தேகத்துடன் இருந்தனர். அழகிரியின் எடுபிடிகளைக் கலைஞர் கடுமையான உத்தரவுமூலம் கட்டுப்படுத்தியது தி.மு.க. அரசின் மரணத்தைக் காத்தது. மாற்றாக அ.தி.மு.க. கூட்டவேளையில் மின்சாரத்தைத் தடைசெய்தும் இலவச டிவி வழங்கும் கூட்டங்களை நடத்தியும் அழகிரியின் ஆட்கள் சமாதானமடைந்துள்ளனர். மதுரையில் ஜெயலலிதா மீது ஒரு விரல் பட்டிருந்தால் அது முழுத் தமிழகத்திலும் தி.மு.க. எதிர்ப்பு அலையாக வெடித்துக் கிழம்பியிருக்கும். கலைஞரின் அனுபவம் அங்கே கைகொடுத்தது. அழகிரி மதுரையில் சண்டித்தனம் செய்கிறார் என்று பேச இனி அ.தி.மு.கவினருக்கு இயலாது போகும்.

தி.மு.க. அமைச்சர்களின் உறவினர்களே முக்கிய ரவுடிகளாகச் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டுள்ளது கலைஞருக்குப் பெரும் பின்னடைவைத் தருவதாகும். சமீபத்தில் சேலத்தில் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அமைச்சர் வாகனத்தில் சிறை சென்று தனது பெறாமகனான 6 கொலைகளின் சூத்திரதாரியைச் சந்தித்துள்ளார். இதை தினமலர், தினமணி உள்ளிட்ட தினசரிகள் முன்பக்கத்தில் செய்தியாக்கியுள்ளன. கலைஞரின் வாசிப்பறிவும் பேராசிரியரின் தமிழும் வெட்கித் தலைகுனியும் கொள்கைகள் இவையாகும். சமீபகாலமாக வீரபாண்டி ஆறுமுகத்தின் சேலம் மாவட்டத்தில் தி.மு.க. தொடர்ச்சியாக தோற்றுக் கொண்டே வருகிறது. ஆகவே, கலைஞர் அதிகம் மண்டையை போட்டு உடைக்கவேண்டியதில்லை. தி.மு.க. தோற்று ஆட்சியை இழப்பதானால் அதற்கு ஒரே ஒரு காரணம் மட்டுமே இருக்கமுடியும். சட்டம் ஒழுங்கை மீறிய ரவுடி ராஜ்யம் தி.மு.கவின் 2ஆம், 3ஆம் நிலைத் தலைவர்களால் நடத்தப்படுவது என்பதே அது. சினிமாவில் ரவுடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எம்.ஜி.ஆர். கதாநாயகனாக வந்து உதவுவதுபோல் நிஜ வாழ்க்கையில் தி.மு.கவின் ரவுடிகளை எதிர்க்க ஜெயலலிதாவே ஒரே வழி என வாக்காளர் மயங்குவதிலும் தவறில்லை. களநிலவரங்களை ஊன்றிப் படித்துவரும் கலைஞருக்கு இது புரிந்தால் தி.மு.க. ஆட்சி தொடரும்; இல்லாவிடில் சசிகலா ஆட்சி தமிழகத்தை ஆட்கொள்வது நிச்சயமாக நடக்கத்தான் போகிறது. *

- எஸ்.சுரேந்திரஜித்



## உயிர் வலிக்கும் கணங்கள்...!

# இந்த மழலைகளின் கதி என்ன?



மீண்டும் 'உயிர்வலிக்கும் கணங்கள்' ஊடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்வடைவதற்குப் பதிலாக திருப்தி அடைகின்றேன். ஏனெனில், என் தேசத்தின் இரத்தம் தோய்ந்த தடங்களை அறியாதவர்களுக்கும், நம்ப மறுப்பவர்களுக்கும் எனது அனுபவங்களைப் பகிர்வதில் பெரும் ஆறுதல் அடைகின்றேன். வரலாற்றில் தமிழர்களின் இருள் சூழ்ந்த அந்தப் போர்க்காலத்தை பலரின் மனங்களில் பதிவு செய்வதால் என் பேனாவும், நான் செலவழிக்கும் இதற்கான நேரங்களும் பயன்பெறுகின்றன. என்னருகில் உள்ள தட்டிக்கொடுக்கும் சகோதரர்கள், உரமூட்டும் தோழர்களினால் எந்தவித அச்சமுமின்றி செயற்பட்டு வருகிறேன். வலிகளின் ஆழத்தை நேரிலே அனுபவித்தவன் என்கின்ற 'அடைமொழியோடு' துயர் சுமந்த என்னவரின் வேதனையான அனுபவங்களை எழுதுகின்றேன்.

எது எவ்வாறு இருப்பினும், நடந்தது நடந்ததுதான். உண்மை என்றுமே பொய்யாகாது. உண்மைக்காக குரல் கொடுப்பதனால் வருகின்ற சவால்களையும், வசைகளையும் எதிர்கொள்ள தயாராகுகிறேன். போனால் வராத உயிர்களை ஏராளமாகப் பறிகொடுத்துள்ளோம். ஆகையால் என் பிரச்சினையை வெளியே கொண்டுவர பயம் தேவையில்லை.

சரி! குண்டுமழைகளை தாங்கிய தமிழ் மண்ணிலே குருதி நீர் பாய்ந்த வரலாற்றுக் கோர நிகழ்வுகளைக் கண்டும், கேட்டும் ஏராளமாய் மனதிலே பதிவாக்கியுள்ளேன். அந்த வகையில், பெற்று வளர்த்த உலகில் உன்னதமானவர்களான பெற்றவர்களை இழந்து இன்று பாசத்துக்காய் காத்திருக்கும் மூன்று குழந்தைகளின் மனச்சிதறல்களோடு அவலக் கிடங்குக்குள் நுழைகின்றேன்.

என் மூத்த அண்ணனின் மனைவியின் - அதாவது என் அண்ணியின் சகோதரியும் கணவரும் மூன்று பெண்குழந்தைகளும், போரால் துரத்தப்பட்டு துரத்தப்பட்டு ஓடிவந்து, கடைசியாய் முள்ளிவாய்க்காலில் குடியேறினர். அங்கு வாழ்ந்த காலப்பகுதியில் பட்ட வேதனைகளை சொல்லித்தான் தெரியவேண்டும் என்றில்லை. மழைத்துளிகளாக எறிகணைகளும் துப்பாக்கி ரவைகளும் பொழிந்து கொண்டேயிருக்கும். அவை காடுமேடுகளை எல்லாம் தாண்டி வந்து எம் உறவுகளையே பதம்பார்க்க ஆசைப்பட்டன போலும். சில மான்களை பல நரிகள் சூழ்ந்துகொண்ட பின், மான்களால் என்ன செய்யமுடியும்? தமிழர்தம் நிலையும் இதுவே.

இயற்கையிலே மிகவும் பயந்த சுபாவமுள்ள அண்ணியின் சகோதரி, இந்த தொடர் தாக்குதல்களால் பதுங்குகுழிகளை விட்டு வெளியே வரப் பயப்படுவார். இருந்தும் அவர், குழந்தைகளுக்காக பரபரப்போடு ஏதாவது உணவைத் தயார்செய்து கொண்டு மீண்டும் பதுங்குகுழியே தஞ்சமென நுழைந்துவிடுவார். ஒவ்வொரு நாளும் வழமையான செயல்களாய் இவையே நடந்தன. அண்ணியின் சகோதரியின் கணவர் சுறுசுறுப்பான மீனவர். இடப்பெயர்வின் பின்னர் இவரா அவர்? என கேள்வி எழுப்பும் விதமான தோற்றத்தில் இருந்தார்.

## அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்

இருப்பினும், தன் உடல் இயலாமைகளை கருத்தில் எடுக்காது தன் குடும்பத்திற்காக அத்தனை கொடூரங்களின் மத்தியிலும் கடலில் தொழிலுக்குச் செல்வார். மீன் பெரியளவில் பிடிபடாவிட்டாலும், ஏதோ ஓரளவு செலவுக்கு போதுமானதாக இருந்தது. அக்கால சூழலில் பாவனைப் பொருட்கள் விற்கப்பட்ட விலைகளுக்கு எந்தக் கோடீஸ்வரனும் கொஞ்ச நாளில் ஏழையாகிவிடுவான். நினைக்க முடியாத விலைகளில் பொருட்களின் விலைகள் இருந்தன.

இந்தக் காலகட்டத்தில் தான் வன்னியில் இறுதிக் கட்ட உக்கிரச் சமர் தலைதூக்கியது. சரமாரியாய் வெடிகள், குண்டுகள், பல்குழல் எறிகணைகள் அந்த குறு நிலப்பரப்பினுள் விதைக்கப்பட்டன. எங்கும் மரண ஓலம்., காற்றுக்கூட பிணவாடை கொண்டு வீசியது. எங்குமே கந்தக, பொஸ்பரஸ் மற்றும் நச்சுவாயுக்களின் வாசனை! அம்பலவன் பொக்கனை, மாத்தளன் என்பன இராணுவ வசமாகின. அங்கு குண்டுகளுக்கிடையில் சிக்கி இறந்தவர்கள் போக மீதமாய் எஞ்சியிருந்தவர்கள் நடக்கத் திராணியற்றவர்களாய் இராணவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நகர்ந்தனர். இந்நிலையில் வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய இரு பகுதிகளும் பகல் பொழுதிலேயே இருள் கவ்விக்காணப்பட்டன. ஹீரோசிமா, நாகசாகி - இவை அழிவுகளின் சின்னங்கள் வரலாற்றில் போரால் உக்கிரமான முறையில் சிதைக்கப்பட்ட இடங்களாய் இதுவரை இவைகள்தான் அடையாளம் காணப்பட்டன. ஆனால், வன்னியின் இறுதிக்கட்ட சூழலைக் கண்டவர்கள் நிச்சயமாய் இவ்விரு இடங்களையும் கூறமாட்டார்கள். உலகப்பதிவில் வன்னி போன்று குருதி குடித்தமண் எங்கிலுமே இல்லை.

இந்த வேளையில்தான், அண்ணியின் சகோதரி குடும்பமும், என் அண்ணாவின் குடும்பமும் திசைமாறியிருந்தன. இராணுவப்பகுதிக்குள் நுழைய பாதைகிடைத்ததினால் அண்ணியின் சகோதரி குடும்பத்தையும் அழைத்துப்போக, அண்ணன் சிதைவுகளுக்கு மத்தியில் இருந்த அவர்களின் கூடாரத்தை நெருங்கினார். பல எறிகணைகள் அந்த இடத்தை ஆக்கிரமித்து சிதைத்திருந்தன. கூடாரமே இல்லை என்ற நிலையில் பதுங்குகுழியை எட்டிப்பார்த்தார். உள்ளிருந்து "சித்தப்பா... எங்கட அப்பாவையும் அம்மாவையும் பாருங்கோ..." என அண்ணியின் சகோதரியின் மூத்த மகள் கூக்குரலிட அண்ணன் அதிர்ந்துபோனான். அப்போது கையிலிருந்த ஒருவயதுக் குழந்தை தாய் இறந்தது கூடத்தெரியாமல் பால்குடித்தபடி இருந்தது. இந்தக் கொடூரம் வேறு எங்காவது நடந்துள்ளதா? குழந்தையின் அப்பா உடல் துண்டாடப்பட்டும், அம்மா தலையிலே பலத்த காயத்துடனும் இறந்துகிடக்க மூன்று குழந்தைகளும் ஆபத்தின்றி இருந்தன. இறுதியாய் மூன்று பிடி மண்ணை அவர்கள் மீது துவிவிட்டு குழந்தைகளுடன் கட்டுப்பாட்டுக்குள் வந்து சேர்ந்தார் அண்ணன்.

உண்மை, அன்பு என்பவை பெற்றவர்களினால் மட்டுமே கிடைக்கும். இனி இந்த மழலைகளுக்கு அன்பைப் பொழியவும், அணைத்துக் கொள்ளவும் உறவுகள் இருந்தாலும் தாய், தந்தையின் இடத்தை யாராலுமே நிறப்ப முடியாது. இப்போது அப்பம்மாவுடன் வாழும் இந்த மூன்று சிறுமலர்களும் யாருக்கு என்ன தீங்கு செய்தார்கள். பிறந்தது முதல் பதுங்குகுழிகளுடன் பழக்கப்பட்ட இந்த குழந்தைகள் செய்த தவறு என்ன? பிறந்தது தவறா? இந்த சிட்டுக்களின் வாழ்வைப்போல் இன்னும் ஏறாளமான குழந்தைகள் இங்குள்ளனர். தாய்மடிமீது தூங்கவேண்டிய குழந்தைகள் தரையிலே கிடக்கின்றன. இவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு பதில் கூறப்போகும் பாத்திரவாளி யார்? இப்போது ஓரளவு மாறியுள்ள மூவரும் பெற்றவர் இல்லா ஏக்கத்தை கண்களில் தாங்கிநிற்கின்றனர். அன்பான உறவுகளே! இவ்வாறான நிலை கொண்ட உறவுகளை ஆதரவு காட்டி அணைத்துக்கொள்ள வேண்டியது நம் அனைவரினதும் கடமை. எனவே, இன்னுமொரு துயர் சுமந்த பதிவோடு நேசநெஞ்சங்களை சுடர் ஒளி ஊடாக மீண்டும் சந்திப்பேன். அதுவரை சிறு இடைவெளிகளுடன்...

- அளம்பில் மகன் -

நீண்ட இடைவெளிக்குப் பிறகு திடீரென ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து நெடிய அறிக்கை ஒன்றை முதல்வர் கருணாநிதி வெளியிட்டுள்ளார். புலிகள் மீதான குற்றச்சாட்டில் தொடங்கும் இந்த அறிக்கை, ஜனாதிபதி ராஜபக்ஷ கொடுத்த ஒரு வேண்டுகோளுடன் முடிவது தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் புதிய கொந்தளிப்பைக் கிளப்பி உள்ளது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் சென்னையில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.



# ஈழப் போராளிகளை பிளவுபடுத்தியவரே கருணாநிதி தான்

**"போரால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழரின் மறுவாழ்வு பற்றி முதல்வர் கருணாநிதி மீண்டும் முக்கியத்துவம் கொடுத்துப் பேசி இருக்கிறாரே?"**

"இலங்கையில் தமிழர்களின் பேரழிவுக்கு காங்கிரஸும் தி.மு.க-வும்தான் பொறுப்பு! அப்பாவித் தமிழர்களைப் பதை பதைக்கப் படுகொலை செய்ய, இந்திய அரசே ஆயுதம் வழங்கியது. இந்திய மத்திய அரசில் ஓர் அங்கமாக இருந்தும், தமிழர் அழிவைத் தடுக்க தி.மு.க. எதுவுமே செய்யவில்லை. மாறாக, தமிழக மக்களை ஏமாற்ற வரிசையாக நாடகங்களை மட்டும் அரங்கேற்றியது. முள்வேலி முகாமில் இருந்து மூன்று லட்சம் தமிழ் மக்களை விடுவிக்குமாறு தமிழகமே கொதித்துப் போராடியபோது, சர்வ கட்சிக் குழுவை அனுப்புமாறு வலியுறுத்தப்பட்டது. ஆனால், தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி எம்.பிக்களை மட்டும் கருணாநிதி அங்கு அனுப்பிவைத்தார். அவர்கள் திரும்பி வந்த பிறகு, அவரே ஓர் அறிக்கை வெளிட்டார். முகாம்களில் உள்ள மக்கள் மூன்று மாதங்களில் அவரவர் ஊர்களில் குடியேற்றப்படுவார்கள் என்று ராஜபக்ஷ உறுதி தந்துவிட்டார் என்றும் மக்களுக்குச் செய்யப்படும் உதவிகள் ஓரளவு திருப்தி தருவதாகவும் கூறினார் கருணாநிதி. ஆனால், இன்னமும் அந்த மக்கள் பெரும் துன்பத்தில்தான் இருக்கிறார்கள்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்தியா உதவ வேண்டும் என இப்போது அவரே கூறுகிறார். காங்கிரஸுக்கும் தி.மு.க-வுக்கும் உள்ள உறவில் நெருடல் ஏற்படும்போது, ஈழத் தமிழர் பிரச்சினையைக் கையில் எடுப்பதும்... திராவிடம்பற்றிப் பேசுவதும் அவரது அரசியல் தந்திரங்கள். உறவு இணக்கமாக இருக்கும்போது, அதைப்பற்றி மூச்சுகூட விட மாட்டார்!"

**"போர் மேகங்கள் சூழத் தொடங்கியதில் இருந்தே, மத்திய அரசு தலையிட்டுத் தடுக்க வேண்டும் என முதல்வர் தொடர்ந்து கூறிக்கொண்டுதானே இருந்தார்?"**

"மன்மோகன் சிங் பிரதமராகப் பதவியேற்ற 2004-ஆம் ஆண்டு முதல் 2009 வரை இலங்கை இராணுவத்தினருக்கு இந்திய ராணுவம் பயிற்சி அளித்தது. இலங்கை இராணுவத்தில் 63 சதவிகிதம் பேர் இப்படி இந்தியாவில் பயிற்சி பெற்றனர். 2008-09 ஆண்டுகளில் விடுதலைப் புலிகளுக்கு உதவிப் பொருட்கள், ஆயுதங்கள் கொண்டுவந்த 13-க்கும் மேற்பட்ட கப்பல்களை இந்தியக் கடற்படை தடுத்தது. இந்திய இராணுவத்தின் முன்னாள் லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் சந்திரா நம்பியார், இலங்கை இராணுவத்துக்கு ஆலோசகராகப் பணியாற்றினார். உச்சகட்டமாக... ஏவுகணைகள், ராடர்களுடன் அவற்றை இயக்க இராணுவப் பொறியியலாளர்களையும் டெல்லி அரசு அனுப்பி வைத்தது.

இவை எல்லாம் நடந்தபோதும் மத்திய அரசில் தி.மு.க. அங்கம் வகித்தது. இவர்கள் தயவில்தான் காங்கிரஸ் அரசு உயிர் பிழைத்தது. உண்மையிலேயே ஈழத் தமிழர்கள் மீது கருணாநிதிக்கு அக்கறை இருந்தரல்... மத்திய அரசுக்கான ஆதரவை அப்போதே விலக்கி இருக்க வேண்டும்; அப்படிச் செய்து இருந்தால், காங்கிரஸ் அரசு கவிழ்ந்திருக்கும்; அதே சமயம், காங்கிரஸ் உதவியால் தமிழ்நாட்டில் பதவியில் இருக்கும் தி.மு.க. அரசையும் காங்கிரஸ் கவிழ்த்து இருக்கும். எனவே, தனது அரசைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆயிரக்கணக்கான தமிழர்களை கருணாநிதி பலிகொடுத்தார் என்பதுதான் உண்மை!"

**"போர் நிறுத்த முயற்சி பற்றி எம்.கே.நாராயணனும் சிவசங்கர் மேனனும் அவ்வப்போது பேசி விட்டுச் சென்றதாக முதல்வர் கூறினாரே?"**



"இலங்கையில் போர் முடிந்தவுடன் மகிந்த ராஜபக்ஷவின் தம்பி பசில் ராஜபக்ஷ சில உண்மைகளை வெளிவிட்டார். 'போர் நெருக்கடியான நேரத்தில் இந்திய - இலங்கை அரசுகள் இணைந்து செயல்படுவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தியத் தரப்பில் எம்.கே.நாராயணன், சிவசங்கர் மேனன், மற்றும் உள்துறைச் செயலாளரும் இலங்கைத் தரப்பில் பசில், கோத்தபாய ராஜபக்ஷ, மற்றும் வெளியுறவுச் செயலாளரும் இடம்பெற்றனர். அந்தக் காலகட்டத்தில் இலங்கை இராணுவத்துக்கு என்னென்ன உதவிகள் வேண்டும் என இந்தக் குழு கூடிப் பேசி, அதன்படி இந்திய அரசு உதவிகளைச் செய்தது. இதற்காகவே நாராயணனும் சிவசங்கர் மேனனும் அடிக்கடி கொழும்பு வந்து சென்றனர்' என்பது பசில் ராஜபக்ஷவின் ஒப்புதல் வாக்குமூலம். ஆனால், போர் நிறுத்தம் குறித்து ராஜபக்ஷவிடம் வலியுறுத்துவதற்காகவே எம்.கே.நாராயணனும் சிவசங்கர் மேனனும் கொழும்பு சென்றதாக கருணாநிதி உண்மையைத் திரித்துக் கூறி, தமிழக மக்களை ஏமாற்றினார்!"

**"போரில் அப்பாவி மக்கள் கொல்லப்படத்தான் செய்வார்கள் எனப் பேசிய ஜெயலலிதாவுக்கு ஆதரவாக, ஈழத் தமிழ்ப் பற்றாளர்கள் குரல் உயர்த்தி பிரசாரம் செய்வதாக கருணாநிதி குறிப்பிட்டு இருக்கிறாரே?"**

"ஜெயலலிதா, அவ்வாறு பேசியது மன்னிக்க முடியாத தவறு. ஆனால், ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் கருணாநிதி என்ன செய்தார் என்பதுதான் முக்கியம்! ஈழத் தமிழர் பிரச்சினை ஒரு புறம் இருக்க, தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படை வேட்டையாடுவதைத் தடுத்து நிறுத்த இவர் என்ன செய்தார்? தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பில் இருந்துகொண்டு தன் குடிமக்களைப் பாதுகாக்க முடியாதவர், மற்றவர் மீது குற்றம் சாட்டுவதற்கான அருகதையை இழந்துவிட்டார். ராஜபக்ஷவைப் பாதுகாப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ... அதை எல்லாம் இன்னமும் தவறாது செய்கிறார் கருணாநிதி!"

**"இலங்கையில் சகோதர யுத்தம் நடக்காமல் இருந்திருந்தால், வரலாறு வேறு வடிவம் பெற்றிருக்கும் என முதல்வர் ஆதங்கப்படுவதிலும் உண்மை இருக்கிறதே..?"**

"சரியாகச் சொன்னால், 1986 மே மாதத்தில் மதுரையில் 'டெசோ' மாநாடு முடிந்த பிறகு, ஈழத்தில் போராளிகளுக்குள் மோதல் ஏற்பட்டது. இந்தியஅரசின் 'ரோ' உளவுத் துறைதான் அதற்குக் காரணம். 'டெலோ' இயக்கத்துக்கு ஏராளமான ஆயுதங்களைக் கொடுத்து, புலிகளுடன் மோதும்படி தூண்டிவிட்டது 'ரோ'. அதன்படி, அவர்கள் ஆங்காங்கே விடுதலைப் புலிகளை சுட்டார்கள். சிலரைப் பிடித்துக்கொண்டு போனார்கள். அப்போது விடுதலைப் புலிகளின் சார்பில் இது குறித்து 'டெலோ' தலைவர் சிறீசபாரத்தினத்துடன் பேச்சு நடத்த கப்டன் லிங்கம் அனுப்பிவைக்கப்பட்டார். அந்த லிங்கத்தின் இரு கண்களையும் தோண்டி எடுத்து, அவரைக் கொடூரமாகக் கொலை செய்தனர். இதற்கு பதிலடியாகத்தான் புலிகளின் தாக்குதல் நடந்தது. போராளிகளுக்கு இடையிலான மோதலுக்கு உண்மையான காரணம் 'ரோ' உளவுத் துறைதான் என்பதை கருணாநிதி ஆரம்பம் முதலே மறைத்துப் பேசுகிறார்.

தமிழகத்தில் அனைத்துப் போராளி இயக்கங்களும் இயங்கியபோதுகூட அவர்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்த முயன்றவர் கருணாநிதிதான். எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது 1983 ஜூலையில் எல்லாப் போராளிக் குழுக்களின் தலைவர்களையும் அழைத்து ஒற்றுமையை உண்டாக்க முனைந்தார். இந்தத் தகவலை அறிந்ததும், அது வரை போராளிக் குழுவினரை சந்திப்பதைத் தவிர்த்துவந்த கருணாநிதி, எம்.ஜி.ஆரை சந்திப்பதற்கு முந்தைய நாளில் தன்னை வந்து சந்திக்குமாறு போராளித் தலைவர்களை அழைத்தார். அவரது அழைப்பை ஏற்று, டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் குழுவினர் சென்றனர். அந்த சந்திப்பைப்பற்றி பத்திரிகைகளுக்கு அறிவித்து விளம்பரமும் தேடிக்கொண்டார் கருணாநிதி. ஆனால், முதலில் அழைத்த எம்.ஜி.ஆரை புலிகள் மட்டுமே திட்டமிட்டபடி சந்தித்தனர்.

ஆக, தமிழ்நாட்டில் தி.மு.க-வுக்கும் அ.தி.மு.க-வுக்கும் இடையிலான போட்டா போட்டியில் போராளி இயக்கங்களைப் பிளவுபடுத்தியவர் கருணாநிதிதான். பல முறை தனது கட்சிக் கண்ணோட்டத்தில் ஈழத் தமிழர்களைப் பிளவுபடுத்தியவரும் இவரேதான். தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போலியான காரணங்களை இப்போது தேடிப் பிடிக்கிறார் அவர். போராளிகளின் சகோதரச் சண்டையை ஒரு குற்றமாகவும் காரணமாகவும் சொல்லும் இவர், முதலில் தன் குடும்பத்தில் நடக்கும் சகோதரச் சண்டையை நிறுத்திக் காட்டட்டுமே!"

நன்றி: இணையம்

முல்லைத்தீவுப் பட்டிணம் மீண்டும் மெல்லக் கண் திறக்கத் தொடங்கியுள்ளது. முல்லைத்தீவிலிருந்து நீர்கொழும்பு, கொழும்பு, யாழ்ப்பாணம் என்று பல இடங்களுக்கும் பேருந்துகள் ஓடுகின்றன. நகரிலுள்ள திணைக்களங்களின் கட்டிடங்கள் புனரமைக்கப்படுகின்றன. நீதிமன்றம் கூட கட்டப்படுகின்றது.

மீண்டும் பழைய நிலைக்கு முல்லைத்தீவைக் கொண்டு வருவோம் என்று அரச தரப்பு அரசியல்வாதிகள் உறுதியுரைக்கிறார்கள். பழைய நிலையைக் கடந்து புதிய வளர்ச்சியை ஏற்படுத்துவோம் என்று அமைச்சர் றிஷாட் பதியுதீன் சொல்கிறார்.

ஆனால், இடிபாடுகளும் புதர்க்காடுகளுமாகவே முல்லைத்தீவு நகரும், நகரத்துக்கு அப்பாலான இடங்களும் இருக்கின்றன. சனங்கள் இன்னும் அகதி நிலையிலிருந்து மீண்டுவிடவில்லை. பாழடைந்த நகரிலிருந்து புறப்படும் பேருந்துகள் உருக்குலைந்த ஊர்களின் வழியே பயணிக்கின்றன.

பகுதியில் வாடி அமைத்து இருக்கிறார்கள். சுமார் இருபத்தைந்து பேர் வரையில் வாடியில் தங்குகின்றனர். இவர்களைப் பற்றிக் கதைப்பதற்கு ஊரில் எவருக்கும் தெம்பில்லை. படையினரின் ஆதரவு இந்தச் சங்குக்காரர்களுக்கு உண்டு என்று ஊருக்குள் பேசிக்கொள்கின்றனர் சனங்கள். இதைப்பற்றி யாராவது உயர் அதிகாரிகளிடம் பேசலாம் என்றால், எவரும் அதற்குத் தயாரில்லை. எல்லோரும் நழுவிவிடுகிறார்கள். அப்படியென்றால் இதைப் பற்றிக் கதைப்பதற்கு கடற்றொழிலாளர்கள் சங்கம் இல்லையா? என்று கேட்டேன்.

போருக்குப் பின்னர், முல்லைத்தீவில் கடற்றொழிலாளர்களுக்கு என்று சங்கம் இன்னும்



ஆனால், இவ்வாறு கைவிடப்பட்ட பொருட்களை மீண்டும் போய் எடுப்பதற்கு மக்களுக்கு அனுமதியில்லை. தவிர, இந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் மீண்டும் அங்கே சென்று குடியேறவும் வழியில்லை. இந்தப் பிரதேசங்களில் உள்ள வளமான கடற்பரப்பில் மீன்பிடிக்கவும் முடியாது.

# முல்லைத்தீவில் நடப்பதென்ன?

போரின் வடுக்கள் இன்னும் ஆறவில்லை, சனங்களின் துயரங்களும் நீங்கவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. ஆனாலும் காரியங்கள் நடக்கின்றன. முன்னரைவிடவும் மக்கள் நெல் விதைக்கிறார்கள் முன்னரை விடவும் அதிகமானோர் கடற்றொழில் செய்கிறார்கள்.

முல்லைத்தீவு நகரத்தில் மட்டும் ஐநூறுக்கும் அதிகமானவர்கள் தொழில் செய்கிறார்கள். மீனை ஏற்றிக்கொண்டு ஐந்தாறு 'கூலர்' வாகனங்கள் கொழும்புக்குச் செல்கின்றன. வீடுகள் புனரமைக்கப்படுகின்றன. காணிகள் துப்புரவாக்கப்படுகின்றன.

முல்லைத்தீவு நகரிலுள்ள கள்ளப்பாடு, வண்ணாங்குளம், சின்னாத்தாங்காடு, சிலாவத்தை செல்வபுரம், கீர்த்தக்கரை, வெள்ளமேடு என எல்லா இடங்களிலும் சனங்கள் வந்துவிட்டார்கள். வந்திருக்கும் சனங்கள் மீண்டும் தங்களின் வாழ்வைக் கட்டியெழுப்பும் கனவுகளோடு மாய்கிறார்கள்.



அகதிகள் -
போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள்
ஆகியோரின் கதி இப்படித்தானிருக்கும்.

அவர்களுக்குத் துக்கமும் அலைச்சலுமே மிச்சமாக இருக்கும். இதையே பரிசாகப் பெற்றிருக்கிறார்கள் இந்தச் சனங்கள்.

ஒரு பக்கம் கண்ணீர். இன்னொரு பக்கம் அச்சம். சுற்றிவரப் படையினர். படையினர் விதிக்கும் நடைமுறைகள்; கட்டுப்பாடுகள். இப்படியான சூழலுக்குள்தான் வாழ்க்கை.

இதற்குள் புல்மோட்டையிலிருந்து வந்து சங்கு குளிக்கிறார்கள் சிங்கள மீனவர்கள். ஆகையால் புல்மோட்டை - முல்லைத்தீவு என்றும் இனிமேல் பேருந்துகள் ஓடக்கூடும்.

சங்குகுளிக்க வந்திருக்கும் மீனவர்கள் இப்போது முல்லைத்தீவில் சின்னாத்தங்காட்டுப்

உருவாக்கப்படவில்லை. பழைய சங்கத்தை இயக்கமுடியாது என்று படைத்தரப்புச் சொல்லியிருக்கிறது. புதிய சங்கங்களுக்கும் இப்போது அவசியம் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது.

சங்கம் இருந்தால் அதற்கென்றொரு பலம் இருக்கும். இல்லையென்றால் ஒவ்வொருவரும் தனி ஆட்களே! தனி ஆட்களால் எதுவும் செய்யமுடியாது. தனிநபர்களின் குரலையோ கோரிக்கையையோ யாரும் பெரிதாகப் பார்க்கமாட்டார்கள். எனவே, இந்த நிலைமையைப் பேணிக்கொண்டு, மெல்ல மெல்ல சங்கு குளிப்பதாக சில சிங்கள மீனவர்கள் வந்து இறங்கியிருக்கிறார்கள். இவர்கள் காலப்போக்கில் மீன்பிடியில் ஈடுபடுவார்கள். பிறகு தங்களுக்குத் தேவையான காணிகளை வாங்குவார்கள். வீடு கட்டுவார்கள், கடையை நடத்துவார்கள். தொழிலில் பங்கு கேட்பார்கள், அப்படியே மெல்ல மெல்ல இன்னொரு திருகோணமலையைப் போல - இன்னொரு அம்பாறையைப் போல முல்லைத்தீவும் மாறிவிடும்.

ஆனால், இந்த நிலைமையைப் பற்றி எவரும் கவனம் கொண்டதாகத் தெரியவில்லை. சிங்கள மீனவர்கள் வந்து சங்குகுளிப்பதை இனவாதக் கண்ணோட்டத்தில் இங்கே பார்க்கவும் அணுகவும் இல்லை.

பதிலாக, வட்டுவாகல், முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், வலைஞர்மடம், புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் உள்ள சனங்கள் இன்னும் தங்கள் சொந்த இடங்களுக்குப் போகவில்லை. புல்மோட்டையிலிருந்து சிங்கள மீனவர்கள் முல்லைத்தீவுக்கு வந்து சங்கு குளிக்கிறார்கள் என்றால் யார்தான் கொதிக்கமாட்டார்கள்?

ஜோசவ் தயாளன்

முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், பொக்கணை, தேவிபுரம் போன்ற இடங்களில் கைவிடப்பட்ட பொருட்களைக்கூட மக்களால் எடுக்கமுடியவில்லை. இன்னும் அந்த இடங்களுக்குச் மக்கள் செல்ல அனுமதியில்லை. இந்தப் பகுதிகளில்தான் வன்னியிலிருந்த அனைத்து வாகனங்களும் கைவிடப்பட்டிருந்தன. வாகனங்கள் மட்டுமல்ல, ஏராளம் சொத்துகளும் இங்கே மக்களால் கைவிடப்பட்டிருந்தன.

வலைஞர்மடம், மாத்தளன், பொக்கணை, இரட்டை வாய்க்கால், முள்ளிவாய்க்கால் கடற்கரையில் இருந்து முன்னர் ஆயிரக்கணக்கான படகுகள் மீன்பிடிக்கச் சென்றன. இப்போது மக்களின் நடமாட்டமே இந்தப் பகுதிகளில் இல்லை. சாலையிலிருந்து வட்டுவாகல் வரையுமான பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயமாகவே மாற்றப்பட்டுள்ளது. அதனால், சாத்தியமில்லை.

சிலவேளையில் இந்தப் பகுதியில் சிங்கள மீனவர்கள் வந்து தொழில் செய்ய அனுமதிக்கப்படவும் கூடும். சின்னத்தங்காட்டுப்பகுதியில் வந்து, வாடியமைத்து சங்குகுளிக்கும் மீனவர்கள் 'சிலிண்டருடன்' சாலைக்கும் பேய்ப்பாறைப் பிட்டிக்கும் போகக்கூடும். அங்கே தொழில் செய்யவும் கூடும்.

தெற்கிலிருந்து மீனவர்கள் வந்து தொழில் செய்வதை எவ்வாறு தடுக்கமுடியும்? அவர்களும் இந்நாட்டின் குடிமக்கள்தானே! என்று யாரும் கேட்கலாம். அகன்ற இலங்கையில் எல்லோருக்கும் சம உரிமை உண்டென்றால் அது மகிழ்ச்சிக்குரியதே! ஆனால், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் ஊர்களிலே குடியேற முடியாமலும், கைவிட்டுச் சென்ற பொருட்களைப் பெறமுடியாமல் இருப்பதும், தங்கள் கடற்கரையிலிருந்து தொழில் செய்ய அனுமதி மறுக்கப்பட்டிருப்பதும் அகன்ற இலங்கையின் சம உரிமையில் இடிக்கிறதல்லவா!

இதுதான் பிரச்சினை. வட்டுவாகல் ஆற்றில் தூண்டில் போடுவதற்கும் வலை வீசுவதற்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இடமில்லை. அப்படி இடமிருந்திருந்தால், வட்டுவாகல் சூள் விளக்கு வெளிச்சத்தில் வலை வீசுவார்கள் முல்லைத்தீவு மீனவர்கள். தூண்டில் போடுவார்கள் முள்ளிவாய்க்கால் ஆட்கள்; பறியோடு நிற்பார்கள் வட்டுவாகல் மக்கள்.

ஆனால், இதைப்பற்றியெல்லாம் வெளியே காட்டாமல் கொழும்புக்கும் - கண்டிக்கும் - யாழ்ப்பாணத்துக்குமாக பேருந்துகள் ஓடுகின்றன.

உயர் அதிகாரிகள், தொண்டு நிறுவனப் பணியாளர்கள், அரசியல் தலைவர்கள் எல்லோரும் இருக்கின்றனர். அதாவது, இதைப் பற்றியெல்லாம் தெரிந்துகொண்டும், வெளியே பேசாமல் மௌன அங்கீகாரத்துடன் இவர்கள் எல்லோரும் இருக்கின்றனர்.

இன்னும் இரண்டாண்டுகளில் முல்லைத்தீவு நகரம் பழைய நிலைமைக்கும் அப்பால், புதிய வளர்ச்சியை எட்டிவிடும் என்று சொல்கிறார்கள் அல்லவா! அந்த வளர்ச்சியென்பது, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெற்றி பெறுவதற்குக் கடுமையாகப் போட்டியிட வேண்டும் என்பதாக இருக்குமோ? ★

# பிஞ்சுக் குழந்தையை பார்க்க துடிக்கும் டலஸ்

2008 ஆம் ஆண்டில் அதியுயர் மின்சாரத்தால் தாக்கப்பட்டு தீவிர எரிகாயங்களுக்குள்ளான 25 வயதுடைய டலஸ் வீன்ஸ் தனது பூரண முகமாற்று அறுவைச் சிகிச்சையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட இந்த கோர விபத்தில் டலஸின் முகம் முற்றாகவே எரிந்து போனது. கண் பார்வையையும் இழந்துவிட்டார். கிட்டத்தட்ட முழுச் சதையையும் இழந்துவிட்ட அவரது மண்டை ஓட்டுக்கு அவரது முதுகிலிருந்தும் தொடைகளில் இருந்தும் சதையை வெட்டி வைத்தியர்கள் ஒட்டியபோதும் அவருக்கு இன்னும் மூக்கு, உதடுகள், கண் புருவங்கள் அமையவில்லை. வேற்றுக் கிரக மனிதன் போல அல்லது விசித்திர ஜந்து போல டலஸ் காட்சியளிக்கிறார்.



''எனது கண்கள், மூக்கு, உதடுகள், கண்புருவம், வாசனை உணர்ச்சி அனைத்தையும் இழந்தேன். முகத்தில் ஆங்காங்கே எனது மற்ற அவயங்களில் இருந்து பெறப்பட்ட சதை ஒட்டப்பட்டுள்ளதாக மற்றவர்கள் கூறி நான் அறிந்து கொண்டேன். எனது முகத்தில் எவ்வித உணர்ச்சியும் கிடையாது. எல்லாவற்றுக்கும் மேலாக என்னைக் கண்ட போதெல்லாம் கட்டிப்பிடித்து என் முகத்தில் முத்தமிடும் எனது மூன்று வயதுக் குழந்தையின் அன்பை என் முகம் மீண்டும் உணர வேண்டுமென்பதே எனது கனவு'' என்கிறார் டலஸ்.

இதுவரை கிட்டத்தட்ட இரண்டு டசின் அறுவைச் சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள டலஸ் வீன்ஸ் தற்போது முழு முகமாற்றுச் சிகிச்சைக்கு தகுதி பெற்றுள்ளதுடன் அமெரிக்காவில் இத்தகைய சிகிச்சையைப் பெறவுள்ள மூன்றாவது நபராகவும் விளங்கப்போகிறார்.

அமெரிக்காவில் அவயமாற்று மருத்துவமனைகளான பிரிகாம் மற்றும் பொஸ்டனில் உள்ள பெண்கள் மருத்துவமனை ஆகிய இரண்டிலும் கிட்டத்தட்ட இரண்டு டசின் அடிப்படை உடல், உள சிகிச்சைகளின் பின்னரே டலஸ் முழு முகமாற்று சிகிச்சைக்கு இம்மாதம் தகுதி பெற்றார். அதிர்ஷ்டவசமாக டலஸின் தந்தை பெற்றிருந்த காப்புறுதியின் மூலமாக இந்த அறுவைச் சிகிச்சைகளுக்கான செலவினங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

டலஸின் அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான அவயங்களை தியாகம் செய்யக்கூடிய கொடையாளி ஒருவர் கிடைப்பதற்கு டலஸ் மாதக்கணக்கில் காத்திருக்க வேண்டி வரலாம் என அவரது வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

''பாரியதொரு சிகிச்சைக்கு நான்



உட்படுத்தப்படப்போவதை நினைக்கும்போது எனக்கு சற்று குழப்ப நிலை அவ்வப்போது ஏற்படுவதை தவிர்க்க முடியவில்லை. அனைத்தும் நடந்தேறிய பின்பு மீண்டும் நான் இயல்பு வாழ்க்கைக்கு வருவேனா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அப்படியொரு நிலைமை ஏற்பட்டால் அந்தக் குதூகலத்தை வர்ணிக்க வார்த்தைகள் கிடையாது'' என டலஸ் வீன்ஸ் தெரிவித்துள்ளார். இரண்டு வருடங்களுக்கு முன்பு தனக்கேற்பட்ட இந்த விபத்து பற்றிய ஞாபகம் டலஸிடம் இல்லை. ஒப்பந்த அடிப்படையில் அவரது சகோதரனுடனும், மாமனாருடனும் சேர்ந்து கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றுக்கு பெயிண்ட் பூசிக்கொண்டிருந்தார். பாரமுயர்த்தி ஒன்றின் மூலம் தரையிலிருந்து உயர்த்தப்பட்டபோது உயரத்திலிருந்த அதியுயர் மின்கம்பியில் சிக்கி வீசி எறியப்பட்டார்.

''நான் மின்னுயர்த்தியின் கட்டுப்பாட்டை இழந்து நேரடியாக மின்கம்பியில் சிக்கியதாக கூறுகிறார்கள். ஆனால், அதுபற்றிய ஞாபகம் எனக்குக் கொஞ்சம் கூடக்கிடையாது'' என டலஸ் கூறுகிறார்.

விபத்து நடந்து மூன்று மாதங்களாக இவர் கோமா நிலையிலேயே இருந்தார். அத்துடன் பல்வேறு சத்திர சிகிச்சைகளுக்கு உட்டுத்தப்பட்ட நிலையில் ஆறு மாதங்கள் 'பார்க் லேண்ட்' ஞாபகார்த்த மருத்துவமனையில் தங்கியிருந்தார். ஒரு காலத்தில் அவரது கண்கள் மற்றும் மூக்கு இருந்த இடத்தில் ஒட்டப்பட்ட சதைகள் இப்போது ஓரளவு உள்ளன. அத்துடன் ஊன்று கோல் ஒன்றின் உதவியுடன் தட்டுத்தடுமாறி நடக்கவும் பழகிக் கொண்டுள்ளார். உதடுகளும் பற்களும் முற்றாக இல்லாத நிலையிலும் அவர் உறுதியான பிசகற்ற குரலில் பேசுகிறார். அவரது குரலை மற்றவர்கள் தெளிவாக விளங்கிக்கொள்கின்றனர்.

''ஒவ்வொரு நாளையும் சவால் நிறைந்த நாளாகவே நான் காண்கிறேன். நம்பிக்கையும் குதூகலமும் நிறைந்த நாளொன்றை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். நான் முன்னரைவிட முன்னேற்றமான நிலையில் இப்போது இருப்பதை என்னால் உணர முடிகிறது.'' என்றார் டலஸ் வீன்ஸ். அவர் தற்போது போர்ட் வோர்த் நகரில் தனது தாத்தா, பாட்டியுடன் வாழ்ந்து வருகிறார்.

டலஸ் வீன்ஸ் விபத்துக்குள்ளானபோது அவருக்கு 'காப்புறுதிக் கவசம்' இருக்கவில்லை. பார்க்லண்ட் மருத்துவமனையில் அவரது ஆரம்ப மருத்துவச் செலவுகளை மெடிக் எய்ட் ஏற்றுக் கொண்டது. எனினும், அவரிடமிருந்து கிடைக்கும் வருமானத்தை விட செலவுகள் மீறியதால் அரசாங்கத்தின் ஏழைகளுக்கான சுகாதார நலன் திட்டத்திலிருந்து அவர் விலக்கப்பட்டார். எனினும் டலஸ் வீன்ஸின் தந்தை பெற்றிருந்த காப்புறுதி ஓரளவுக்குக் கை கொடுத்தது. இறுதி சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அவருக்கு கொடுக்க வேண்டிய எதிர்ப்பு மருந்துகளுக்கு மாதாந்தம் 1,300 தொடக்கம் 2,000 அமெரிக்க டொலர்கள் தேவைப்படும். அந்நாட்டின் சுகாதார சட்டதிட்டங்களின்படி தந்தை ஒருவரின் காப்புறுதி மூலம் அவரது பிள்ளைகளுக்கு 26 வயதை எட்டும் வரை அனர்த்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். அதிர்ஷ்டவசமாக விபத்துக்குள்ளானபோது டலஸ் வீன்ஸ் அந்த வயதெல்லைக்குள் இருந்தபடியால் பிழைத்துக் கொண்டார். 'இவ்வருடம் மே மாதம் அவர் 26 வயதை அடைகிறார். அங்கவீனரான இவருக்கு ஜூன் மாதம் முதல் சுகாதார நலனுக்கான அரசக் கொடுப்பனவுகள் கிடைக்கும்.

பாதுகாப்பு அமைச்சு தனது இறுதி அறுவைச் சிகிச்சைக்கு நிதியுதவி வழங்குமென டலஸ் கூறினார். இந்த சிகிச்சைக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் பெறப்படும் பெறுபேறுகளைக் கொண்டு அந்நாட்டு வீரர்களின் யுத்தங்களின்போது பாரதூரமாக சிதைவடையும் முகங்களைத் திருத்தியமைக்கும் பரீட்சார்த்த எண்ணம் பாதுகாப்பு அமைச்சுக்கு உள்ளதாகவும் தெரியவருகின்றது.

பார்க்லேண்ட் சுகாதார மற்றும் மருத்துவமனைக் கட்டமைப்பின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சைப் பிரிவின் தலைமை அதிகாரியான டாக்டர் ஜெப்ரி ஜேனிஸ் முதன்முதல் டலஸ் வீன்ஸை சந்தித்தபோது நோயாளியின் தலை முற்றாக எரிந்துபோன மண்டையோடாகவே இருந்ததென தெரிவித்தார். பிளாஸ்டிக் சிகிச்சை மூலம் டலஸின் முகத்தை மறுசீரமைக்கலாமென நம்பிக்கை தெரிவித்தவரும் டாக்டர் ஜெப்ரியே. இதுவரை நடந்த இரண்டு டசின் ஆரம்ப அறுவைச் சிகிச்சைகளையும் தாண்டி டலஸ் மருத்துவமனையை விட்டு வெளியேறியது உண்மையில் ஒரு அதிசயமே என சிலாகித்துள்ளார்.

இதுவரை உலகெங்கும் ஒரு டசினுக்கு மேற்பட்ட முகமாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாவது சத்திரசிகிச்சை, முகத்தின் ஒரு பகுதியில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. 2006இல் பிரான்ஸில் இந்தச் சிகிச்சை இடம்பெற்றது. தற்போது முழு முகமாற்றுச் சிகிச்சைக்காகக் காத்திருக்கும் ஒரே நோயாளி டலஸ் வீன்ஸ் மட்டுமே என பிரிகாம் மற்றும் பெண்கள் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். அமெரிக்காவில் உள்ள கிளவர் லேண்ட் கிளினிக் மருத்துவமனையிலேயே டலஸ் வீன்ஸின் பூரண சிகிச்சை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

**எனது முகம் முற்றாக மாறிப்போன பின்பும் என்னை தனது தந்தை என இன்னும் அடையாளம் காணும் அந்த பிஞ்சுக் குழந்தையை நான் மீண்டும் கண்குளிரப் பார்க்க வேண்டும். குறைந்த பட்சம் அவளது அன்பு முத்தத்தையாவது என் முகம் உணர வேண்டும் என ஆவலுடன் காத்திருக்கிறேன் என்று உணர்ச்சி ததும்பிய குரலில் டலஸ் தெரிவித்தபோது அவரது முகத்தில் எவ்வித சலனமும் தென்படாதது வேதனைக்குரிய விடயம்.**

டலஸ் வீன்ஸுக்கு தேவையான அங்கங்களை வழங்க முன்வரும் கொடையாளரின் இரத்தம் அவருக்கு ஒத்துப்போக வேண்டும். அவ்வாறே அவரின் சருமத்தின் நிறமும் அதன் உட்கட்டமைப்பும் சரியாகப் பொருந்த வேண்டும் எப் பிரிகாம் மருத்துவமனையின் பேச்சாளர் டாக்டர் போடன் பொமாஹக் தெரிவித்தார். டலஸ் வீன்ஸ் மீது மேற்கொள்ளப்படவுள்ள பூரண முகமாற்றுச் சிகிச்சையை மேற்கொள்ளவுள்ள மூன்று டசினுக்கும் அதிகமான மருத்துவ வல்லுநர்களைக்கொண்ட குழுவில் டாக்டர் போடன் பொமாஹக் அடங்குகிறார். எவ்வாறாயினும் பூரண சிகிச்சையின் பின்னர் முகத்தில் மாற்றீடு செய்யப்பட்ட அவயங்களின் சரியான இயக்கங்களும், உணர்வுகளும் மீண்டு வர நீண்டகாலம் எடுக்கும் என்பதை டலஸ் வீன்ஸ் தெரிந்துகொண்டுள்ளார். தனது மூன்று வயது மகள் சிதைவடைந்துள்ள தனது முகத்தைப் பார்த்து



முகமூடிக்காரன் என செல்லமாக அழைப்பதை டலஸ் வீன்ஸ் நினைவு கூருகிறார். ''அந்தப் பிஞ்சு மனம் இது வெறும் முகமூடியே என கணித்து வைத்துள்ளதை உண்மையென நிரூபிக்க முயல்கிறேன். இறைவன் அருளால் நான் பழைய முகத்தைப் பெறுவேன். எனது பிஞ்சுக் குழந்தையின் அன்பு முத்தத்தை ஒருநாள் என் கன்னம் உணரத்தான் போகிறது'' என்று நம்பிக்கையுடன் அவர் தெரிவிக்கிறார்.

எல்லையற்ற பிரபஞ்சத்தின் ஒரு சின்னஞ்சிறிய துகள் மனிதன். விபத்தொன்றில் இழந்த ஒரு முகத்தை மறுசீரமைக்க கோடிக்கணக்கான பணச்செலவில் டசின் கணக்கான மருத்துவர்கள் மாதக் கணக்கில் உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், சத்தியின்றி- இரத்தமின்றி ஒரு குழந்தையை பத்தே மாதங்களில் உருவாக்கி நூறாண்டுகள் கூட வாழவைத்துக் கொண்டிருக்கும் பிரபஞ்சத்தின் கண்ணுக்குத் தெரியாத சக்தியை ஒரு கணம் நினைத்துப் பார்க்கவும் விஞ்ஞான உலகம் கடமைப்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத- மறைக்க முடியாத உண்மை. *

சுடர் மணி

# நிலம் திரும்பிய இந்துபுரம் மக்கள்



**தீபச்செல்வன்**

சாந்தபுரம் கிராமம் குறித்து எழுதியபொழுது இந்துபுரம் என்ற கிராமம் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். அதிகாரத்தின் கனவு நிலங்களாக குறி வைக்கப்பட்ட நிலங்களின் தொகுதியில் ஒன்றுதான் இந்துபுரம் கிராமம். கிளிநொச்சி நகரத்திலிருந்து முறிகண்டிக்குச் செல்லும் ஏ-9 பாதையில் கிழக்குப் பக்கமாக கனகாம்பிகைக்குளத்தின் மேற் புறத்தில் இருக்கிறது இந்தக் கிராமம். முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இந்துபுரம் கிராமத்தை மக்களிடம் மீள வழங்க படையினர் தொடர்ந்து தயக்கம் காட்டி வந்திருக்கின்றனர். இராணுவக் குடியிருப்புக்களையும் குடியேற்றங்களையும் ஏற்படுத்த இந்தக் காணிகள் எடுக்கப்பட உள்ளன என்ற தகவல் கசிந்த பொழுதிலிருந்து இந்த காணிகளுக்காக மக்களின் குரல்கள் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. தடுப்பு முகாமிலிருந்து மக்களின் நிலத்துக்கான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. இன்று விடுகிறோம் நாளை விடுகிறோம் என்று பதினெட்டு மாதங்களாக யுத்தக் குற்ற தண்டனைகளை இந்த மக்கள் அனுபவித்திருக்கிறார்கள். கடந்த 18ஆம் திகதி தடுப்பு முகாமிலிருந்து அழைத்து வரப்பட்ட மக்கள் முல்லைத்தீவு ஒலுமடு பாடசாலையில் ஒரு நாள் தங்க வைக்கப்பட்ட பின்னர் 19ஆம் திகதி தங்கள் நிலத்துக்கு இந்துபுரத்துக்கு அனுப்பப்பட்டார்கள்.

சில தடிகளில் இழுத்துக்கட்டப்பட்ட தறப்பாள் கூடாரம் ஒன்றில் குடியேறியிருக்கிற ஒரு குடும்பத்தை முதன் முதலில் நான் சந்தித்தேன். மைக்கல் கொலின்ஸ் என்ற அந்த குடும்பத்தை சேர்ந்தவர் காணியை துப்புரவாக்கி கூடாரத்தை அமைத்து வாழத் தொடங்கும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். நான் ஆனந்தகுமாரசாமி முகாமிலிருந்து கொண்டு வரப்பட்டேன் என்கிற முதல் வார்த்தைகளுடன் ஆரம்பித்து எத்தனை கடிதங்களை எழுதியிருப்போம் என்று பேசிக் கொண்டிருந்தார். முல்லைத்திவு அரச அதிபர் அலுவலகத்துக்கும் ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் அலுவலகத்திற்கும் நிறைய கடிதங்களை எழுதிக் கொண்டிருந்தோம் என்றார் கொலின்ஸ். இந்துபுரத்தில் அவர்கள் முன்பு வாழ்ந்த மண்வீடு உடைந்து மண் திட்டுக்களாக கிடக்கிறது. அவற்றில் பற்றைகள் முளைத்து காடு மண்டியிருக்கின்றது என்றார் கொலின்ஸ்.


ஏ-9 பாதைக்கு அருகில்தான் கொலின்ஸின் காணி இருக்கிறது. ஏ-9 வீதியில் இருக்கிற இந்துபுரத்தின் தென்னிந்திய திருச்சபை ஆலயத்தை அண்டி சில கடைகள் உள்ளன. தையலகங்கள், சிறிய பலசரக்கு கடைகள், தேநீரகம் என்பன அந்த இடத்தில் இருக்கின்றன. கடந்த காலத்தில் இருந்த மகிழ்ச்சியும் கலகலப்பும் இன்னும் திரும்பவில்லை. ஆனால் அந்த தெருவில் ஒரு வருடத்துக்கு முன்பாகவே கடைகள் மீள போடப்பட்டிருந்தன. மேற்குப்புறமாக மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டதுடன் சில கடைகளும் திறக்க அனுமதிக்கப்பட்டன. கிழக்குப் பக்கமாக அமைந்திருந்த திருச்சபையின் மண்டபத்தின் உள்ளே படையினர் வலைப்பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். திருச்சபை மண்டபமோ கடவுளையும் மக்களையும் இழந்து கூரையில்லாமல் பாழடைந்து போயிருக்கிறது. புதர்கள் மண்டிய சூழலில் பற்றைகளும் கொடிகளும் படர்ந்திருக்கின்றன.

அந்த திருச்சபையின் வளாகத்தில் பெண்கள் விடுதி ஒன்றும், சிறுவர் பாடசாலை ஒன்றும் அமைந்திருந்தன. இப்பொழுது அழிக்கப்பட்டு இயங்கா நிலையில் இருக்கின்றன. இந்துபுரம் பகுதியை சேர்ந்த சிறுவர்கள் மட்டுமன்றி முறிகண்டி, பாரதிபுரம், சாந்தபுரம் என்று கிளிநொச்சியின் பல பிரதேசங்களை சேர்ந்த சிறுவர்கள் அந்த முன்பள்ளியில் படித்து வந்திருக்கிறார்கள். வறிய மக்கள் வாழும் அந்த பகுதிக்கு ஏற்ப இலவசமாக கல்விக்கான வசதிகளுடன் சூழலுடன் அந்த முன்பள்ளி இயங்கி வந்திருக்கிறது. நாள் முழுவதும் கல்வி அவர்களுக்கான உணவு போன்ற வசதிகளை வழங்கி பின்தங்கிய பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தும் முக்கிய பணியை அந்த முன்பள்ளி வகித்து வந்தது. அருகில் இருக்கிற பெண்கள் விடுதியும் முக்கிய பங்கை வகித்திருக்கிறது. ஆதரவற்ற வறுமைப்பட்ட பல பெண் பிள்ளைகள் அங்கிருந்து கல்வி கற்றிருக்கிறார்கள். உயர்தரம் படிக்கும் பல மாணவிகளுக்கு தஞ்சமளித்து கல்வியை தொடர உதவிய அந்த விடுதியும் இப்பொழுது சிதைந்திருக்கிறது. அதனால் அந்தத் தெரு கலகலப்பு இல்லாமல் சோக முற்று குழந்தைகள் ஒன்றுகூடாத தெருவாகிக் கிடக்கிறது.

கூரையில்லாத திருச்சபையின் மண்டபத்தைபோல கூரையில்லா பேருந்து தரிப்பிடத்தில் நின்று மக்கள் பேருந்துகளில் ஏறிக் கொண்டிருந்தார்கள். முன்னால் இந்துபுரத்துக்குச் செல்லும் உட்பாதையோ கடுமையான பாவனையில் உள்ளதைப் போலிருக்கிறது. அந்த வீதியை தவிர ஏனைய எல்லா வீதிகளும் பாழடைந்து பற்றை மண்டிக்கிடக்கின்றன. எல்லா மக்களும் மீண்டும் வாழ்க்கையை தொடங்க கூடாரங்களை அமைத்து தங்கள் காணிகளை துப்புரவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

அனேகமாக மண்வீடுகளைத்தான் அமைத்து மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அந்த மண்கிராமம் இன்று முழுமையாக கரைந்து விட்டது. எங்களுக்கு பன்னிரண்டு தகரங்களையும் அதற்கான ரீப்பைகளையும் கொடுத்திருக்கிறார்கள். மேலதிகமாக மரந்தடிகள் எதுவும் இல்லை. இப்பொழுது மரந்தடிகளை வாங்குவது பெரிய பிரச்சினை என்றும் கடும் விலையில் விற்பனையாகின்றன என்றும் பல இடங்களில் மக்கள் சொல்லக் கேட்டிருந்தேன். கரைந்து அழிந்து தரையாகி விட்ட வீடுகளில் பொருத்தப்பட்ட கூடாரங்களில் இருக்கிற அந்த மக்களிடம் நிலம் திரும்பி விட்ட புன்னகைதான் மிகவும் பெரிய பெறுமதியாக ஒளிர்கிறது.

அந்தோனி மைக்கல் செல்வராணி குடும்பத்தினர் மீள வாழ்வை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். தண்ணீர் இறைக்கும் இயந்திரமும் இல்லை சைக்கிள்களும் இல்லை எல்லாம் தொலைந்து போய்விட்டன என்று வெறுத்துக் கொள்ளும் அந்தோனி மைக்கல் 1975 இல் இந்துபுரத்தில் குடியேறிய ஞாபகங்களை மீட்டார். போஞ்சி, கத்தரி, மிளகாய் போன்ற பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டதுடன் மேசன் வேலைகளுக்கும் போய் வருவேன் என்றார் அந்தோனி மைக்கல். வீட்டின் பாதியை இடித்து கொண்டு போய் விட்டார்கள்



என்று மிகவும் சோகத்துடன் சொல்லியபடி வீட்டின் பின்பக்கத்தை காட்டினார். வீட்டின் பின்பக்கத்தில் இருந்த இரண்டு அறைகளும் முற்றாக அழித்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. கற்களுக்காக எங்கள் வீடுகளை அழிக்கிறார்கள். யாரிடம் போய் சொல்லுவது? என்று அவர் கேள்வி எழுப்பினார். 97இல் நடந்த சத்ஜெ யுத்தத்தின் பொழுது என் கிணறு இடிந்து அழிந்து போனது. இம்முறை வீடு போய் விட்டது என்றார் ஏமாற்றத்துடன்.

வீட்டை முழுமையாக இடித்து கற்களாக்கி வெறுந்தரையுடன் இருக்கிறது யேசுதாஸின் வீடு. எங்கள் எல்லோருக்குமே அமெரிக்கன்மிசன் இந்த வீடுகளை கட்டித்தந்தது. நாங்கள் உழைத்த பணத்தையும் போட்டே இந்த வீட்டைக் கட்டினோம். போகும் பொழுது இந்த வீட்டை அப்படியே விட்டுத்தான் சென்றோம். இன்று திரும்பி வந்து பார்த்தால் மனம் எரிகிறது. தரையுடன் அடித்து கற்களாக்கிக் கொண்டு போயிருக்கிறார்கள். இவற்றை இராணுவமே செய்தது என்று யேசுதாசன் சொல்கிறார். அந்த வீதியால் செல்லும் பொழுது படையினர் கற்களையும் தென்னோலைகளையும் களவாடி வருவதை நானும் பலமுறை பார்த்திருக்கிறேன். மக்களின் சொத்துக்களை சூறையாடி அழித்துள்ளார்கள். இன்று ஒரு வெறும் கிராமமாக கிடக்கிறது இந்துபுரம்.

350குடும்பங்கள் வாழ்ந்து வந்த இந்தக் கிராமத்தின் கிழக்கில் 150 குடும்பங்கள் வரை குறித்த மீள் குடியேற்றத்தின் பொழுது மீளக் குடியேறியிருக்கிறார்கள். வவுனியா தடுப்புமுகாம்களிலிருந்து இந்த மக்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். முகாம் வாழ்க்கையை நினைத்துப் பார்த்து இப்படியா வாழ்ந்தோம் என்று நினைவு கொள்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத தாய் ஒருவர். இன்றைக்கு நாளைக்கு என்று எத்தனை நாட்கள் கடத்தினார்கள். நாங்களும் விடுவதாயில்லை. எங்கள் காணிக்கு போக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து தவம் கிடப்பதைப்போல கிடந்தோம் என்றார் அந்தத் தாய். சில மக்கள் பொறுக்கவும் தாங்கவும் முடியாமல் தடுப்பு முகாமிலிருந்து பதிவு செய்து வெளியேறினார்கள் என்றார் அந்தத் தாய்.

ஒரு ரொபின் பம், ஒரு சிக்மா பம், இரண்டு மருந்தடிக்கிற பம் ஒன்றும் இல்லை. எல்லாம் போச்சுது என்று சொல்லிக் கொண்டு காணியை துப்புரவாக்கிக் கொண்டிருந்தார் ஒரு முதியவர். அவரது காணிநிலம் ஒரு விவசாயக் காணி என்பதற்கான அடையாளங்களை இன்னும் இழந்து விடமால் இருக்கிறது. காணியோ இப்பொழுது பாழடைந்து கிடக்கிறது. மிகவும் வயதான அவர் தன் இயலாத காலத்தில் காணியை துப்புரவாக்கிக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணம் மூளாயைச் சேர்ந்த அந்த முதியவர் 1960களில் இந்தப் பகுதிக்கு வந்ததாக குறிப்பிட்டார். காணியை முழுமையாக எப்படி துப்புரவாக்கப் போகிறன் என்று கேட்டுக் கொண்டார். அவரது மனைவி பத்தினி முள்ளிவாய்க்காலில் ஷெல் பட்டு இறந்து விட்டார். தனிமரமாக ஊர் திரும்பியிருப்பதாக சொன்னார்.

ஊரின் அடுத்த பகுதிக்கு செல்லும் வழிகள் முழுமையாக பற்றை வளர்ந்து மூடுண்டு இருக்கிறது. உண்ணிப் பற்றைகளும் புற்களும் சருகுகளும் என்று நீண்டகாலமாக மனித நடமாட்டங்கள் நடக்காத பாதைகளாகி மூடுண்டு விட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஏன் பெண்ணென்று பிறந்தாயோ?

சிறுகதை

''ஹாய் சிலம்பு..! குட்மோர்னிங். ஹேய்! இன்னுமா தூக்கம்? இன்னிக்கு சன்டே .என்னது இவ்வளவு நேரமா?'' என்று தன் தோழி சிலம்புவிடம் சொன்னாள் சாமந்தி. இவளது சத்தத்தினால் தூக்கம் கலைந்து போக பதிலுக்கு ''மோர்னிங் ''என்றபடி சோம்பல் முறித்தாள் சிலம்பு.

சிலம்புவும் சாமந்தியும் இணைபிரியாத தோழிகள். இந்த மாணவர் விடுதிக்கு வந்த நாள் முதல், இருவரும் ஈருடல் ஓருயிர் என்றே சொல்லலாம். இந்த விடுதியில் ஆண்கள் பெண்கள் உள்ளடங்கலாக மொத்தம் எழுநூற்றைம்பது பேர் வரும். அன்று காலை சாமந்தி சென்றதும் சிம்பு குளித்து முடித்து விட்டு வர, போனும் சினுங்கியது. ஹலோ சொன்னாள். ''ஹாய் சிலம்பு! உமா நிற்கிறாங்களா?'' இது ஓர் ஆண் குரல். ''இல்லையே. திஸ் இஸ் றோங் நம்பர்..'' என சிலம்பு கூற, ''நோ..நோ. இது றைற் நம்பர்.'' என்று அவனும் பதிலுக்கு வம்பளந்தான். சிலம்புவுக்கு கோபம் தலைக்கேற இணைப்பைத் துண்டித்தாள்.அடுத்தடுத்து அழைப்புக்கள் வர,போனை ஓவ் செய்து விட்டாள்.

* * *

நடிகர் சிலம்பரசனின் பரம ரசிகையான இவளுக்கு அனைவராலும் சூட்டப் பட்ட பெயர் தான் சிலம்பு. சிலம்பு வீட்டில் மூத்தவள். சிறு வயதிலேயே சுட்டியான இவள் மீது அவள் அத்தைப் ஃபையன் சிவாவுக்கு கொள்ளைப் பிரியம். அவளும் அவனது காதலுக்குசம்மதம் தெரிவித்துவிட்டாள். அவள் கல்விக் கட்டடத்தை கட்டியெழுப்ப சிவாவும் தூணாய் நின்றான். கொழும்பு தனியார் கம்பனி ஒன்றில் பணி புரியும் சிவா, அவள் படிக்கும் நேரங்களில் போன் பண்ணி தொல்லை பண்ணவே மாட்டான். அன்று ஞாயிறு என்றபடியினால் அவளே அவனுக்கு போன் பண்ணினாள். ''சிவா எப்பிடி இருக்கிறீங்க?'' ''...ஹாய்ம்மா..நான் ஓகே. நீ எப்பிடி இருக்கே...நல்லா படிக்கிறியா? அல்லது உன் அத்தான் நினைப்பா? ....''என்றான். கிண்டல்கள். கெஞ்சல்கள் கூடிவர கதைத்து முடித்து விட்டு தன் வேலைகளைக் கவனித்தாள். செங்கதிரோன் தன் தலையணையை மேற்குத் திசை மாற்றி உறக்கத்துக்கான ஆயத்தத்தைச் செய்தான்.

* * *

மறுநாள் காலை கல்லூரிக்குச் செல்வதற்காக சிலம்பு, சாமந்தி உட்பட அனைவரும் பரபரப்புடன் தத்தமது கடமைகளை முடித்து வேகமாக இயங்கினர். இவர்களது வகுப்பிலேயே அதிக சுட்டியான ,கெட்டித் தனமான இளைஞன் தான் மயூரன். அவன் என்றால் சிலம்பு உட்பட எல்லாப் பெண்களுக்கும் பயம் என்றுதான் சொல்ல வேண்டும். மயூரன் இவர்களுக்கு முன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தான். அவனைக் கண்டதும், தோழிகள் இருவரும் தமது சைக்கிளின் வேகத்தைக் குறைத்தனர். அவனருகில் சென்றால் வம்பாச்சே...என்று விலகிக் கொண்டனர். ஆனால், வகுப்பறைக்குச் சென்றால் ..அவன் தான். அவனே தான். இவர்களை நோக்கியவாறு நின்று கொண்டிருந்தான். ''ஹாய் தோழிகளே! இனிமையான வணக்கங்கள்.'' என, கும்பிடு போட்டான். இவர்களுக்கு சிரிப்பும் வந்து விட்டது. இருந்தும், வணக்கம் என்றவாறு சென்றார்கள். இவ்வாறு நாட்கள் செல்லச் செல்ல...சிலம்பு மீதும் அவள் தோழி சாமந்தி மீதும் மயூரனின் பேச்சும் கிண்டல்களும் அதிகரிக்கவே செய்தன.


* * *

நாட்கள் கழிந்து பரீட்சை நாளும் நெருங்கவே, அனைவரது கவனமும் படிப்பிலேயே போனது. பரீட்சை முடிந்து பெறுபேறும் வெளியாகியது. முதன் நிலைப் பெறுபேறுகளுடன் சிலம்புவும், அடுத்து மயூரனும், மூன்றாவதாக சாமந்தியும் சித்தியடைந்திருந்தனர். மயூரன் சிலம்புவுக்கு பாராட்டுப் பாடிவிட்டு புன்னகையோடு சென்று விட்டான்.

விடுதி வந்த சிலம்புவுக்கும் சாமந்திக்கும் மயூரன் பற்றிய பேச்சே! அவனிடம் அவனது அன்புச் சேட்டைகளைத் தவிர, குறை கூற எதுவுமே இல்லை. அன்பான அசுரன் என்று நல்ல அபிப்பிராயப் பட்டனர். இருந்தும், சிலம்புவின் உள்மனமோ, அவனது சேஷ்டைகளுக்கு அஞ்சியது. திடீரென, சிலம்புவின் போன் கூப்பிட்டது. ஹலோ சொன்னாள். அன்றொரு நாள் கதைத்த அதே ஆண்குரல். ஹலோ சொன்னது.

கோபமடைந்த சிலம்பு,'' ப்ளீஸ் நீங்க யாரு? உங்களுக்கு என்ன வேணும்?'' அதட்டினாள்.

எதிர்முனையில் குரல் சாந்தமாக ஒலித்தது. ''சிலம்பு... நான் மருதன் பேசுறேன். நீங்க வேணுமின்னா... என்னை மருதுன்னு கூப்பிடலாம்.'' என்றான்.



''இங்க பாருங்க..இப்ப என்ன பேர் சொன்னீங்க..? ஆ..அ..மருது, மருது! உங்களை எனக்குத் தெரியாது. தெரியாதவங்களோட பேச..எனக்கு இஷ்டம் கிடையாது. இப்போ உங்களுக்கு என்ன வேணும்?'' என, சிலம்பு பொரிந்தாள். ''சிலம்பு நீங்களே என்கிட்ட என்ன வேணும்ணு கேட்டால்...நான் விடுவேனா? சிலம்பு எனக்கு நீங்க வேணும்.உங்க குரலை கேட்டுக் கொண்டே இருக்கணும் போல இருக்கு. சிலம்பு..ஐ லவ் யூ...! ''என்றான். அவளுக்கு தலை சுற்றியது. கோபம் தலைக்கேற கத்தினாள். ''எனக்கு விருப்பமில்ல. தயவு செய்து என்னை டிஸ்டப் பண்ணாதீங்க''.இணைப்பைத் துண்டித்தாள். தொடர்ந்தும் அழைப்புக்கள் வர துண்டித்தவள், தொல்லை தாங்க முடியாமல் ஆன்சர் பண்ணினாள்.

''சிலம்பு கோபப்படாதடா...போனில் வேணாம். நாளை ஸ்கூலுக்கு முன்னால உள்ள பஸ் ஸ்டாண்ட்டுக்கு வாங்க. நிதானமா..நேரில பேசித் தீர்த்திடலாம் ''என்றான். இவள் பதிலளிக்க முன்னமே அவனாக இணைப்பைத் துண்டித்தான்.

மறுநாள் சிலம்புவுக்கு வேலைகளில் கவனம் செல்லவில்லை. நேற்றைய பிரச்சினைக்கு இன்று ஒரு முடிவு கட்ட வேணும். மதியம் எதிரே தெரிந்த பஸ் ஸ்டாண்டை நோக்கி வெறித்தபடி சென்றாள். சற்றுத் தூரத்தில் மயூரன் தெரிவதைக் கண்டுவிட்டு ''இவன் வேறு..''என்று தவிர்க்க முனைய அவனே அருகில் வந்தான்.

'' சிலம்பு.. இப்போ சொல்லு. என்னைத் தெரியுமா? தெரியாதா?... ஹேய்!ஐ லவ் யூடி... நான் தான் உன்னைத் தொல்லைப் படுத்திய மருது.'' என்றான். சிலம்பு என்ன செய்வதென்று தெரியாது பதறினாள். ''மருது... உங்களுக்கு நான் எதைச் சொல்லி புரிய வைப்பேன். நான் என் அத்தைப் பையனை மூணு வருஷமா காதலிக்கிறேன். என்கிட்ட ஒரு வார்த்தை கூடக் கேட்காமல்.. ஏன் இப்பிடிச் செய்தீங்க? ப்ளீஸ் மருது! ப்ளீஸ்..! என்னை மன்னிச்சிடுங்க'' தழுதழுத்தாள். மருதுவின் (மயூரனின்) முகத்திலே ஏகப்பட்ட (ஏ)மாற்றங்கள்.

'' சிலம்பு! உண்மையாகவா? ஏய்! நீ இந்த கல்லூரிக்கு வந்த நாள் முதல் இன்றைக்கு வரை... உன்னை நினைச்சுக் கொண்டே தான் இருந்தேன். நீ இன்னொருத்தனுக்கு மனைவியாகப் போறவளென்று எனக்கு இப்போ தானே தெரிஞ்சுது. பரவாயில்லடா சிலம்பு..நலம் வாழ எந்நாளும் என் வாழ்த்துக்கள்...நீ ஆசைப்பட்டவனோட சந்தோசமாக இருடா..உன் சந்தோசம் தான் என்சந்தோசம்..''என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். அவனது வெள்ளையுள்ளம் இவளை கண்ணீரால் வதைத்தது. அவனின் வார்த்தைகள் அம்பாகி, இவளது இதயப் புறாவைத் தாக்க அது துடிதுடித்தது. அவளைச் சாமந்தி தான் ஆறுதல்படுத்தி அழைத்துச் சென்றாள். சாமந்திக்கே அவனை நினைக்க வியப்பாகவும் மரியாதையாகவும் இருந்தது. அவனதும் அவளதும் நிலையைப் பார்த்து அழுதே விட்டாள்.

அதன் பின்னர், அவன் முன்னைய மயூரனாக இருக்கவில்லை. எதையோ பறிகொடுத்தவன் போல இருந்தான். அவனை நினைக்க சிலம்புவுக்கு உலகமே வெறுத்தது.அன்று ஒரு கடிதத்தை அவன், இவளுக்கு அனுப்பியிருந்தான். கடிதத்தைப் பிரித்தாள்.

**என்றும் என் சிலம்புவுக்கு! விலாசமற்றவன் வரைவது...**

**நீ என்னிடத்தில் எப்போதும் போல நலமோடு. நான் உன்னிடத்தில் நலமா? என்பது சந்தேகமே! உன் அத்தானுடன் கதைத்தாயா? நீ உன் அத்தானுடன் சந்தோசமாயிருடா... ஆனால், நான் உன்னைக் காதலித்துக் கொண்டே இருப்பேன். ஒரு கண்டிஷன். கேட்பியா! நீ கதைப்பதை நான் எப்போதும் கேட்கணும். நீ எங்க போனாலும் என்னோடு ஒரு நிமிஷம் போனில் கதைப்பாயா? அதுவே எனக்கு போதும். பதில் காணும் தவிப்புடன்... மருது.**

கடிதத்தை பார்த்து சிலம்பு தேம்பித் தேம்பி அழுதாள். தோழிகள் ஆறுதல் படுத்தியும் அவள் அழுது கொண்டேயிருந்தாள். எனக்காக தன் காதலையே விட்டுக் கொடுத்தவனுக்கு நான், இதுகூடச் செய்யாமல் விட்டால்....

சிறகடிக்கும் பறவைக்கு, ஒரு சிறகா அல்லது இருசிறகுகளா முக்கியம்? என.. அவனது அன்பை ஒரேடியாக உதறித்தள்ளிவிட முடியாது தவித்தாள்.

வேதனைகளைத் தாங்கியவாறு, மிகக் கஷ்டப் பட்டு இறுதிப் பரீட்சையில் வெற்றியும் கண்டாள் சிலம்பு. கல்லூரியில் அவ்வருடம் ஒன்பது பேருக்கு பல்கலைக் கழகம் செல்வதற்கான அனுமதி கிடைத்திருந்தது. சிலம்புவை முதலில் பாராட்டியவன் மருதுதான். ''சிலம்பு! என் அம்மா அப்பா...உறவுகள் அனைவரும் வன்னிச் சண்டையில சிக்கி... இப்போ வவுனியா அகதிமுகாமில இருக்கிறாங்களாம். நான் அவங்களைப் பார்த்திட்டு வந்து ஜொய்ன்ற் பண்ணிக் கொள்கிறேன். நீ நன்றாகப் படி. ஓகேயா...? நான் வர்றேன்.'' என்றவிட்டு அவன் போவதைப் பார்த்து பெருமிதம் கொண்டாள் சிலம்பு. அன்று சென்றவன் தான், விரும்பி வரவேயில்லை. பல்கலைக் கழகத்திலும் இணையவில்லை. ''உன் குரல் தான்...என் வாழ்வின் வசந்த கீதம்'' எனச் சொன்னவன் , போய் வருடங்கள் கடந்தும் போன் கூட பண்ணவில்லை. சிலம்பு பலவாறு யோசித்தாள். அவன் மனம் மாறி விட்டானோ? மனம் மாறினால் நல்லது. அவன் தன் பிடிவாதத்தை விட்டிருப்பான் என தன்னைத் தானே தேற்றினாள்.


காலச் சக்கரம் விரைவாகச் சுழன்றது. காலதேவன் சிலம்புவைப் பார்த்து நகைத்தான். ''ஹேய்..இது உனக்குரிய காலமல்ல. எனக்கான காலம்..'' அவனின் சூழ்ச்சியால் சிலம்புவின் தம்பி தாயென, அடுத்தடுத்து உயிரிழப்புக்கள். துன்பத்தில் துவண்ட அவளுக்கு, எப்போதும் உறுதுணையாய் இருந்த அத்தைப்பையனின் ஆதரவு, இறுதியில் திருமணத்தில் கொண்டு போய் நிறுத்தியது. அவள் மெல்ல மெல்ல மாற்றமடைந்தாலும், மனது வலி சுமந்து கொண்டுதானிருந்தது. அவன்முறையாக விதைக்காது விசிறியெறிந்த வித்துக்கள்... இதயத்தில் விருட்சமாகி அவளை அசைக்கத்தான் செய்தன. என்றோ ஒருநாள் சிலம்பு, அவனைக் காண வேண்டும். பழைய மருதுவாய் அல்ல. புதுமைத் தோழனாய்...!! *

திருவையாறூர் சிம்பு

# இலங்கை இனப்பிரச்சினையும் இந்திய - சீன மேற்குலக உறவும் சிங்கள இராஜதந்திரமும்

அருள் மனோகரன்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாசப்பிணைப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. பாதுகாப்பு உடன்படிக்கைகள், மறைமுகமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இலங்கைப் படைகளை நவீனப்படுத்துவதில் இந்தியா தீவிர கரிசனை எடுத்துள்ளது. இதன்படி இலங்கைப் படை அதிகாரிகளுக்கான பயிற்சிகள் தொடக்கம் பல்வேறு உதவிகளைச் செய்வதற்கு இந்தியா முன்வந்துள்ளது. இது ஒரு கட்டம்.



இன்னொரு கட்ட நடவடிக்கைகள் அரசியல், பொருளாதார ரீதியாக முன்னெடுக்கப்படுகின்றன. அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழு இந்தியாவுக்குப் போய்வந்திருக்கிறது. அதற்கு முன்னர் பஸில் ராஜபக்ஷ போய்வந்தார். குறுகிய காலத்தினுள் இரண்டு தடவைகள் இந்தியாவுக்கான விஜயத்தை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார். இந்தவாரம் இலங்கையில் இருந்து நாடாளுமன்றக் குழு ஒன்று இந்திய நாடாளுமன்றத்துக்குச் சென்றுள்ளது.

இந்தப் பயணங்கள் நட்புறவையும், அரசியல் தொடர்பாடலையும், பொருளாதார நடவடிக்கைகளையும் மேம்படுத்தும் நோக்கிலேயே அமைந்துள்ளன. இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள புதிய வளர்ச்சி இது என்று இந்தப் பயணங்கள் குறித்துச் சிலர் கூறுகிறார்கள்.

அதாவது, போர்க்குற்றங்கள், மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்கள், பிற பொருளாதார அரசியல் தரவுகள் ஆகியவற்றால் சற்று எரிச்சலடைந்திருக்கும் மேற்கின் தொடர்பாடலுக்குப் பதிலாக இந்தியாவுடனான நெருக்கத்தை இலங்கை அதிகரித்துள்ளது என்பது இவர்களுடைய கருத்து.

மேற்கின் அழுத்தத்தைத் தவிர்க்கும் உபாயம் அல்லது அந்த அழுத்தத்தைத் தணிக்கும் முயற்சியாகவே இந்தியாவுடனான நெருக்கத்தை அதிகரித்திருக்கிறது இலங்கை.


இதேவேளை சீனாவுடன் அதிகமாக நெருங்கி, இந்தியாவைப் பகைத்து இந்தியாவின் அழுத்தத்துக்குள் சிக்கிவிடவும் இலங்கை விரும்பவில்லை. இதை எவ்வாறு விளங்கிக்கொள்ளலாம் என்றால் இந்தியா, சீனா, மேற்குலகம் என்ற ஆதிக்கப் பொறிக்குள்ளும் சிக்கிக்கொள்வதற்கு இலங்கை விரும்பவில்லை.

அதேவேளை அவைவிட முக்கியத்துவத்தை வைத்துக்கொண்டு தனக்கான சாத்தியங்களை அடைய முற்படுகிறது இலங்கை. மேற்கின் அழுத்தங்களைத் தணிப்பதற்கு மேற்குடன் நெருக்க சக்தியான இந்தியாவுடன் நட்புறவைப் பேணுவது; அதேவேளை இந்திய ஆதிக்கத்தினுள் சிக்கிவிடாதிருக்க சீனாவுடன் நட்புறவைப் பேணுவது; சீனாவின் ஆதிக்கத்தினுள் விழுந்து விடாதிருக்க இந்தியாவுடன் நெருக்கமாவது. இவ்வாறு ஒரு வகையான சமநிலையைப் பேணுவதன் மூலம் இந்திய - சீன - மேற்குலகப் பொறிகளில் இருந்து தன்னைத் தப்பவைத்துக் கொண்டு, இந்த மூன்று தரப்புகளில் இருந்தும் நலன்களைப் பெறுவது என்ற அடிப்படையில் செயல்படுகின்றது இலங்கை. இதுதான் இலங்கை அரசின் சாணக்கியம். இன்னும் இதைத் தெளிவாக்கினால் சிங்கள அரசாங்கத்தின் சிறப்பே - வெற்றியே இதுதான். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இன்னொரு விடயத்தையும் கவனத்தில் எடுக்க வேணும். இலங்கை இனப்பிரச்சினையைப் பற்றி உலகம் பேசுவதை விட்டு விட்டது. அப்படிப் பேசினாலும் அது சீரியஸாகப் பேசுவதில்லை. அதாவது, நடவடிக்கைக்குரியவாறு - அழுத்த நிலையில் பேசுவதில்லை. இந்தியா இலங்கையின் இனப் பிரச்சினையைப் பற்றி கதைப்பது கூட தமிழ் நாட்டு அரசியல் நிலைமைகள் குறித்த சாதக அம்சங்களைப் பெறுவதற்காக மட்டுமே. மற்றும்படி அது இலங்கை அரசின் நிலைப்பாடு பற்றி அதிக வேறுபாட்டைக் கொண்டிருக்கவில்லை.

ஆகவே, இங்கே பின்னடைவைச் சந்தித்திருப்பது இலங்கை தமிழர்கள்தான். இந்திய ஆதரவு தமக்குக் கிட்டும் எனவும், இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா உதவும் என்றும் இன்னும் நம்பும், நம்பச் சொல்லும் தமிழ் அரசியல் கட்சிகள் அரசியல் போக்கை அறியாத நிலையிலேயே இருக்கின்றன.

சிங்கள இராஜதந்திரம், இலங்கை அரசின் சாணக்கியம், சர்வதேச அரசியல்போக்கின் நிலைவரம், இலங்கையை மையமாக வைத்து நடைபெறும் அரசியல் நடவடிக்கைகள் எனப் பன்முகப்படுத்தப்பட்ட அரசியல் செயற்தளத்தைப் புரிந்துகொள்ளாத சிறுபிள்ளைத்தன அரசியல் நடவடிக்கைகளிலேயே தமிழர் தரப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இனப்பிரச்சினை குறித்த இந்தியாவின் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காகவும் இலங்கை அரசு இந்தியாவுடனான நட்புறவைப் பயன்படுத்துகிறது. இலங்கை பகை நிலைக்கோ முரண்நிலைக்கோ செல்லுமானால், இந்தியா தமிழர் பிரச்சினையைக் கையிலெடுத்து அழுத்தத்தைப் பிரயோகிக்கும்; நெருக்கடியை உருவாக்கும்.



எனவே, அவ்வாறானதொரு நிலைமை உருவாகாமல் இருக்க வேண்டும் என்பதில் இலங்கை கவனமாக இருக்கிறது.

சிங்கள அதிகாரவர்க்கத்தின் இராஜதந்திரம் எப்போதும் இப்படித்தான் உள்ளது. அதாவது, முன்னே இருக்கும் நிலைமைகளை கூர்ந்து அவதானித்து, அந்த நிலைமைக்கு எந்த விதத்தில் இராஜதந்திரப் பொறிமுறையை வகுத்து, வாய்ப்புக்களை உருவாக்கி சாதகங்களைப் பெற்றுக்கொள்வதே சிங்கள இராஜதந்திரமாகும். இதில் அது எப்போதும் வெற்றியையே பெற்றுவருகிறது.

மேற்குலகின் நெருக்கடி இலங்கைக்கு அதிகரிக்கிறது. ஜி.எஸ்.பிளஸ் வரிச்சலுகை நீக்கம், மனித உரிமை அமைப்புக்களின் அழுத்தம், ஐ.நா. அதிகாரிகளின் கண்டனம் என்றெல்லாம் வெளியாகும் செய்திகளை தமிழ் ஊடகங்கள் பிரதானப்படுத்தித் தமிழ்மக்களைக் கண நேர மகிழ்ச்சிக்குட்படுத்தலாம்.

ஆனால், நிலைமைகளைக் கூர்ந்து அவதானிக்கும் எவருக்கும் இந்தச் செய்திகளின் முக்கியத்துவமின்மை பற்றிய விடயங்கள் தெளிவாகும். ஏறக்குறைய பேதைத்தனம் நிறைந்த கணிப்புகளும், வெளிப்பாடுகளும், அனுமானமுமே இதுவாகும். இதனால்தான் தமிழ்த்தரப்பினர் வெற்றிபெற முடியாமல் தொடர்தோல்விகளில் சிக்கியிருக்கின்றனர்.

அரசியல் என்பது ஒரு முழுமையான அறிவுபூர்வமான செயற்பாடு என்பார்கள். அதாவது, அது ஒருவகையான வர்த்தக நடவடிக்கை என்பார்கள். அதிலும் நாடாளுமன்றத் தேர்தல் முறைமூலமான அரசியல் என்பது அல்லது அதிகார வர்க்கத்தின் நலன்பேணும் அரசியல் என்பது இந்த வணிக அடிப்படைகளையே உட்காரணியாகக் கொண்டது.

இந்த அரசியல் வெறும் உணர்ச்சிகளை மட்டும் முதலீடாக்கினால் தோல்வியே எட்டும். உணர்ச்சிகள் கணநேரச் சிலிர்ப்பை ஊட்டலாம். ஆனால், அவை எப்போதும் நிரந்தரத் தோல்விக்கே வழிவகுக்கும்.

உணர்ச்சிகரமான காதல் விவகாரங்களுக்கு இடமளிக்காமல், அறிவுபூர்வமாக சீதனம் பேசி, திருமணத்தை நடத்தி முடிக்கும் நடைமுறையுடைய சமூகம் தனது அரசியல் தலைவிதியை மட்டும் உணர்ச்சிகரமாக வைத்திருப்பது எப்படி என்று ஒரு நண்பர் கேட்டதே இங்கே நினைவில் எழுகிறது.

வர்த்தக நலன்சார்ந்தோ, பொருளாதார நலன்சார்ந்தோ இந்த உலகம் இயங்குகிறது. சீனாவுக்கும் இதுதான் அடிப்படை. இந்தியாவுக்கும் இதுவே முக்கியம். மேற்குலகுக்கும் இதுதான் தேவை. இந்த இடத்தில் தமிழர்களின் நிலைப்பாடு, தகுதி, தீர்மானம், நடவடிக்கைகள் எல்லாம் என்ன?

இதைப் பற்றிய தெளிவோ, புரிதலோ இல்லாமல் வெறுமனே இந்தியா உதவும்; இந்தியா எம்மையே தலைமைச் சக்தியாக கருதுகிறது; இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் என்று கூறுவதெல்லாம் சிரிப்புக்கிடமானவை.

இலங்கை அரசு தமிழர்களை தோற்கடிப்பது வேறு. தமிழர்கள் கோமாளிகளாக இருப்பது வேறு. இங்கே கவலையளிக்கும் சங்கதி தமிழர்கள் கோமாளிகளாக இருப்பதே. ✱

# பெண்களுக்கான 'பிங்க்' மாதம்

அக்டோபர் மாதத்திற்கு ''பிங்க் மாதம்'' என்று பெயரிட்டு, மார்பக புற்று நோய் பற்றிய விழிப்புணர்வு மாதமாக உலகெங்கும் கடைபிடிக்கப்படுகிறது.

**''புற்றுநோய்'' என்று பெயர் வரக் காரணம் என்ன?**

கறையான் புற்றின் அடிப்பாகம் பெரிதாகவும், மேல் பாகம் கூர்மையாகவும், பல கிளைகள் பரவியும் காணப்படும். அதன் ஓரங்களும் சீராக இருக்காது. புற்று நோயாளிகளின் பாதிக்கப்பட்ட உடல் பாகமும் அதுபோல் தெரிவதால் அதற்கு புற்றுநோய் என்று பெயரிட்டுவிட்டார்கள்.

ஆங்கிலத்தில் ''கேன்சர்'' என்று சொல்வார்கள்.

கேன்சர் என்ற வார்த்தை ''கேன்கர்'' என்ற சொல்லிருந்து வந்தது. கேன்கர் என்றால் நண்டு. நண்டின் உடல் நடுவிலும், அதன் கால்கள் பல கிளைகளாக ஓரங்களிலும் தெரிவதுபோல் புற்றுநோயின் பாதிப்பும் தெரிவதால், கேன்சர் என்று பெயர் சூட்டிவிட்டார்கள். எவருக்கும், உடலில் எந்த பகுதியிலும் இந்த நோய் வரலாம். மார்பக புற்று நோய், உலகில் இரண்டாவது பெரும் நோயாக குறிப்பிடப்படுகிறது.

**புற்று நோய் ஏன் வருகிறது?**

மனிதனின் உடல் உறுப்புக்கள் வளர்ச்சி அடையும் பொழுதோ அல்லது தேய்மானம் அடையும் பொழுதோ, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை வரையில்தான், மறுபடியும் பெருகும். இதை தீர்மானிப்பது ஒவ்வொரு செல்லிலும் உள்ள ''நூக்லியஸ்'' என்ற உயிர் பொருள். இது குறிப்பிட்ட அளவை விட மிக அதிகமான எண்ணிக்கையில், பெருகினால் புற்று நோய் தோன்றும்.

மார்பக புற்று நோய், மார்பில் உள்ள பால் சுரப்பிகளில் ஏற்படலாம். பால்வரும் குழாய்களிலும் ஏற்படலாம். இந்த குழாய்கள் எல்லாம் சேர்ந்து மொட்டு மாதிரி தோன்றும் மார்பகக் காம்புகளிலும் வரலாம். ஒவ்வொரு பால் சுரப்பியையும் இணைக்கும் கொழுப்பு திசுக்களிலோ அல்லது மற்ற திசுக்களிலோகூட வரலாம்.

மார்பக புற்று நோய் மார்பில் மட்டும் இருப்பதில்லை. அவை அங்கிருந்து பரவி கீழே உள்ள நெஞ்சுக்கூட்டின் திசுக்களில் பரவும். அக்குள்களில் உள்ள நெறிக்கட்டிகளிலோ, இன்னொரு மார்பகத்திலோகூட பரவும். இரத்தத்தின் வழியாக எந்த உறுப்புகளுக்கு வேண்டுமானாலும் செல்லலாம். குறிப்பாக மூளை, சிறுநீரகங்கள் அதிகமாக தாக்கப்படுகின்றன.

**மார்பக புற்று நோய் வருவதற்கான காரணங்கள் என்ன?**

மார்பக புற்று நோய் ஏற்படுவதற்கு பல காரணங்களை சொல்லலாம். பொதுவாக இது உடலில் உள்ள மரபணுக்களால்தான் (Genetic Factor) வருகிறது. 5 முதல் 10 விழுக்காடு தாய், தந்தையிடமிருந்து வரலாம். BRCA-1 BRCA-2 என்று இரண்டு மரபணுக்களை கண்டுபிடித்துள்ளனர். இது தாயிடமிருந்தோ அல்லது தந்தையிடமிருந்தோ வரலாம். ஒருவருடைய இரத்த சொந்தங்கள் யாருக்காவது மார்பக புற்று நோய் இருந்தால், அவருடைய அடுத்த தலைமுறை நபர்களுக்கும் இது வருவதற்கான வாய்ப்பு அதிகம். மது அருந்தும் மங்கையர்களையும், மாதவிடாய் நின்ற பிறகு உடல் பருமனாகிறவர்களையும் இந்த நோய் அதிகம் தாக்கும்.

உடலில் உள்ள கொழுப்பு திசுக்கள் "ஈஸ்ட்ரோஜன்'' என்ற வேதிப் பொருளை சுரக்கின்றன. மாதவிடாய் நின்று போகும் 'மெனோபாஸ்' காலத்தை பெண் அடைந்த பின்பு, உடலில் அதிகமாக இருக்கும் ஈஸ்ட்ரோஜன், மார்பக புற்று நோயை தோற்றுவிக்கலாம். புகை பிடித்தல், ஈஸ்ட்ரோஜன் அதிகமாக உள்ள மருந்துகளை மருத்துவர்களின் பரிந்துரை இல்லாமல் சாப்பிடுவது, தவறான கருத்தடை மாத்திரைகளை எடுத்துக் கொள்வது, மன அழுத்தம், மன உளைச்சல், ஆகியவை மார்பக புற்று நோய் வருவதற்கான காரணங்களாக அறியப்படுகின்றன.

**நோயின் பல நிலைகள்**

**நிலை 0 :** புற்றுநோய் பால் குழாய்களில் மட்டும் இருக்கும். மார்பக திசுக்களில் பரவி இருக்காது.

**நிலை 1 :** புற்றுநோய் 2 செ.மீ. அல்லது குறைவாக இருக்கும். மார்பகங்களில் மட்டும் இருக்கும். சிலருக்கு மார்பகங்களில் இருக்காது. அக்குள்களில் உள்ள நெறிக்கட்டிகளில் இருக்கும்.

**நிலை 2 அ :** புற்றுநோய் 2 செ.மீ., அளவில் அக்குளில் உள்ள நெறிக்கட்டிகளுடன் சேர்ந்து இருக்கும்.

**நிலை 2 ஆ :** புற்று நோய் கட்டி 5 செ.மீ.க்கு பெரிதாகியிருக்கும். ஆனால் மற்ற இடங்களுக்கு பரவாமல் மார்பகத்தில் மட்டும் இருக்கும்.

**நிலை 3 அ :** கட்டியின் அளவு பெரிதாக இருக்கும். எல்லா இடங்களிலும் பரவி இருக்கும்.

**நிலை 3 ஆ :** புற்று நோய் மார்பு எலும்பிற்கும் பரவி இருக்கும்.

**நிலை 3 இ :** புற்று நோய் காலர் எலும்பின் கீழ் உள்ள நெறிக்கட்டிகளை தாக்கியிருக்கும்.

**நிலை 4 :** புற்று நோய் மற்ற பாகங்களுக்கும், மற்ற உறுப்புகளுக்கும் பரவி இருக்கும்.

உணவு வகைகளில் இன்னமும் தீர்மானமாகச் சொல்லப்படவில்லை என்றாலும் கொழுப்பு நிறைந்த சிவப்பு இறைச்சி, கொழுப்பு நிறைந்த பால், ஐஸ்கிரீம், பாலாடை கட்டி (சீஸ்) ஆகியவற்றை அதிகம் சாப்பிட்டால் மார்பக புற்றுநோய் வரலாம். சிறு வயதில் பூப்படைதல், மிகவும் தாமதமாக மெனோபாஸ் காலகட்டத்தை அடைதல் போன்றவையும் நோய்க் காரணங்களாக சொல்லப்படுகின்றன.

**எந்த வயதில் இந்த நோய் அதிகம் தாக்கும்?**

30 வயதிலிருந்து 39 வயது வரை 233 பேர்களில் ஒருவருக்கு மார்பக புற்றுநோய் வரலாம். 40 வயதிலிருந்து 49 வயது வரை 69 பேர்களில் ஒருவருக்கும், 50 வயதிலிருந்து 59 வயது வரை 38 பேர்களில் ஒருவருக்கும், 60 வயதிலிருந்து 69 வயது வரை 27 பேர்களில் ஒருவருக்கும் மார்பக புற்று நோய் வரலாம்.

**இதன் அறிகுறி என்ன?**

முதலாவதாக தென்படுவது மார்பகத்தில் கட்டி. ஆரம்ப நாட்களில் வலி இல்லாமலும், அந்த கட்டியினுடைய ஓரங்கள் சீராக இல்லாமலும் இருக்கும். ஆனால் பல சமயங்களில் தொட்டாலோ அல்லது அழுத்தினாலோ வலி ஏற்படுகின்ற கட்டியாகத்தான் இது வருகிறது. மார்பகத் தோலில் எரிச்சல் அல்லது நமைச்சல் அல்லது ஆரஞ்சு பழத்தோலில் இருப்பது போன்ற புள்ளி புள்ளியாக குழிகள், மார்பக காம்புகளில் வலி, வீக்கம், காம்பை சுற்றியுள்ள தோலில் சுருக்கம், நமைச்சலுடன் கூடிய தேமல் போன்ற தோற்றம் எல்லாம் இதற்கான அறிகுறிகள். மார்பகக் காம்புகள் உள்ளிழுக்கப்பட்ட நிலை, சுரப்பிகள் வழியாக இரத்தமோ அல்லது திரவமோ கசிவது, அக்குகளில் நெறிக்கட்டிகள் வீங்கியிருப்பது போன்றவைகளும் அறிகுறிகள்தான்.

ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் முடிந்த பின்னர் பெண்கள் மார்பகங்களை சுய பரிசோதனை செய்யவேண்டும். ஏதாவது வித்தியாசத்தை உணர்ந்தால், உடனே மருத்துவரின் பரிந்துரைப்படி 'மாமோகிராம்' முறையில் மார்பகத்தை படம்பிடித்து சோதித்துப் பார்க்க வேண்டும். கட்டிகள் இருப்பின் கட்டியை ஊசி மூலம் துளைத்து அதை பரிசோதிக்க வேண்டும். மார்பக காம்பிலிருந்து கசியும் திரவத்தை ஆராய்ந்து புற்றுநோய்க்கான அறிகுறிகள் உள்ளனவா என்றும் கவனிக்க வேண்டும்.

**மார்பக புற்றுநோய்க்கான தீர்வு என்ன?**

வருமுன் காப்பது எளிது! வந்த பின்னர் மருத்துவரை உடனே பார்ப்பது நல்லது!

சிலருக்கு எளிமையான கட்டி அகற்றும் அறுவைச் சிகிச்சை செய்தால் போதுமானது. சிலருக்கு மார்பகத்தை நீக்கிவிடுவார்கள். கூடவே கீழே உள்ள தசையையும், அக்குகளில் உள்ள நெறிக் கட்டிகளையும் சேர்த்து அப்புறப்படுத்துவார்கள். சிலருக்கு கதிர்வீச்சு வைத்தியம் தேவைப்படும். நோயை கட்டுப்படுத்தவும், குணப்படுத்தவும் மருந்து, மாத்திரைகள், ஊசிகள் தேவைப்படலாம். பல வைத்திய முறைகளில் குணப்படுத்தலாம். ஆனால் நோயின் ஆரம்ப கட்டத்திலேயே மருத்துவரை பார்க்க வேண்டும்.

**இந்த நோய் வராமலே தடுக்க முடியுமா?**

உடற்பயிற்சி தினமும் செய்தால் இந்த நோய் வரும் வாய்ப்பு குறையும். ஒரு நாளைக்கு 45 முதல் 60 நிமிடங்கள், வாரத்தில் 5 நாட்கள் உடற்பயிற்சி செய்பவர்களை பொதுவாக மார்பக புற்று நோய் தாக்குவதில்லை. கேரட், பீட்ரூட், தக்காளி, பூசணி, ப்ராக்கோலி, கீரை வகைகளில் ''கரடினாய்ட்ஸ்'' என்ற வேதிப் பொருள் அதிகம்



உள்ளது. இது புற்று நோய் வருவதை தடுக்கின்றது.

சிவப்பு திராட்சை, பெர்ரி, பீச், ஆப்பிள், வாழைப்பழம் (குறிப்பாக செவ்வாழை) போன்றவைகளை தினமும் சாப்பிடுபவர்களை மார்பக புற்றுநோய் தாக்கும்தன்மை குறைவு.

பிங்க் மாதமாகிய இந்த அக்டோபரில் ஒவ்வொரு பெண்ணும் 'உடல் சுத்தம், மன சுத்தத்தோடு வாழ்வேன். உடற்பயிற்சி செய்வேன். நல்ல உணவுப் பழக்கத்தை மேற்கொள்வேன்' என்ற உறுதிமொழியை எடுத்து, அதை கடைபிடித்தால் மார்பக புற்றுநோயின்றி வாழலாம். ✱

---

**நிலம் திரும்பிய இந்துபுரம் மக்கள்...**

**(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மக்களுடன் காலடி எடுத்து வைத்த பொழுது செழிப்பான கிராமம் என்று வாழ்வதற்கான பெரு நம்பிக்கை மனதுக்குள் ஏற்படுகிறது. அங்கு பல இடங்களில் பெரும் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தன. இராணுவத்தினர் முறிகண்டி முறிப்பு போன்ற பகுதிகள் ஊடாக முன்னேறி கிளிநொச்சியை கைப்பற்ற முற்பட்டவேளை இந்தப் பதுங்கு குழிகளில் இருந்து போராளிகள் போரிட்டிருக்கிறார்கள். பெரும் அகழிகளைப் போல இருந்த கிடங்குகளின் மேல் மரம் தடிகளைப் போட்டு பாதுகாப்பாக மூடி இருக்கிறார்கள்.

யுத்தம் நடைபெற்ற சூழலை நினைவுக்கு கொண்டு வரும் இத்தகைய பதுங்கு குழிகளை பரவலாக பார்க்க முடிந்தது. ஊரின் அடுத்த பக்கத்திற்கு செல்லும் வழியில் விமானத் தாக்குதல் ஒன்றினால் பின்பக்கம் அழிந்த வீடு ஒன்றைப் பார்த்தேன். அந்தத் தாக்குதலில் அங்கு நான்குபேர் உயிரிழந்தனர் என்று அருகில் வசிக்கும் மக்கள் தெரிவித்தனர்.

மரியதாஸ் என்கிற நபரின் நான்கு ஏக்கர் காணிநிலம் இப்பொழுது படைகளின் முகாமாக உருவெடுத்திருக்கிறது. இயல்பான வாழ்க்கையையும் செயற்பாடுகளையும் அந்த முகாம் பாதிக்கப் போகிறது என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத பெண் ஒருவர். ஆதனால் சுதந்திரமற்ற பயத்துடன் கூடியதாகவே தங்கள் வாழ்க்கை அமையப் போகிறது என்றும் அவர் அச்சம் தெரிவித்தார். மரியதாஸ் என்கிற தனிநபர் ஒருவரது காணியை அபகரித்து முகாம் அமைத்திருப்பதாகவும் அந்தக் காணியை குறித்த நபர் கோரிய பொழுதும் போராளிகளின் காணி என்று அவரிடம் கொடுக்க இராணுவம் மறுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. முழுமையான பாதுகாப்பும் இராணுவ செயற்பாடுகளும் மிக்க முகாமாக அது செயற்படுவதை பார்க்க முடிந்தது. அந்த தெருவால் செல்லும் பொழுது மக்கள் மிக மௌனமாக கீழே பார்த்துக் கொண்டு செல்கிறார்கள்.

இந்துபுரம் கிராமத்தின் கிழக்குப் பக்கமாக உள்ள எல்லையில் உள்ள சில குடும்பங்கள் சிதைவடையாத தங்கள் வீடுகளின் சுவர்களில் தகரங்களையும் தறப்பாள்களையும் போட்டுக் கொண்டு இருந்தார்கள். தறப்பாள் வீடுகளில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் காணிகளில் உள்ள சிதைவுகளை அள்ளி பதுங்கு குழிகளுக்குள் போட்டு மூடிக் கொண்டிருந்தார்கள். தாங்கள் நிலம் திரும்பியதில் முக்கியமான பணியை ஊடகங்கள் ஆற்றியிருந்தன என்றார் முருகையா கணேசன். எங்கள் பிரச்சினை எல்லா இடங்களுக்கும் எல்லார் கவனத்திற்கும் சென்றமைக்கு ஊடகங்கள்தான் காரணம் என்றார். நாங்கள் உறுதியுடன் நம்பிக்கையுடன் எங்கள் ஊருக்கு செல்ல வேண்டும் என்று இருந்தோம் என்று கணேசன் புன்னகைத்தார்.

தறப்பாள் கூடாரங்களில் இருந்து புன்னகைக்கும் குழந்தைகளைப் போல அந்தக் கிராமமே சிதைந்திருக்கிற முகத்துடன் புன்னகைப்பதைப் போல தெரிகிறது. அதிகாரத்தினால் குறி வைக்கப்பட்ட கனவு நிலங்களின் தொகுதியில் ஒன்றான இந்துபுரத்தையும் மக்களிடமிருந்து சுருட்டிக் கொள்ள எடுத்த நடவடிக்கையை முறியடிக்க இந்த மக்கள் தடுப்பு முகாமில் இருந்து நுட்பமாக போராடி வந்திருக்கிறார்கள். இன்றைய ஈழத்துச் சூழலில் நிலப் பறிப்பு அபாயத்துக்கு முகம் கொடுத்த இந்தக் கிராமம் தன் மக்களை மீண்டும் பெற்றிருக்கிறது. எல்லாச் சிதைவுகளும் அழிவுகளும் அதன் எச்சங்களும் எம் எல்லோருக்குமே வாழ்வு பற்றிய நம்பிக்கையை ஊட்டுகிறது. சிதைந்து தரைமட்டமாகிய வீடுகளின் அத்திவாரமும் உடைந்த வீடுகளில் எஞ்சியிருக்கும் பகுதிகளும் அடர்ந்திருக்கும் பற்றைகளும் பாழடைந்த சூழலில் நிற்கும் உயர்ந்த பயன்தரு மரங்களும் போர்க்கால பதுங்கு குழிகளும் அந்தக் கிராமத்து மக்களைப் பார்த்து புன்னகைப்பதைப் போலவே எனக்குத் தெரிகிறது. நீண்ட காத்திருப்பின் பின்னர், கடும் போராட்டத்தின் பின்னர், துயர் மிக்க வதைமுகாம் வாழ்வின் பின்னர் மீளக்குடியேறிய இந்துபுரம் கிராமத்து மக்களின் வாழ்வு மீண்டும் செழிப்பு பெற வேண்டும். ✱

# யாழ் வர்த்தகர்களே!

செய்வீர்

## விளம்பரத்தினை

Wellawatte
flex Guide இல்

அதனால்

அதிக இலாபம் அடைவீர்!

## வெள்ளவத்தையில்


இல்லங்கள் தோறும்

**இலவசமாக** விநியோகிக்கும்

இவ்வச்சுப்பிரதியில்

விளம்பரம் செய்து

உங்கள் வர்த்தகத்தை மேலும் விருத்தியடையச் செய்வீர்..




வெள்ளவத்தையிலுள்ள
எல்லோர்
இல்லங்களிலுள்ளவர்களின்
சிறந்த தோழன்!

**Flex Publications**
(A Subsidiary of Flex Graphic)
04, IBC. Road, Wellawatte.
Tel:- 2364157, 2506114 Fax:-2501756
www.flexgraphic.lk E-mail:- flexvijay@sltnet.lk
அழையுங்கள். 0777-555026

FLEX Graphic

# வர்ணம் இழந்த வானவில்

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம்பெற்ற சம்பவங்களைப் பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்தத் தொடரில் து.திலக்(கிரி) எழுதிய 'வர்ணம் இழந்த வானவில்' என்ற உண்மைக்கதையின் பாகம் இரண்டு வெளிவருகிறது.

**02**

இவ்வாறான சுமைகளுக்கு மத்தியில் அவன் அக்குடும்பத்துக்காக கடுமையாக உழைத்தான். சாதாரண பனடோல் வில்லை கூட இல்லாமல் துவண்டு போன அந்த நாட்கள் அவை. ''அப்ப ஏன் இருந்தனீங்கள்? வந்திருக்கலாம் தானே'' என யோசிப்பவர்களுக்கு ''நம்பிக்கையுடன் பயணம் செய்வதற்காக ஒரு விமானத்தில் ஏறிவிட்டோம். ஆனால், அவ்விமானமோ நடுவானில் விபத்துக்குள்ளாகி, நிறையப் பேர் இறந்து, பலர் காயமடைந்து விட்டனர். அவ்வாறு காயமடைந்த ஒருவரிடம் சென்று 'நீங்கள் தொடக்கத்திலேயே விமானத்தில் ஏறாமல் விட்டிருக்க வேண்டும். நீங்கள் ஏன் விமானத்தில் ஏறினீர்கள்' என்று கேட்பது போலாகும். ஒரு மனித இனம் எப்படி வாழக் கூடாதோ? அப்படி வாழ்ந்தது வன்னியில். அவர்களில் ஒருவனாகத்தான் வசந்தனும் இத்துன்பங்களைச் சுமந்தான்.

இப்படியான துயர வாழ்வில் தன் குடும்பம் சிக்கிக்கொண்டதே என்பதை நினைத்து, அவர்களை எப்படியாவது காப்பாற்றிவிடவேண்டும் எனத் துடித்தான். கையில் இருக்கும் கொஞ்ச பணத்துடன் சாவின் பயத்தைத் தூக்கியெறிந்துவிட்டு, பிள்ளைக்கான பால் மா தொடக்கம் வயிற்றுப் பசியைப் போக்கக்கிடைக்கும் கொஞ்ச அரிசிக்காகவும் அலைந்து திரிவதை எண்ணிப் பார்க்கமுடியாது.

இந்தத் துயர்மிகுந்த வாழ்க்கையிலிருந்து மீண்டுவர எடுத்த எந்த முயற்சியும் கைகூடவில்லை. இதனைவிட, கர்ப்பமான மனைவியையாவது கப்பலில் ஏற்றிவிடத் துடித்ததும் நிறைவேறவில்லை எனும்போது ''ச்சி இதனை விடச் செத்துப் போகலாம்'' என்ற எண்ணம் அவனது மனதில் அடிக்கடி ஏற்பட்டது. அதனை வெளிப்படுத்தவும் அவன் தவறவில்லை. இந்தக் காத்திருப்புத்தான் வசந்தனின் உயிர் பிரிவதற்குக் காரணமானது. இப்போது இருப்போர் அடுத்த நிமிடம் இருக்கமுடியாது என்ற அந்தக் கொடூர நாளின் அன்றைய காலை என்றும் போல்



வெடியோசைகளினூடே விடிந்தது.

அதுதான் தனது கடைசி நாள் என்பதை வசந்தனோ இல்லை அவனது மனைவி, பிள்ளைகளோ அறிந்திருக்க வாய்ப்பில்லை. இறைபக்தி நிறையவே கொண்டவன் வசந்தன். அவனுக்கேற்ற மனைவி, ஏன்? அவர்களது மூத்த மகள் கூட இறைவனிடம் நிறையபக்தி கொண்டவள். ஆயினும்... அன்றைய பொழுதில் இவனது உயிரைப் பறிப்பதற்கான ஷெல் தயார் செய்யப்பட்டது.

அனைவரும் கதைத்துக் கொண்டிருந்தனர், பதுங்கு குழிக்குள்ளே அனைவரையும் விட்டுவிட்டு வசந்தன் அவர்களோடு கதைத்தபடி, மகனின் தண்ணீர்த் தாகத்துக்கு போத்தலில் இருந்து தண்ணீரைக் கொடுத்துவிட்டு, காப்பகழிக்கு வெளியே இருந்த கட்டை ஒன்றின் அருகே பாதுகாப்பைத் தேடிக்கொண்டான்.

வசந்தனையும் வேறு சிலரையும் கொன்று, சிலபேரைக் காயப்படுத்தப் போகிறேனே என்பதுகூடத் தெரியாத அந்த சடப் பொருளான ''ஷெல்'' இப்போது புறப்பட்டது. அதன் நுனியில் யமன்வந்து கொண்டிருந்தான். மனைவி, பிள்ளைகள், தன் அம்மா, அப்பாவாக எண்ணிக் கொண்டிருக்கும் மாமா, மாமி மற்றும் மைத்துனன் போன்றோரை எப்படிக் காப்பாற்றுவது என்ற சிந்தனையோடு இருந்தவனின்... அருகிலே...

அந்தப் பாரிய வெடிச்சத்தம். ஒளிப் பிளம்பு. புகைமூட்டம். பிய்த்தெறியப்பட்ட பொருட்களும் வசந்தனின் தசைத் துண்டுகளும் அவ்விடத்தை இரணகளமாக்கின. தன் உடம்பில் ஷெல் பீஸ்துண்டுகளை வேண்டிக்கொண்ட வசந்தன், ''மனைவி, பிள்ளைகளை, காப்பாற்றிவிடு ஆண்டவா'' என்ற இறுதி மூச்சுடன் அசைவற்றுக் கிடந்தான். கருவுற்ற மனைவியோ, முதியவர்களான மாமன், மாமியோ, வெளியே வரமுடியாத மைத்துனனோ... என்ன செய்வது என்ற திகைப்பில் இருந்து மீள முன், வசந்தனின் உடன் பிறந்த ஆசையக்காவின் கணவரான கலையும், குடும்ப நண்பனான அன்புமணியும் சமநேரத்தில் செய்த பேருதவியால் வசந்தனின் அரைகுறை உயிர் கொண்ட உடல் அங்குள்ள வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

''ஆண்டவா, என் கணவனின் உயிரைக் காப்பாற்றி விடு'' என்ர மனைவியின் கதறலும். ''கடவுளே? என்ர அப்பாவுக்கு ஒருநாளும் இப்படி இல்லையே! கடவுள் என்ர அப்பாவை காப்பாற்றாமல் விட்டுவிடுவாரோ?'' ''என்ற மூத்த மகளின் கேள்வியும் இறைவனால் திருப்திப்படுத்தமுடியாமற் போக...

வசந்தன் எல்லோரையும் விட்டுப் பிரிந்து சென்றான். தனது கடமையை இறைவன் செய்து முடிப்பான் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்திருக்கும்...

அவனது எண்ணம் நிறைவேறியது. ஆனாலும் அதனை விடத்துயரமான சம்பவத்தின் பின்தான் அதுவும் நடந்தேறியது.

நிவேதன் வசந்தனின் இரண்டாவது பிள்ளை. ஆண்பிள்ளை. வயது நாலு. ஆனால், அவனது செயற்பாடுகளோ அபூர்வமானவை. ஆழமான சிந்தனையும், விடாப்பிடியான, வினோதமான கேள்வியும் எல்லோரையும் வியக்கவைக்கும். வசந்தன் தனது வயதுபோன காலத்தில் தனக்கும் தன் மனைவிக்கும் பாதுகாப்பாளனாக எண்ணியிருந்த ஆண்பிள்ளை... வசந்தன் 24.04.2009 ஆம் ஆண்டு அன்று தனது உயிரை மாய்த்துக்கொள்ள மனைவிக்கும் பிள்ளைகளுக்குமான கப்பல் அனுமதி கிடைக்க வேண்டுமென உறவினர்கள் எடுத்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

வசந்தனின் பிரிவுத்துயரில் இருந்து மீளமுடியாமல் கதறிக்கொண்டிருந்த மனைவிக்குத் தனது பிள்ளையையாவது காப்பாற்றிவிட வேண்டும் என்ற சிந்தனையும், வசந்தனின் ஆசையை நிறைவேற்றிவிடவேண்டும் என்ற அவாவும் மேவிட, தொடர்ந்தும் மனிதநேய உதவியென ஒரே வழியான கப்பல் அனுமதிக்காய் காத்திருந்தாள். ஆனால், அடுத்த நாள் நடக்கப் போகும்... மிகப் பெரிய துயரமான சம்பவத்தை வசந்தனின் மனைவி எள்ளளவும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டாள்.

27.04.2009 அன்று வசந்தன் பிரிந்த நான்காவது நாள்... சோபையிழந்துபோன தாயின் முகம், சகோதரியின் முகம், வீட்டு முற்றம் (தறப்பாள் கொட்டில்) இவைகளில் பார்வையை செலுத்திக் கொண்டிருந்தான் நிவேதன்.

சண்டை உக்கிரமடைய, மக்கள் தொடர்ந்து எங்கே செல்வது என்ற திகைப்புடன் அங்கும், இங்கும் ஓடித்திரிந்து உயிர்களை இழந்துகொண்டிருந்தனர். இப்பொழுது நிவேதன் தன் உயிரைப் பறிக்க வரும் ரவையின் எண்ணம் எதுவும் இல்லாதபடி எஞ்சிய தன் உறவுகளோடு ஆழ்ந்த உறக்கத்தில் காப்பகழியில் கிடந்த போது, நிவேதனின் உயிரைக்குடித்து ஏப்பமிட்டது அந்த ரவுன்ஸ்... 'கடவுளே' என்ற கதறல் சத்தம் ...அவ்விடத்தை வேகமாக... இது எதுவும் தெரியாதபடி... நிவேதன் தன் தந்தையுடன் புறப்பட்டான். பிறப்புண்டேல் இறப்புண்டு ஆனால், தமிழருக்கு இது இறைவனால் தீர்க்கப்பட்ட தீர்ப்பல்ல... எவராலோ... திணிக்கப்பட்டது...

இந்த இனம் உள்ளவரை... இவர்கள் பட்ட அவலம் நினைவில் இருக்கும்...

வசந்தனின் பின், மகன் நிவேதன்; இருவரும் தொடராய்ப் போனபின், அக்குடும்பம் அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல் திணறியபோது; அங்கே கலை அண்ணரும், அன்புமணியம் மற்றும் உறவினரும் நேசக்கரம் நீட்டியவிதம் எப்போதும் தர்சினியின் நினைவில் இருக்கும்.

கலை அண்ணன், வசந்தனின் மைத்துனன். வசந்தனின் இழப்பின் பின்; இவரது உதவியும், நண்பன் அன்புமணியின் உதவியும், யோகா அக்காவின் உதவியும் மற்றும் பல உறவினர்களின் அயராத முயற்சியின் பிரதிபலனாக வசந்தனின் மனைவியும், அவளின் கருவறையில் தவழும் சிசுவும், ஆறுவயதான நிருபமாவும் அந்த நெருக்கடியான இடத்திலிருந்து விடுபட்டுச் செல்ல காரணமாகியது.

இதன் விளைவால் வசந்தனின் மனைவி தர்சினியின் கப்பல் பயணம் விரைவுபடுத்தப்பட்டு, பயணத்தின் நாள் குறிக்கப்பட்டது.

24.04.2009 அன்றைய கணவனது இழப்பும், 27.04.2009 அன்றைய மகனது இழப்பும், ஆறாத வடுவை ஏற்படுத்த...

கவலையின் உச்சம், சரியான உணவு இல்லாததன் பலவீனம் போன்றவற்றால் பாதிப்படைந்த வசந்தனின் மனைவி 03.05.2009 அன்று துயர் சுமந்த மண்ணில் இருந்து விடுதலையாகிக் கப்பலேறினாள். கொஞ்சமாவது நிம்மதியாக இருக்கலாம் என நினைத்துவந்த அவளுக்குக் கண்ணீர்தான் மிச்சமானது.

எந்த வேலையும் செய்யவிடாமல், எந்த இடத்திற்கும் சென்று துன்பப்படாமற் கவனமாக, பிள்ளைபோல வைத்திருந்த துணைவனின் பிரிவும், மடி சுமந்து வளர்த்த பிஞ்சு ஆண்மகனையும் இழந்து

**து. திலக்(கிரி)**

06 வயது நிரம்பிய பிள்ளையுடன் மட்டும் தனித்துவிடப்பட்ட அநாதையாக... கப்பலேறித் திருகோணமலை வந்து சேர்ந்தாள் தர்சினி. திருகோணமலையில் உள்ள பதவியா இடைத்தங்கல் முகாம், வசந்தனின் மனைவியை சிறைவைத்துக் கொண்டது.

அம்மாவும், அப்பாவும், தம்பியும், வசந்தனின் சகோதரியான இந்து குடும்பமும் மற்றும் உறவினர்களும், யுத்த பூமியில் வாழ, கொண்டவனும், பிள்ளையும் அதற்கு இரையாகிப்போக, மகளோடு என்ன செய்வது என்ற துயரமான கேள்விக்குறியோடு அவள் முகாமில் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள்.

பிள்ளையின் நிலை பெற்றோருக்குத் தெரியாது. பெற்றோரின் உறவினரின் நிலைமை பிள்ளைக்கு தெரியாது.

இவ்வாறான ஒரு சிக்கலான நாட்களின் கொலைப்பிடிக்குள் அகப்பட்ட வேளையில், வன்னிக்கு வெளியில் இருந்த உறவுகள், நிலைமைகளை அறிய துடியாய்த் துடித்தபோது, நீண்ட வரிசையில் நின்று, ஷெல்மழைக்கு மத்தியில் மனித நேய சேவையாக இயங்கிய தொலைத்தொடர்புச் சேவையூடே சுவிஸ் நாட்டில் உள்ள சகோதரன் சுதனின் தொடர்பு மீண்டும் உயிர் ஊட்டியது தர்சினிக்கு.

வசந்தனின் மூத்த மகளுக்குக் கடுமையான நெருப்புக்காய்ச்சல் (செங்கமாரி) முகாமில் வாட்டியது. தந்தையினதும், தம்பியினதும் இழப்பு. அம்மம்மா, அம்மப்பா, மாமா, இந்து அத்தை, கலை மாமா, மச்சிமார், உறவுகள் போன்றோரின் பிரிவு என்பன அவளின் நெருப்புக் காய்ச்சலுக்கு வலுச் சேர்த்தன. வசந்தனின் மனைவிக்கும் இப்போது குழந்தைப் பேறுக்கான நாள் அண்மித்தது, இது அவளுக்கு மேலும் கவலையைச் சேர்த்தது.

அவர்கள் இருவரும் அவசரமாக பதவியா முகாமில் இருந்து வவுனியா பொது மருத்துவமனைக்கு நோயாளர் காவுவண்டியில் ஏற்றி விடப்பட்டனர்.

தன்னைப் பார்ப்பதா? தன் மகளைப் பார்ப்பதா? என்ற கடுமையான மனப் போராட்டத்தில் இருந்த வசந்தனின் மனைவிக்கு, வசந்தனின் இரத்த உறவுகள் நேசக்கரம் நீட்டி உதவிகள் புரிந்தனர். ஓர் அழகிய பெண் குழந்தையைப் பெற்றுக் கொண்டாள்.

எத்தனை பேர் உதவிக்கு அருகே இருந்தாலும், கணவன் அருகிலிருந்து பார்க்க இல்லாத துயரமான சுமையுடன் அந்த நாள் ஈன்றெடுத்த பச்சைக் குழந்தையுடனும் மூத்த மகளுடனும், தனித்து விடப்பட்ட துயரத்தை விம்மலுடன் பகிர்ந்துகொண்டாள்.

வன்னியில் இருந்து மக்கள் 16.05. 2009, 17.05.2009 போன்ற நாட்களில் இராணுவத்தினரிடம் வந்து சேர்ந்தனர். அதிர்ஷ்டவசமாக வசந்தனின் மாமா, மாமி (மனைவியின் தாய், தந்தை) மற்றும் அவரது சகோதரி குடும்பம், உறவுகள், நண்பர்கள், மைத்துனன் போன்றோரும் வந்துசேர்ந்தனர். செட்டிக்குளம் முகாம் வந்து சேர்ந்தவர்கள், வந்தகளை, துயர் ஆறுவதன் முன்னர் மகள் தர்சினியை தேடிப்பிடிக்கும் படலத்தை ஆரம்பித்து ஒருவரது உறவினர் வீட்டில் மகள் உள்ளதை அறிந்து உறவினர் ஒருவரின் மீட்பின் மூலம் முகாமைவிட்டு வெளியே வந்து சேர்ந்தனர்.

மகளையும், அவருக்குப் பிறந்த மகளையும், மூத்த மகளையும் தம்மோடு இணைத்துக்கொண்டனர். நீண்ட கொடிய நாட்களின் பின் அனைவரும் ஒன்று சேர்ந்தனர்.

எனினும், இன்றுவரை வசந்தனின் மனைவியால் மட்டும் அழாமல் வாழ முடியவில்லை. தகப்பனின் முகம் தெரியாத பெண்குழந்தையுடனும், மூத்த மகளுடனும் அவளது வாழ்க்கை.


அப்பாவினதும், தம்பியினதும் படத்தை வைத்து அழுதுகொண்டே அம்மா இருக்கிறா. சாமி கும்பிடுவதில்லை... ஏன்?'' என்று காண்கின்றவர்கள் அனைவரிடமும் கேட்பாள் வசந்தனின் மூத்த புதல்வி நிருபமா. இப்போது மட்டுமல்ல, இனி எப்போதும் அவளால் அழாமல் இருக்க முடியாதுதானே!

இந்தப் பிள்ளையின் கேள்விக்கு எவர் பதில் சொல்வார்..?

(முற்றும்)


# மாதவிலக்குக் காலமும் காது இரைச்சலும்

***கேள்வி:- பெண். திருமணமாகியுள்ளேன். வயது - 37. எனக்கு மூக்கு அடிக்கடி அடைக்கும். தும்மல் ஏற்படும். விசேட வைத்தியரிடம் காட்டியபோது - ஒவ்வாமை (Allergy) என்று சொல்லி மாத்திரைகள் தந்தார். மேலும் மூக்கடைப்புக்கு - மூக்கினுள் விடுவதற்கு சொட்டு மருந்தும் தந்தார். எனது நோய்க்கு இந்த மருந்துகளைத் தொடர்ந்து உயயோகிக்கலாமா?***




பதில்:- உங்கள் கோளாறு Nasal Allergy வகையைச் சேர்ந்தது. அதற்கு நீங்கள் உபயோகிக்கும் மருந்துகள் சரியானவை. இவற்றைத் தொடர்ந்து உபயோகிப்பதால் பாரதூரமான விளைவுகள் ஏற்படாது. என்றாலும், இந்த மருந்துகளை நீண்டகாலம் உபயோகிப்பதால் - இந்த மருந்துகள் உங்களுக்குப் பழகிப் போய் பின்னர் பிரயோசனம் இல்லாது போய்விடும். மேலும் மூக்கு சொட்டு மருந்துகள் - சிலருக்கு முக்கினுள் சதை வளர்ச்சியை ஊக்குவிக்கவும் கூடும். எனவே, உங்கள் ஒவ்வாத்தன்மைக்குக் காரணம் என்ன என்பதை அறிந்து, அவற்றைத் தவிர்ப்பதும் - மருந்துகளை சரிவர உபயோகிப்பதும் சரியான வழி.


***கேள்வி:- எனது மனைவி வயது 50. அவருக்குக் காதினுள் இரைச்சல் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கிறது. இரண்டு, மூன்று ENT எனப்படும் விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுள்ளோம். சிகிச்சையும் தந்தார்கள். ஆனால் குணமடையவில்லை. Audio Gram என்கின்ற காது பரிசோதனை மற்றும் MRI Scan என்கின்ற மூளை பரிசோதனைகள் செய்தும் அவற்றில் எதுவித கோளாறும் கண்டறியப்படவில்லை. இவரது காது இரைச்சல் மாதவிலக்குக் காலங்களில் அதிகமாகவுள்ளது. பரிகாரம் கூறவும்?***



பதில்:- கேட்கும் பாதையில் (Auditory or Hearing Pathway), நடுக்காது (Middle Ear), உட்காது (Inner ear) காதுநரம்பு (Auditory Nerve), மூளை என்பவற்றில் ஏற்படும் சாதாரண சிறிய அல்லது பெரிய தாக்கத்தால் ஏற்படுவது காது இரைச்சல்.


இதனை (Tinnitus) என்று மருத்துவர்கள் அழைப்பார்கள். இங்கு நடைபெறும் கோளாறு என்னவென்றால் - எதுவித வெளிச்சத்தமும் இல்லாத பொழுதே, ஏதோ ஒரு ஒலி கேட்பதாக இந்தப் பாதை மூளையை நம்பவைக்கிறது.

இந்தக் கோளாறை Audio Gram பலிசோதனையால் கண்டறியமுடியாது. சிலவேளைகளில் இந்தப் பிரச்சினைக்கு இந்தப் பாதையில் ஏற்படும் இரத்த விநியோகத்தில் ஏற்படுகின்ற தடைகள் காரணமாக இருக்கலாம். இதற்குத் தரப்படும் மருந்துகள் இந்த இரைச்சலை குறைக்குமே ஒழிய குணப்படுத்தாது. காலம் செல்லச் செல்ல நோயாளி - இதே இரைச்சலோடு வாழக்கற்றுக்கொள்கின்றார். இப்படிச் சொல்லும்போது நோய் குணமாயிற்று என்ற கருத்தல்ல. எப்படி ரயில் பாதைக்கருகே குடியிருப்பவர்களுக்கு ரயில்கள் செல்லும்போது ஏற்படும் இரைச்சல் ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்து, பின்னர் படிப்படியாக பழகிப் போகின்றதோ - அப்படியே இந்த இரைச்சலும் மறைந்தோ - மரத்தோ அல்லது மறந்தோ போகும்.




மாதவிலக்கின்போது இரைச்சல் அதிகமாக இருப்பதால் இந்தக் கோளாறு ஹோமோன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். எனவே விரைவில் மாதவிலக்கு நிற்கும்போது இது குணமாகலாம் என்ற நம்பிக்கை உள்ளது.


***கேள்வி:- ஆண். வயது 23. எனது குடும்பத்தில் இதயநோய் பாதிப்புள்ளவர்கள் உள்ளனர். எனது தந்தைக்கு Coronary Artery Disease என்கின்ற இதய நாளங்களில் அடைப்பு கோளாறு உள்ளது. அதற்கு Angioplasty என்கின்ற பலூன் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இது தவிர எனது தாத்தா வழி பாட்டி மற்றும் தந்தையின் சகோதரன் இருவரும் மாரடைப்பு நோயினால் மரணமடைந்துள்ளனர். எனக்கு 23 வயதாக இருந்தாலும் - சமீபத்தில் எனது கொலஸ்ரோல் அளவை பரிசோதித்த போது அளவு அதிகமாகக் காணப்பட்டது. இந்த கொலஸ்ரோல் அதிகரிப்புக்கு நான் சிகிச்சை பெறவேண்டுமா? கடுமையான உடற்பயிற்சி இதய நோய்களைத் தடுக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். மருந்துகளாலும், உடற்பயிற்சியாலும் இதய நோய் எனக்கு ஏற்படாமல் தடுக்கமுடியுமா? சமீப காலமாக எனக்கு 'தொப்பை'யும் ஏற்பட்டுள்ளது. ஆலோசனை வேண்டுகின்றேன்?***




பதில்:- உங்கள் இளம் வயது மற்றும் இதய நோய் குடும்பத்தில் உள்ளது போன்ற காரணங்களால் நீங்கள் உங்கள் வாழ்க்கை முறையை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. தினமும் கிரமமாக உடற்பயிற்சி - முக்கியமாக தினமும் 30 நிமிடத்திற்கு நடைப்பயிற்சியும் அவசியம். உங்கள் உணவு முறையில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டியுள்ளது.

இனிப்புப் பதார்த்தங்களைத் தவிர்த்தல், எண்ணெய், கொழுப்பு உணவுகளைத் தவிர்த்தல் என்பன முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியவை. மேலும் உங்கள் எடையைக் குறைத்து - உங்கள் உயரத்திற்கு ஏற்ற எடையைப் பேணவேண்டும். பொதுவாக உங்கள் உயரத்தின் சென்ரிமீற்றர் அளவிலிருந்து 100 ஆகக் குறைந்தால் - அதுதான் உங்கள் எடை (கிலோகிராமில்) என்பது பொது வழக்கு. எதற்கும் உங்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெறவும். முன்னர் இதய நோய்களுக்கு பல காரணங்களைக் கூறாவிட்டாலும் தற்பொழுது Metabolic Syndrome என்ற பிரிவின் கீழ் இதயநோயை வகுத்திருக்கிறார்கள். வயிறு சுற்றளவு 90 சென்ரிமீற்றர் ஆண்களுக்கும், 120 சென்ரிமீற்றர் பெண்களுக்கும் இருக்கவேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவிற்கும் அதிகமாக இருப்பவர்களுக்கு இதயநோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்பது அறியப்பட்டுள்ளது. An Increase In Waist Line, Decrease the Life Line அதாவது, இடுப்பளவு அதிகரிப்பு ஆயுளைக் குறைக்கும் என்று மருத்துவத்தில் கூறப்படுகிறது. இதுதவிர இந்த தொப்பை அளவு கொலஸ்ரோலின் அதிகரிப்பு, நீரிழிவு நோய் என்பன இதய நோய்களை வரவழைக்கும். உங்கள் சரியான கொலஸ்ரோல் அளவீடுகள் தெரியாமல், கொலஸ்ரோலுக்கு மருந்துகள் அவசியமா என்பது கூறமுடியாது. எனவே, உங்கள் மருத்துவரின் நேரடி ஆலோசனையைப் பெறவும்.

***கேள்வி:- ஆண். வயது 42. இதுவரை எனக்கு எதுவித மருத்துவப் பிரச்சினைகளும் ஏற்படவில்லை. ஆனால், எனக்கு முழு மருத்துவப் பரிசோதனை செய்யவிரும்புகிறேன். என்ன விதமான பரிசோதனை நான் செய்யவேண்டும்?***



பதில்:- நீங்கள் உங்கள் விருப்பத்திற்கு போய் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதால் எதுவித பலனும் ஏற்படாது. முதலில் உங்கள் குடும்ப வைத்தியர் அல்லது பொது மருத்துவரின் ஆலோசனையைப் பெறவேண்டும். அவர் உடலியல் ரீதியில் உங்களைப் பரிசோதித்து, பொருத்தமான மருத்துவ பரிசோதனையைச் செய்யச்சொல்வார். மேலும் உங்கள் பரிசோதனை முடிவுகளைப் பார்த்து அதிலிருந்து முடிவுகளை எடுக்க உங்கள் மருத்துவரால் மட்டுமே முடியும்.

எனினும், உங்கள் வினாவுக்குப் பொதுவாகப் பதிலளிக்க எண்ணியுள்ளேன். பொதுவாவே மருத்துவ பரிசோதனையின்போது, பொது இரத்தப் பரிசோதனை (Haemogram), நீரிழிவுப் பரிசோதனை, ஈரல் சம்பந்தப்பட்ட முழுப் பரிசோதனைகள் (Liver Profile), சிறுநீரக முழுப்பரிசோதனை (Renal Profile), கொழுப்புப் பரிசோதனை (Lipid Profile), யூலிக் அமிலப் பரிசோதனை, மார்பு எக்ஸ்ரே, ECG என்ற இதய பதிவு, மலப் பரிசோதனை என்ற ஆரம்ப பரிசோதனைகளுடன் Tread Mill Test என்கின்ற இதய வலு பரிசோதனை, Hepatitis B Test தைரொய்ட் பரிசோதனைகள், ஸ்கான் பரிசோதனைகள் என்பவையும் முக்கியம்.

இவை தவிர, நாற்பது வயதுக்குப் பின்னர் கண் பரிசோதனை அவசியம். கண் அழுத்த நோய் (Glancoma) மற்றும் விழிப்புரை நோய் (Cataract) என்பவை நாற்பது வயதுக்குப் பின்னர் ஏற்படும் கோளாறுகள். இது தவிர Dexa scan என்கின்ற எலும்பில் கல்சியம் குறைவு பற்றி அறியும் பரிசோதனையும் இங்கு சேர்க்கப்படவேண்டும்.

இது எனது பொதுக்கருத்து. உங்கள் மருத்துவர் உங்களைப் பரிசோதித்து - இது தவிர வேறு விசேட பரிசோதனைகளுக்கும் எழுதித் தரலாம்.

இவற்றிற்கு நிறையச் செலவாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். சில மருத்துவர்கள் இந்த மருத்துவ பரிசோதனைகளை Package முறையில் கொஞ்சம் குறைந்த செலவில் செய்கின்றனர். மேலும், சில இன்சுரன்ஸ் (காப்புறுதி) நிறுவனங்கள் இப்படியான மருத்துவப் பரிசோதனைகளுக்கு பணம் செலுத்துவதில்லை.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ்.அருள் ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ
ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை கொழும்பு - 14.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தற்பொழுது வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். தனது வெளிநாட்டுப் பயணத்தின் போது, இலங்கைக்கு எதிரான பிரசாரங்களில் அவர் ஈடுபட்டு வருகிறார் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதி கட்டத்தில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றனவா என்பதை உறுதி செய்வதற்கு சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் கடந்த புதன்கிழமை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியிருந்தார். ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை நிறுத்தியிருந்தது. அமெரிக்காவும் இத்தகைய வரிச்சலுகை நிறுத்தியுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக பொதுச்செயலாளர் பான் - கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுக்கு அமெரிக்கா உட்படப் பெரும்பாலான மேற்குநாடுகள்


# சுடர் ஒளி

**31, ஒக்டோபர் - 06, நவம்பர், 2010**

85, ஜெயந்தமல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0115738005
பாக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com


## அச்சம் ஏன்?

ஆதரவு தெரிவித்து வருகின்றன. இப்படியான நிலையிலேயே ரணில் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் விதத்தில் ரணில் நடந்துகொள்கிறார் என்று அரசுக்கு ஆதரவான தரப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.


புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் என்று இலங்கை மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட சர்சேதப் போர் விதிகள் மீறப்பட்டுள்ளன என்றும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இக்குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரித்து தமக்கு ஆலோசனை தெரிவிக்க மூவர் அடங்கிய குழுவை பான் - கீ மூன் நியமித்துள்ளார். இலங்கை அரசும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்துள்ளது. அத்துடன் தன்மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் இலங்கை அரசு நிராகரித்துவிட்டது. யுத்தக் குற்றம் எதுவும் இழைக்கப்படவில்லை என்று இலங்கை அடித்துக்கூறிவிட்டது.

இப்படியான நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் இலங்கையின் கௌரவத்துக்கு மாசு விளைவிக்கும் வகையில் வெளிநாடுகளில் பிரசாரம் செய்கிறார் என்று குற்றஞ்சாட்டுவதில் அர்த்தமில்லை. இலங்கை குற்றம் இழைக்கவில்லை என்கிறது. எவருக்குமே அஞ்சத்தேவையில்லை.

# ஆர்.ஜி!

## ராகுலை நெருக்கமான நண்பர்கள் வட்டாரம் அழைப்பது இப்படித்தான்!


ராகுல் காந்தி

''எங்கள் கட்சியின் எதிர் காலமே இந்த இளைஞனை நம்பித்தான் இருக்கிறது'' என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னால், ராகுல் வெட்கப்பட்டுச் சிரிக்கிறார். ''என்னை இளைஞன் என்று சொல்லாதீர்கள். இந்தியாவின் மக்கள் தொகையை வயது அடிப்படையில் கணக்கிட்டால், நான் வயதானவன். எனக்கு 40 வயது ஆகிறது'' என்று மறைக்காமல் சொல்லும் உண்மை விளம்பியாகவும் ராகுல் இருக்கிறார்.

''நீங்கள் பிரதமராக முடியுமா?'' என்று கேட்டால், ''வருங்காலத்தைப்பற்றி யாரால் என்ன சொல்ல முடியும்?'' என்பது ராகுலின் சமாளிப்பு. ''பிரதமராக ஆவது உங்களது தலைவிதியாக இருந்தால்...'' என்று தொடர்ந்தால், ''தலைவிதியில் எனக்கு நம்பிக்கை இல்லை. தலைவிதி என்பது பழமைவாதிகளின் கூற்று. கடின உழைப்பில்தான் எனக்கு நம்பிக்கை உள்ளது'' எனத் தீர்க்கமான பதில்!

அது உண்மைதான். மாதத்தில் மூன்று வாரங்கள், இந்தியாவின் ஏதாவது ஓர் ஊரில் புழுதி படிந்த மக்களுடனோ அல்லது மாணவர் கூட்டத்துடனோ உரையாடிக் கொண்டே இருக்கிறார் ராகுல் காந்தி. ''பரந்து விரிந்த இந்த தேசத்தின் எந்தப் பகுதியையும் பார்க்காமல், நான் எப்படி இந்த நாட்டுக்காகப் பாடுபடுவதாகச் சொல்ல முடியும்?'' என்பது ராகுலின் விளக்கம். மகாத்மா காந்தியின் எழுத்துக்களில் இருந்துதான் ராகுல் இந்த வழியைத் தேர்ந்து எடுத்தாராம்.

''தென் ஆபிரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு வந்த காந்தி, தனது குருவான கோபாலகிருஷ்ண கோகலேவைச் சந்தித்தார். 'நீ இந்தியாவை முதலில் சுற்றிப் பார். அதற்குப் பிறகு, தீவிர அரசியலில் இறங்கு' என்றாராம் கோகலே. காந்தி அதன் பிறகுதான் இந்தியாவை வலம் வர ஆரம்பித்தாராம். இதையே, தனது பாணியாகவும் எடுத்துக்கொண்டார் ராகுல். சோனியா தனது மகனைப் பார்க்கக்கூட பல நாட்கள் காத்திருக்க வேண்டும். அந்த அளவுக்கு சுற்றுப்பயணத்திலேயே இருக்கும் ராகுலுக்கு, தங்கை பிரியங்கா என்றால் பாசம் அதிகம். அநேகமாக, தினமும் பிரியங்காவுடன் போனில் பேசுவதைப் பழக்கமாக வைத்து இருக்கிறார். ''எனது சகோதரியைவிட எனக்கு நெருக்கமானவர் யாரும் இல்லை'' என்று சொல்லும் அளவு பந்தம்.

ராகுல் காந்தியின் பயணங்கள் அனைத்தும் கடைசி நிமிடங்கள் வரை ரகசியமாக வைக்கப்படுகின்றன. மூன்று நாட்களுக்கு முன்னதாகத்தான் விளம்பரமே செய்ய வேண்டும் என்பது இவரது கட்டளை. இந்தப் பயணங்களை, எண் 12, துக்ளக் லேன் வீதியில் உள்ள ராகுலின் அலுவலகத்தில்தான் திட்டமிடுகிறார்கள். இங்குதான் ராகுலின் ப்ரைம் டீம் என்று சொல்லப்படும் ஒரு டஜன் ஆட்கள் இருக்கிறார்கள். பவன் ஜிதேந்திர சின்கா, பங்கஜ் சங்கர், ஜித்தின் பிரசாதா, மீனாட்சி நடராஜன் ஆகியவர்கள் இதில் முக்கியமானவர்கள். இந்திய அரசியல் வரலாறு, இயற்கை வளம் முதல் இன்றைய வரட்சி நிலைமை வரை அத்தனை தகவல்களையும் முழுமையாகத் தொகுத்துவைத்திருக்கும் இவர்கள்தான், ராகுலுக்கு வகுப்பு எடுக்கிறார்கள். தனக்குத் தெரிய வரும் ஒரு வரிச் செய்தியைப்பற்றிய முழு விவரங்களையும் இவர்களிடம் இருந்து கேட்டுப் பெறுகிறார் ராகுல்.

''இந்தியாவைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்பது ராகுலின் ஒரு வரிக் கொள்கை. அதற்கு, இந்திய அரசியல் தூய்மை பெற வேண்டும். அதிலும் குறிப்பாக, காங்கிரஸ் கட்சி தூய்மை பெற வேண்டும். இந்த அடிப்படையில் இளைஞர் காங்கிரஸை ராகுல் கையில் எடுத்திருக்கிறார். அவரால் உருவாக்கப்படும் இந்த இளைஞர்கள்தான் அடுத்த 15 ஆண்டுகள் கழித்து காங்கிரஸ் கட்சியை வழிநடத்துபவர்களாக இருப்பார்கள். இன்று ராகுலால் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்களது கையில் கட்சி சென்றால், நிர்வாகம் தூய்மையாகவே இருக்கும். அதை நோக்கியதாக இருக்கிறது ராகுலின் பயணங்கள்'' என்கிறார் இளைஞர் காங்கிரஸின் பொறுப்பாளர்களில் ஒருவரான ஜோதி!

தனக்கு வசதியானவரைத் தலைவராக நியமித்துக்கொள்வதுதான் காங்கிரஸின் நூற்றாண்டு கால வழக்கம். ராகுல் வந்ததும் முதலில் மாற்றியது இதைத்தான். ''யாரையும் டெல்லியில் இருந்து நியமிக்க மாட்டோம். அப்பா கட்சியில் இருக்கிறார் என்பதற்காக, வாரிசுக்கு பதவியை வாரிக் கொடுக்கவும் மாட்டோம்'' என்று ராகுல் அறிவித்தபோது, மூத்த காங்கிரஸ் தலைவர்கள்கூட, 'இது முடியாத காரியம், ஒன்றிரண்டு மாநிலங்களில் நடக்கும். அதற்குப் பிறகு அவ்வளவுதான்' என்றே நினைத்தார்கள். ஆனால், இன்றைக்கு இந்தியாவின் பாதி மாநிலங்களில் இளைஞர் காங்கிரஸுக்கு உறுப்பினர் கார்ட் கொடுத்து, அதில் பாதி இடங்களுக்குத் தேர்தலும் நடத்தி, கட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் வந்துவிட்டனர். ''போலியான உறுப்பினர்கள் வந்துவிடக் கூடாது'' என்று கட்டளையிட்ட ராகுல், அனைத்து உறுப்பினர்களது புகைப்படங்களையும் வாங்கினார். இதுவரை உறுப்பினரான 50 லட்சம் இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களின் படங்களும், முகவரிகளும் அவரிடம் இருக்கின்றன. மேலும், தேர்தலில் வெற்றி பெறுவதற்காக முறைகேடுகள் செய்தவர்களை உடனடியாகக் கட்சியை விட்டு நீக்க வேண்டும் என்பது ராகுலின் உத்தரவு. ''சொந்தக் கட்சியில் ஒரு பதவியைப் பிடிக்கவே இவ்வளவு முறைகேடுகள் செய்தால், பணத்தைக் கையாளும் அதிகாரம் வாய்ந்த அரசுப் பதவிகளை அடைய இவர்கள் என்னவெல்லாம் செய்வார்கள்?'' என்று கேட்கிறாராம் ராகுல். கட்சி எல்லைகளைத் தாண்டி ராகுல் கவனிக்கப்படுவதற்கு ஒரே காரணம், தனது மனதில் பட்டதை வெளிப்படையாகச் சொல்கிறார் என்பதுதான். ''எனக்கும் மாவோயிஸ்ட்டுகளுக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். அவர்கள், மக்களைக் கொல்கிறார்கள். மற்றபடி எங்களுக்குள் மாற்றுக் கருத்துக்கள் இல்லை'' என்று ஒரிஸ்ஸாவில் வைத்து ராகுல் சொன்னார். மும்பையில் மராட்டியர்கள் தவிர, மற்றவர்கள் வெளியேற வேண்டும் என்று சிவசேனா சொன்னபோது, ''அப்படியானால் மும்பை தாக்குதலின்போது தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடியது மற்ற மாநில இந்திய வீரர்களும் தானே? இந்தியர்கள் அனைவருக்கும் இந்தியா சொந்தம்'' என்று சொல்லிவிட்டு, அந்தக் கொந்தளிப்பான சமயத்தில் மும்பைக்குப் போய் பாதுகாப்பற்ற நிலையில், மின்சார ரயிலில் பயணமும் செய்தார். ''இந்து அமைப்பான ஆர்.எஸ்.எஸ்ஸுக்கும் இஸ்லாமிய அமைப்பான சிமிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை'' என்றபோது, பாரதிய ஜனதாவுக்குத் தேள் கொட்டியதுபோல் ஆனது. ''பாகிஸ்தானைப் பிரித்து பங்களாதேஷை உருவாக்கியது எங்கள் குடும்பத்தின் சாதனை'' என்று சொன்னதைக் கேட்டு, பாகிஸ்தான் பகீரென ஆனது.

தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால், ''ரஜினி காங்கிரஸில் இணைவாரா?'' என்ற கேள்விக்கு, ''அவர் என்ன கிரிமினலா? இதில் யாரும் இணையலாம்'' என்றார் ராகுல். ''நடிகர் விஜய் இளைஞர் காங்கிரஸில் இணையும் வயதைத் தாண்டிவிட்டார்'' என்று கிண்டல் அடித்ததும் ராகுல்தான். பக்குவம் இல்லாத பேச்சு என்று பெரியவர்கள் கிண்டலடித்தாலும், இளைஞர்களுக்கு இதுதான் பிடித்திருக்கிறது.

ஆர்.ஜியின் வளர்ச்சியும் அதில்தான் இருக்கிறது!

## கதம்ப வனத்தில் நடந்த செய்திகள்...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புத் என்ற நரகத்துக்குப் போவார்களென்று சாஸ்திரங்கள் திண்ணம் கூறுகின்றனவே! உமது புத்திரர்களே போரில் மடியும்படி நேர்ந்தாலும் நேரிடக்கூடுமே! அப்போது நீர் எப்படியெல்லாம் கஷ்டப்படுவீரோ, அறிகிலேன். தேவரீருடைய பிராணனுக்கே ஆபத்தல்லவா? நாங்கள் என்ன செய்வோம்? இனி நான் சுவர்ணா தேவியின் முகத்தில் எப்படி விழிப்பேன்?'' என்று சொல்லி கோவென்று விம்மி விம்மி அழுதாள்.

குண்டோதரராயன் - ''ஏன் அந்த வீர வர்மன் நம்மீது படையெடுத்து வரப் போகிறான்? அதை முதலாவது சொல்லு'' என்றுமினான்.

அப்போது விருத்திமதி - ''தங்களுடைய சிப்பாய்கள் வீரவர்மனுடைய தாய்க்கு சமானமான செவிலித்தாயைப் பிடித்துச் சிறைப்படுத்திவிட்டார்கள்! இந்த விஷயத்தை அவன் கேட்டால், க்ஷணம்கூட பொறுக்கமாட்டான். யுத்தம் வருவது நிச்சயம்'' என்று சொன்னாள்.

இது கேட்ட குண்டோதர சிங்க மஹா சிங்கராயன் '' எனது சிப்பாய்களால் கைது செய்யப்பட்ட வீரவர்மனுடைய செவிலித் தாயின் நாமம் யாது?'' என்று வினவினான்.

''நரிச்சி நல்லதங்கையம்மன்'' என்று விருத்திமது சொன்னாள். இதைக் கேட்ட குண்டோதரசிங்கராய மஹாசிங்கன் கட கட கட கட கட கட வென்று சிரிக்க ஆரம்பித்தான். (முற்றும்)


## சட்டக்கல்லூரி அனுமதி

நீங்கள் G.C.E. A/L சித்தியடைந்தவரா?. G.C.E. O/L, தமிழ். ஆங்கிலப் பாடங்களில் C சித்தியுள்ளவரா? ஆம். எனில் மூன்றே வருடங்களில் நீங்களும் ஒரு சட்டத்தரணியாகும் ஒரு அரிய சந்தர்ப்பம்.
நுழைவுப் பரீட்சைக்கான வகுப்புகள் ஆரம்பம் 07.11.2010 (9.00Am)

**Royal Academy**
Sangamitha Mawatha, Colombo - 13.
Lecturer : MKM.Sajath. 0773223334

## வரலாறாகும் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிக்கையிடுங்கள்



# எழுத்தாளன் பற்றிய ஒரு பார்வை

எழுதுபவர்கள் எல்லோரும் எழுத்தாளர்கள் ஆகிவிட முடியுமா? தாம் வாழுகின்ற சமுதாயத்தின்கண் காணப்படுகின்ற தரிசனங்களை மக்கள் மனங்களைக் கவரும் வண்ணம் எடுத்துக்காட்டும் இயல்பினனாக இருப்பதோடு, தமது எழுத்தின் பண்புக்கேற்ப வாழ்ந்துகாட்டும் வலிமையுள்ளவனாகவும் எழுத்தாளன் இருக்கவேண்டும். கற்பனையில் மிதந்துகொண்டு காலத்தை வீணடிக்காமல், யதார்த்த வாழ்க்கையின் உள்பரிமாணங்களை சமுதாய நன்மை கருதி எடுத்தாளும் வல்லமையுள்ளவனாக இருப்பதோடு, வழிகாட்டியாகவும் இருந்து செயற்பட வேண்டும்.

கடந்தகால வரலாற்றுப் பார்வையில் பலர் தம்மை எழுத்தாளர்கள் என்று சொல்லிக்கொண்டு தங்களை விளம்பரப்படுத்துவதிலேயே காலத்தைக் கழித்துள்ளனர். வேறு சிலர் ஒருவருக்கு ஒருவர் முதுகு சொறிவதையே குறிக்கோளாகக்கொண்டு இயங்கியுள்ளனர். சிலர் தமது எழுத்துகளுக்குப் பரிசுகிடைத்துவிட வேண்டும் என்று ஆலாய்பறந்து திரிந்துள்ளனர். ஓர் எழுத்தாளனுக்குப் பரிசு கிடைப்பதை விரும்பாதவர்கள் அதைக் கிடைக்க விடாமல் செய்வதில் தீவிரமாகவும் செயற்பட்டு வந்துள்ளார்கள். எழுத்தாளர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டு பொறாமை பிடித்தவர்களாகவும் வஞ்சகம் கொண்டவர்களாகவும் இருப்பவர்களை இச்சமுதாயம் கண்டுள்ளது. எழுத்தாளனைப் பற்றிகுறை சொல்வதும் அவன் எழுத்துக்களை நையாண்டி செய்வதும் தமது பிழைப்பாகக் கொண்டு அலைவோரையும் பார்க்கின்றோம். இப்படியாகப் பலதரப்பட்டவர்கள் வாழுகின்ற சமுதாயத்தில், நேர்மையுடனும் மனிதாபிமானத்துடனும் ஒழுக்கசீலர்களாக வாழ்ந்துகொண்டு மக்களுக்காக மக்கள் இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களே உண்மையான எழுத்தாளர்கள். புகழ், விருதுகள், பட்டங்கள் என்பவற்றுக்காக அலையாமல், தனது எழுத்துக்கள் மூலம் சமுதாய அந்தஸ்தைப் பெற்றிருப்பவனே எழுத்தாளன் என மதிக்கப்படுகின்றான்.

விமர்சனம்தான் ஓர் எழுத்தாளனை, அவனது எழுத்துக்களை வாசகர் முன் நிறுத்தவல்லது. விமர்சகன் நடுநிலையில் நின்று தனது கண்ணோட்டத்தைச் செலுத்தி உள்ளதை உள்ளபடி நிறுவுவானாகில் அது அந்த எழுத்தாளனுக்குப் பலம்சேர்க்கவல்லது. போலியான விமர்சனங்களால் ஓர் எழுத்தாளனை இனங்காணமுடியாது. மார்க்சிய கண்ணோட்டத்தில் நின்று நேர்மையான விமர்சனத்தை முன்வைத்தவர்கள் வரிசையில் பேராசிரியர் க.கைலாசபதி முன்னிற்கின்றார். அவர் முற்போக்கான எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களின் படைப்புகளைத் தமது விமர்சனப் பார்வைக்கு உள்படுத்தினார். அவர் வாழ்ந்தகாலத்தில் அவரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அவர் இருந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து சிலர் தம்மையும் முற்போக்காளராகக் காட்டிக் கொண்டார்கள். அவரின் மறைவுக்குப் பின்பு பலர் தமது கொள்கையைக் கைவிட்டுச் சுயநலவாதிகளாக மாறி பாதை தவறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் சந்தர்ப்பவாதிகள்.

மேலும் பேராசிரியர் க.கைலாசபதி தங்களைத் தூக்கிவிடவில்லை என்ற குற்றச்சாட்டை சிலர் முன்வைத்தார்கள். அவருடைய கண்ணோட்டத்தில் குற்றம் சுமத்துபவர்களின் எழுத்தாக்கங்கள் சமுதாயத்துக்கு ஒவ்வாததாக இருந்தமையால் அவற்றைக்காணாமல் விட்டுவிட்டார் போலும். இதை இன்றுவரை உணராமல் இருப்பது விசித்திரமான நிலைப்பாடு என்றே சொல்ல வேண்டும். எழுத்தாளன் என்பவன் மற்றவர்களுடைய சிபாரிசுகளை நம்பி எழுதாமல், தமது படைப்பின் திறனை முன்வைத்து வாசகர்களைக் கவர்ந்து, தனது இருப்பை முன்நிறுத்த வேண்டும். எழுத்தையும் எழுத்தாளனையும் சரியாக இனம் கண்டு கொள்ளக்கூடியவர்கள் உண்மையான வாசகர்களே என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

இப்படிப் பலவகையான எண்ணக்கருத்துகளுக்கு முன் ஓர் எழுத்தாளன் எப்படி இனங்காணப்படுகிறான் என்று நோக்கும் போது "கலாசார இலக்கிய விமர்சகர்களின் தெளிந்த பார்வைக்கேற்ப வெற்றிகரமான எழுத்தாளர் ஒருவராவதற்கு மூன்று விடயங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவையாவன: மறைந்துள்ள ஆற்றல், ஆக்கத்திறன் மற்றும் நிதமும் ஈடுபாட்டுப் பரீட்சயம் பெறுதல் ஆகிய மூன்று விடயங்களும் ஆகும்.

சாதாரண மனிதன் சமுதாயத்தைப் பார்க்கும் பார்வைக்கும், எழுத்தாளன் பார்க்கும் பார்வைக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. சிறிய விடயங்களையும் ஆழமாக அவதானிக்கும் திறன் உண்மையான எழுத்தாளனுக்கு உண்டு. ஆக்கத்தின் கருவைத் தேர்ந்தெடுத்து, அதைச் சொல்லும் திறன், அத்தோடு வாசகர்களுக்கு எவ்வித நடையில் அவற்றை முன்வைக்கலாம் என்ற தீர்க்கதரிசனம் ஆகிய சாத்தியமான விடயங்களை முன்னிறுத்தி எழுதும் எழுத்தாளர்களையும் நாம் தரிசிக்கின்றோம்.

இன்றைய எழுத்தாளர் சிலரைப் பார்க்கும்போது மிகுந்த வேடிக்கையாக இருக்கிறது. அளவுக்கு அதிகமாக எழுதினால்தான் தன்னை எழுத்தாளன் என்று சொல்லுவார்கள் என்ற ஒரு தவறான, ஆரோக்கியமற்ற எண்ணத்துடன் பலரின் சிபாரிசுகளைப் பெற்று பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியிட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக்கொள்வதற்காக என்னென்னெல்லாமோ செய்கிறார்கள். பரிசு பெற்றவர்கள் எல்லோரும் சிறந்த எழுத்தாளர்களுமல்லர். பெறாதவர்கள் தலைசிறந்த எழுத்தாளர்களாக இன்றும் மதிக்கப்படுகின்றார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக மூத்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன் உயர்ந்து நிற்கின்றார். நூல்களை எழுதிப் பதிப்பித்து வெளியிடும் எல்லோரையும் எழுத்தாளர்கள் என்று சொல்லிவிட முடியாது. புற்றீசல்களைப் போல வெளிவந்து கொண்டிருக்கும் நூல்கள் எதையும் சாதித்துவிடப்போவதுமில்லை. புத்தகங்களை வெளியிடுபவர்கள் பணச்சடங்கு வைத்துத் தமது சரக்குகளை மற்றவர்கள் தலையில் கட்டி விடுகின்றார்கள். வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்து வருகின்ற காலகட்டத்தில் பயனுள்ள ஆக்கங்களை மட்டும் நூலுருப்பெற வைப்பதே உகந்த செயலாகும். பயனுள்ள மக்கள் படைப்புகளை வெளிக்கொணரும் எழுத்தாளர்கள் என்றும் மதிக்கப்படுவர். எழுத்தாளர்கள் பட்டியல் தற்பொழுது நீண்டு கொண்டுவருவதாகச் சிலர் கூறிவருகின்றார்கள். இவர்களில் எத்தனை பேர் மனிதத்தை மதிப்பவர்களாக இருக்கின்றார்கள்? சிலர் முகவரி தெரியாமல் சென்றுவிட்டார்கள்.




எண்பதுகளுக்கு முற்பட்ட காலத்தில் வெளிவந்த இலங்கைச் சிற்றிதழ்கள் ஆக்கபூர்வமான இலக்கியப் பணியை மேற்கொண்டிருந்தன. தரமான எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தன. அத்தகைய எழுத்தாளர்களின் நாமங்களே இன்றும் இலக்கிய உலகில் பேசப்படுகின்றன. எழுத்தின் வலிமையால் அவர்களைச் சமுதாயம் எழுத்தாளர்களாக அங்கீகரித்துள்ளது.

இலங்கையின் இலக்கிய வரலாற்றில் 1930 களுக்கு பின்பு இலக்கியத்தில் ஏற்பட்ட நவீன மாற்றம் புதிய வரவுகளுக்கு வழிசமைத்தது. அந்தவகையில் புதிய துறைகள் வளர்ச்சியடையத் தொடங்கின. நாவல், சிறுகதை, கவிதை (புதுக்கவிதை), கட்டுரை, விமர்சனம், மொழிபெயர்ப்பு என்ற துறைகளின்பால் எழுத்தாளர்களின் கவனம் குவியப்பட்டது. இத்துறைகளில் பலர் எழுத முற்பட்டாலும் எல்லோரையும் எழுத்தாளர்கள் என்று சமுதாயம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு சிலரையே இனங்கண்டு எழுத்தாளர்கள் என்று இலக்கிய உலகம் ஏற்றுக்கொண்டது என்பதே யதார்த்தமான உண்மை. உலகமயமாக்கலின் பயனாக வறிய நாடுகள் மேலும் சுரண்டப்பட்டு வருவதை அவதானிக்க முடிவதால், அதுபற்றிய தெளிந்த அறிவை மக்களுக்கு ஊட்டவேண்டிய கட்டாயமும் தேவையும் ஏற்பட்டுள்ளது. கல்வியே வியாபாரப் பண்டமாக ஆக்கப்பட்ட நிலையில் தமிழ் மொழிக் கல்வியின் நிலை கேள்விக்குறியாக நிற்கின்றது. இந்த ஆபத்தான நிலையை உணராமல் பலர் வாளாவிருக்கின்றனர். மேலும் நவகாலனித்துவம், பின்நவீனத்துவம் போன்ற புதிய கோட்பாடுகள் பலரைத்தடுமாற வைத்துள்ளது. இத்தகைய போக்குகள் சிலரை மயங்க வைத்துள்ளது என்றே சொல்லவேண்டும்.

இத்தகைய பல எதிர்வினைகள் இடைமறித்தபோதிலும் மனந்தளராது ஆக்க இலக்கியப் படைப்புகளில் கால்பதித்து தொடர்ந்தும் எழுதிவரும் ஒருசில எழுத்தாளர்கள் நம்முன் இன்றும் இருக்கிறார்கள். அவர்களை இனங்காணவேண்டிய வாசகர்களும் பரந்தளவில் இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் அவர்களை இன்றும் மதிக்கின்றார்கள். வாசிப்புக் கலாசாரம் அரிதாகிப்போய்க் கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்தில், எழுதப்படுகின்ற எல்லாம் வாசிக்கப்படுகின்றனவா? என்றால் இல்லையென்றே கூறமுடியும். இந்த லட்சணத்தில் இன்று இலங்கையில் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுசஞ்சிகைகள், தேசியப் பத்திரிகைகள், பிராந்தியப் பத்திரிகைகள் என்று எல்லாமே இலக்கிய சம்பந்தமான படைப்புகளை வெளியிடப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் எத்தனைபேர் முழுமையாக வாசிக்கின்றார்கள்? அவசரமான உலகத்தில் எல்லோரும் ஆலாய் பறக்கிறார்கள். இவர்களுக்கு வாசிப்பதற்கு நேரம் கிடைக்குமா? இன்றைய யதார்த்தத்தைப் புரிந்து கொண்டோமானால் இவற்றின் உள்ளார்ந்த கருத்து நிலையைப் பெற்றுக்கொண்டவர்களாவோம்.

எழுத்தாளன் என்பவன் தன்னைச் சுற்றியிருக்கிற மக்களின் வாழ்க்கையை முற்றிலும் உள்வாங்கியவனாய் அவற்றில் இழையோடிப்போயுள்ள சம்பவங்களைக் கதைக்கருவாகக் கொண்டு மண்வாசனையுடன் எளியமொழிநடையில் யதார்த்தப் போக்குடன் வாசகர் மனதில் உத்வேகத்தை ஏற்படுத்தும் வகையில் தனது படைப்புகளை வெளிக்கொண்டுவரும் ஆற்றல் உள்ளவனாக இருக்கவேண்டும். ✸

# கதம்ப வனத்தில் நடந்த செய்திகள்

**பாரதியார் கதை தொடர்ச்சி**
**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

மேலும் கீழும் அன்பினால் சமத்துவத்தை அடைகின்றன. உன்னைப் போலே குணத்திலும் நலத்திலும் சிறந்த சிங்கச்சிமார் எத்தனையோ பேர் உலகத்தில் இருக்கக்கூடும். உனக்கு அவர்கள் எல்லோரையும் விட என்மேலே அதிக அன்பு உண்டாகியிருக்கிறது. நான் கீழ்க் குலத்திலே பிறந்தாலும், எப்போதும் என் கண்களில் பதுமை போல உன்னை வைத்துக் கொண்டு போற்றுவதால், நான் மகிமைபெற்று உன்னுடைய அன்புக்கு பாத்திரமானேன். எனக்கு சரியான கஷ்டம் நேரிட்டிருக்கும் போது, நீ சகித்துக்கொண்டிருப்பது நியாயமன்று. எனக்கு நீயே துணை, நீயே தாய், தந்தை, தெய்வம், எனக்கு உன்னையன்றி இந்த உலகத்தில் வேறு கதி கிடையாது. நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்." என்று சொல்லிக் கோவென்றலறி அழுதாள். அப்போது சிங்கச்சி சுவர்ணாதேவி அவளை சமாதானப்படுத்தி விட்டு, உடனே பக்கத்திலிருந்த பாங்கி ஒருத்தியை கூவி- "பெண்ணே, நீ போய் ராஜ சிங்கரை நான் அழைத்து வரச் சொன்னதாகச் சொல்லு. உடனே கூட்டி வா." என்றாள்.

சாயங்காலம் ; பொழுது புகுந்து விட்டது. சிங்ககுண்டோதரன் தனது இராஜதானியாகிய கதம்ப நகரத்திற்கு சமீபத்தில் ஓடும் நர்மதா நதியில், ஸ்நானம் செய்து முடித்துவிட்டு ஸந்தியா வந்தனம் பண்ணிக்கொண்டிருந்தான். அந்த சமயத்தில் பாங்கி போய் காலில் விழுந்தாள்.

"என்ன சங்கதி?" என்று கேட்டான்.

"பெரிய ஆபத்தாம். இன்னதென்று எனக்குத் தெரியாது. சுவர்ணாதேவி தேவரீரை உடனே அழைத்து வரும்படி கட்டளையிட்டார்." பயந்து நடுங்கிப் போய் குண்டோதர மகா சிங்கன், ஸந்தியாவந்தனத்தை பாதியிலே நிறுத்தி விட்டு, அப்படியே ஓடி அந்தப்புரத்திற்கு வந்தது. அங்கு வந்து பார்த்தால் விஷயம் ஒன்றையும் காணவில்லை.

மூன்று ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. மகாதேவி சுவர்ணாதேவி ஒன்றில் அமர்ந்திருந்தாள். மற்றொன்று வெறுமனே கிடந்தது. "என்ன விஷயம்" என்று கேட்டுக் கொண்டே குண்டோதரன் அந்தப்புரத்துக்குள் நுழைந்தான். இவனைக் கண்டவுடன் விருத்திமதியும் சுவர்ணாவும் தம் ஆசனங்களிலிருந்து எழுந்து நின்றனர்.

"என்ன விஷயம், என்ன விஷயம்...?" என்று நெரித்துக் கேட்டான் குண்டோதரன்.

"விருத்தமதியிடம் கேளுங்கள். அவள் சொல்லுவாள்." என்று சுவர்ணா சொன்னாள்.

"ஒஹா! பெரிய விபத்தொன்றும் இல்லை. இந்த நரிச்சி விஷயம் தான். அவளை விடுவிக்கச் சொல்லி எருமைச்சி கேட்க வந்திருக்கிறாள். நாம் மடத்தனமாக அளவுக்கு மிஞ்சி மனம் பதற இடம் கொடுத்து விட்டோம். இருந்தாலும் நம்முடைய பயத்தை வெளியே காண்பிக்கக் கூடாது." என்று மனதினுள் நினைத்துக் கொண்டு மீசையை திருகிவிட்டு, லேசான ராஜநடை நடந்து போய் மூன்றாம் ஆசனத்தில் அமர்ந்து கொண்ட குண்டோதரன் தொண்டையைக் கனைத்து நேராக்கிக் கொண்டு விருத்தமதியை நோக்கி "என்ன விஷயம்" என்று கேட்டான்.

அப்போது விருத்திமதி சொல்லுகிறாள்

"ராஜேஸ்வரா, தங்களுடைய ராஜ்யத்திற்குப் பெரிய விபத்து நேரிட்டிருக்கிறது. தங்கள் மீது வீரவர்மன் படையெடுத்து வரப்போகிறான். இவ்வளவு காலம் இந்த ராஜ்யத்தில் சமாதானமிருந்தது. இப்போது பாழ்த்த யுத்தம் இங்கும் வந்து பிரவேசிக்கப்போகிறது. ஐயோ, நாங்கள் என்ன செய்வோம்? குடிகளை எல்லாம் சுவர்ணாதேவி தன்னுடைய பெற்ற குழந்தைகளுக்கு சமானமாக நினைப்பவளாயிற்றே! அவளுடைய பழக்கத்தால் எனக்கு ராஜ்யத்தினிடம் அருமையான பக்தி உண்டாய்விட்டதே! என் உயிருக்கு மாத்திரம் தீங்கு வருவதாக இருந்தால் நான் அதை பொருட்டாக நினைக்கமாட்டேனே! ராஜ்ய முழுமைக்கும் ஹானி வருகிறதே! ஆஹா! என்செய்வேன்? எத்தனை சுமங்கலிகள் தாலியறுப்பார்கள்! எத்தனை தாய்மார் பிள்ளையற்றுப் போவார்கள்! எத்தனை குழந்தைகள் தந்தையற்றுப் போகும்! எத்தனை தாய்மார்கள் பிள்ளைகளைச் சாகக்கொடுத்து எங்கும் தீராத துக்கத்துக்காளாய், பரத்திலும் புத் என்ற நரகத்தில் விழும்படியாகும்! ஐயோ, புத்திரர்களில்லாத பிதாக்கள்,

(16 ஆம் பக்கம் பார்க்க)

# உலகை அசரவைத்த ஆபாசச் சஞ்சிகையின் சாதனைகளும் வேதனைகளும்




இணைய தளங்களும், வீடியோக்களும் ஆபாசப் படவுலகை ஆக்கிரமிப்பதற்கு முன்பு அப்பட்டமான ஆண், பெண் நிர்வாணப் படங்களை தனது பென்ட் ஹவுஸ் (Penthouse) என்ற சஞ்சிகையில் வெளியிட்டு அசைக்க முடியாத சாம்ராஜ்யம் ஒன்றைத் தனக்கே உரிய பாணியில் நிர்மாணித்துக் கொண்டவர் பொப் குசியோனி. அவரது சமகால எதிரியாக அப்பொழுது விளங்கியது பிரபல ஆபாச சஞ்சிகையான 'பிளே போய்' (Play boy). 'பிளே போய்' பத்திரிகையுடன் போட்டியிட்டு முன்னேற பொப் குசியோனி கையாண்ட வியாபார சூட்சுமங்கள் ஏராளம். 'பிளேபோய்' சஞ்சிகைக்காக நடிக்கும் கவர்ச்சி மிக்க, பாலியல் ஈர்ப்பு கொண்ட யுவதிகளையும், இளைஞர்களையும் தனது 'பென்ட் ஹவுஸ்' பத்திரிகைக்கு சுண்டி இழுத்தார் பொப். அதற்கென பெரும் தொகை பணத்தையும், இதர சலுகைகளையும் வாரி வழங்கினார். அதன் மூலம் வெற்றிகளைக் குவித்தார்.

அவரது கூரிய பார்வையில் எதிரிப் பத்திரிகையான பிளே போயில் வழக்க






மாக நடக்கும் ஒரு குறைபாடு தென்பட்டது. அதனை சரிசெய்து தனது பத்திரிகையில் பிரசுரித்து சாதகமாக்கிக் கொண்டார்.

உலகின் முதலாவது கறுப்பு அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மிஸ். அமெரிக்காவான வெனேஸா வில்லியம்ஸின் அப்பட்டமான நிர்வாணப் படங்களை 1984ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத இதழில் வெளியிட்டதையடுத்து பென்ட் ஹவுஸின் விற்பனை உச்சக் கட்டத்தை அடைந்ததுடன் சக சஞ்சிகைகளை வெகுதூரம் பின் தள்ளிவிட்டது. இப்போது பாடகியாகவும், நடிகையாகவும் விளங்கும் வில்லியம்ஸ் தனது நிர்வாணப் படங்களைப் பகிரங்கப்படுத்தியதையடுத்து அப்போது அவருக்குக் கிடைத்த 'மிஸ் அமெரிக்கா' பட்டம் வாபஸ் பெறப்பட்டது. அவரது நிர்வாணப் படங்களைத் தாங்கிய பென்ட் ஹவுஸின் 1984 செப்டெம்பர் மாத வெளியீடு 60 லட்சம் பிரதிகள் விற்றுத் தீர்ந்ததுடன் 14 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் குவித்து சாதனை படைத்தது.

> பிளேபோயில் தோன்றும் பெண்களும் ஆண்களும் நிர்வாணமாகத் தோன்றும் போதோ அல்லது அந்தரங்க உறவில் ஈடுபடும் போதோ கமெராவைப் பார்த்தவாறு இருப்பதைப் பொப் அவதானித்தார். வாசகர்கள் இப்படங்களைப் பார்க்கும் போது அவை பலரின் மனதில் ஸ்ரூடியோக்களில் எடுக்கப்பட்டவை என்ற உணர்வை ஏற்படுத்தும். அதன்மூலம் வாசகர்களது செக்ஸ் உணர்வும், கிளுகிளுப்பும் ஓரளவு தணிந்து போவதை பொப் உணர்ந்தார். அதனை நிவர்த்தி செய்யும் வண்ணம் தனது சஞ்சிகைக்காக நடிப்பவர்களை கமெராவைப் பார்க்காமல் வேறு திசைகளில் பார்வையைச் செலுத்தச் செய்து படங்களை எடுத்தார். அப்போது அவை தத்ரூபமாக அமைந்தன. அதனையடுத்து பென்ட் ஹவுஸின் விற்பனை எகிறியது.

முன்னாள் ஓவியராகத் திகழ்ந்த பொப் குசியோனி ஓவியர் தொழிலில் விரக்தியடைந்த நிலையில், 1965ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சொந்தமாக 'பென்ட் ஹவுஸ்' சஞ்சிகையை ஆரம்பித்ததுடன் அதன் முதலாவது புகைப்படக் கலைஞராகவும் பணியாற்றினார். 1969ஆம் ஆண்டு பெண்கள் விடுதலை வேட்கையும், பாலியல் புரட்சியும் உச்சக் கட்டத்தில் இருந்த சமயம் பொப் தனது சஞ்சிகையை வெளியிட்டார். அக்காலத்தில் பிரபலமாக விளங்கி வந்த ஹக் ஹெவ்னரின் 'பிளே போய்' சஞ்சிகைக்கு 'பென்ட் ஹவுஸ்' சிம்ம சொப்பனமாக விளங்கியது. தனது சஞ்சிகையில் கிளுகிளுப்பூட்டும் ஆபாசப் படங்களுடன் அப்பட்டமான பாலுறவு சம்பந்தமான பிரசுரங்களையும் வெளியிட்டு பொப் குசியோனி வயது வித்தியாசமின்றி அனைத்து வாசகர்களையும் தன்பால் ஈர்த்துக் கொண்டார்.

பிளேபோயில் தோன்றும் பெண்களும் ஆண்களும் நிர்வாணமாகத் தோன்றும் போதோ அல்லது அந்தரங்க உறவில் ஈடுபடும் போதோ கமெராவைப் பார்த்தவாறு இருப்பதைப் பொப் அவதானித்தார். வாசகர்கள் இப்படங்களைப் பார்க்கும் போது அவை பலரின் மனதில் ஸ்ரூடியோக்களில் எடுக்கப்பட்டவை என்ற உணர்வை ஏற்படுத்தும். அதன்மூலம் வாசகர்களது செக்ஸ் உணர்வும், கிளுகிளுப்பும் ஓரளவு தணிந்து போவதை பொப் உணர்ந்தார். அதனை நிவர்த்தி செய்யும் வண்ணம் தனது சஞ்சிகைக்காக நடிப்பவர்களை கமெராவைப் பார்க்காமல் வேறு திசைகளில் பார்வையைச் செலுத்தச் செய்து படங்களை எடுத்தார். அப்போது அவை தத்ரூபமாக அமைந்தன. அதனையடுத்து பென்ட் ஹவுஸின் விற்பனை எகிறியது.

லண்டனில் 2004ஆம் ஆண்டு 'இன்டிபெண்டன்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றின் போது பொப் பின்வருமாறு தெரிவித்தார்.

''என்னுடைய படங்களில் நடிக்கும் ஆண், பெண்கள் கமெராவைப் பார்க்கத் தடை விதித்தேன். அதன் மூலம் அவர்கள் இயற்கையாகவும், தத்ரூபமாவும் தோன்றி வாசகர்களைக் கவர்ந்தனர். தன்னை மற்றவர்கள் கவனிக்கவில்லை என்ற தோரணையுடன் ஒருவர், விசேடமாகப் பெண்கள் நடிக்கும் போது வாசகர்களுக்கு இனம்புரியாத கிளுகிளுப்பு ஏற்படும் என்பதை நான் உணர்ந்தேன். இந்த விடயத்தை எனது போட்டிப் பத்திரிகைகள் உணராமல் இருந்தன. இது எனக்கு சாதகமாகப் போய்விட்டது'' என்றார்.

'பென்ட் ஹவுஸ்' சஞ்சிகை தனக்கு 400 கோடி டொலர்களை ஈட்டித் தந்துள்ளதாக பொப் ஒருமுறை தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் பிரபல வர்த்தகப் பத்திரிகையான Forbes 1982ஆம் ஆண்டில் சுமார் 400 மில்லியன் டொலருக்கு சொந்தக்காரனான பொப் குசியோனியை உலகின் முதல் 400 செல்வந்தர்களின் பட்டியலில் இட்டது.

தான் சம்பாதித்த பெரும் சொத்துக்களை தவறான முதலீடுகளில் ஈடுபடுத்தியதால் பொப் நாளடைவில் வீழ்ச்சியடையத் தொடங்கினார். அத்துடன் வீடியோக்களும், இணைய தளங்களும் ஆபாசப் படவுலகை ஆக்கிரமிக்கத் தொடங்கியதும் அவரது நிர்வாண சஞ்சிகை சாம்ராஜ்யம் மளமளவெனச் சரியத் தொடங்கியது.




அவர் 1979இல் தயாரிக்க முயன்ற மிகவும் ஆபாசம் மிக்க திரைப்படமான Caligula மூலம் ஒருகோடி 75லட்சம் டொலர் முதலீடு வீண் விரயமானது. உலகின் முன்னணி நடிக, நடிகையர்களை வைத்துத் தயாரிக்கப்பட்ட இப்படம் பெரும் தோல்வியைத் தழுவியது. ஆண்களும், பெண்களும் அப்பட்டமான ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருந்த காட்சிகள் விநியோகஸ்தர்களைக் கவர்ந்த போதிலும் ரசிகர்கள் மத்தியில் எடுபடவில்லை.

பொப் குசியோனி பல மில்லியன் டொலர்களை 'அட்லாண்டிக் சிட்டி' சூதாட்ட விடுதி நிர்மாணத்தில் இழந்தார். கடைசி வரை அவருக்கு சூதாட்ட விடுதிக்கான அனுமதிப் பத்திரம் கிடைக்காததால் முழு முதலீடும் வெறுமனே கரைந்து போனது.

அத்துடன், பொப் குசியோனிக்கு எதிராக நட்டஈடுகள் கோரி பலர் தொடர்ந்த வழக்குகளுக்கு சட்ட நடவடிக்கைகளுக்காக அவரது எஞ்சிய சொத்துக்களில் பெருமளவு கரைந்து போனது. அவ்வாறு வழக்கு தொடர்ந்தவர்களில் முன்னாள் அழகு ராணி, 'பென்ட் ஹவுஸ்' பத்திரிகையின் ஆஸ்தான நடிகை தனது வியாபார அபிவிருத்திக்காக பொப் தனது வியாபார சகாக்களுடன் உறவு கொள்ளுமாறு வற்புறுத்தினார் என்ற குற்றம் சாட்டி வழக்கைத் தொடர்ந்திருந்தார். அவருக்குப் பாரிய தொகை நட்டஈடாக வழங்கப்பட்டது. 1985இல் பொப் 45 மில்லியன் டொலர்களை வரிப் பாக்கியாகவும் செலுத்த நேரிட்டது.

1986இல் அமெரிக்க சட்டமா அதிபர் எட்வின் மீசி தலைமையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழு ஆபாசப் படவுலகை கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையை வெட்கக்கேடானது என விமர்சித்த பொப் அதன் மூலம் எந்தத் தாக்கமும் ஏற்படப் போவதில்லலை எனவும் எதிர்வு கூறினார். எனினும் அந்த அறிக்கையின் பின் சஞ்சிகை விற்பனை நிலையங்கள் 'பென்ட் ஹவுஸ்' என்ற சஞ்சிகையை தமது விற்பனைத் தட்டுகளில் இருந்து ஒரேயடியாக அப்புறப்படுத்தியதை தொடர்ந்து அந்த சஞ்சிகையின் சாம்ராஜ்யம் முற்றாக நிலைகுலைந்து போனது. அதனைத் தொடர்ந்து இணைய தளங்களும், வீடியோக்களும் மேற்கொண்ட ஆக்கிரமிப்புகளால் பென்ட் ஹவுஸின் இறுதிநாட்கள் நிச்சயம் செய்யப்பட்டு விட்டது.

ஆபாச சஞ்சிகை உலகின் சக்கரவர்த்தியாகக் கோலோச்சிய பொப் குசியோனி நுரையீரல் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு இம்மாதம் 20ஆம் திகதி தனது 79 வயதில் மரணமானார். ❋

## குறிஞ்சிக் கோவில்கள்



### கொட்டக்கலை நகர் ஸ்ரீ விநாயகப் பெருமான்

கொட்டக்கலை யூரில் கொடியோடும் நகரில்
முச்சந்தி முகப்பில் கோயில் - வேழ
முகனாரின் பொற்புக் கோயில்
கொட்டியருள் நித்தும் கட்டிநகர் காக்கும்
மாகோட்டம் கண்ணை அள்ளும் - ஆண்டு
தேரோட்டம் விண்ணைக் கொள்ளும்!

தளிர்நிரை பொலியுந் தேயிலைக் குன்றம்
வளநகர் சுற்றிச் சூழும் - ஊரில்
தளர்தட்டும் நிலையை மாய்க்கும்
குளிர்தரை இழைத்த போர்வைக்குள் நுழைந்து
எங்கணும் பசுமை காட்டும் - செடிகள்
மங்குறா செழுமை யூட்டும்!

மாடியோடு பெட்புக் கூடமுங் கொண்ட
கல்லூரி இங்கு உண்டு - குறிஞ்சி
நல்லூராய் ஓங்கத் தொண்டு
கூடியவை ஆய்ந்து நாடிநின்று இங்கு
முத்தமிழ் விழாக்கள் வைக்கும் - தொன்மை
மெத்தநல் கலைகள் காக்கும்!

காருலா இரவைத் தேருலா பகலாய்
மாற்றியே நகரைக் காட்டும் - குமிழ்கள்
ஏற்றியே கங்குல் ஓட்டும்
பாருலா பூணும் விநாயகப் பெருமான்
தேருலா நகரில் ஓங்கும் - நெஞ்சில்
சீருலா காட்சி தேங்கும்!

இந்நகர் மண்ணில் பொன்னகர் ஆகி
கலைநகர் ஆகும் அல்லில் - குறிஞ்சி
தலைநகர் ஆகும் நாளை
பொன்னகர் பூணும் ஜோடனைப் பொலிவு
இந்திர லோகங் காட்டும் - கொணர்ந்து
மந்திர லோகம் நாட்டும்!

**- கவிஞர் ஸி.எஸ். காந்தி -**

**(வளரும்...)**

## ஈதோர் யுகமோ இது?

இதயம் பிழிந்து உதிரம் குடித்து
இன்பங் காண்போன் மனிதன் - வரும்
உதயந் தொட்டு முடிவின் வரையும்
இனிதே செய்வோன் புனிதன்!

ஆயுள் வரைக்கும் பூதலத் தாசையில்
ஆடிடத் துடிக்கும் இதயம் - தன்
தாயுள் சேயுள் வைத்திரா அன்போ
தறிகெட் டலைந்தே புதையும்!

தனித்தவ னாட்சி தனக்கென வாழ்ந்திடின்
தார்மிகந் தனையே பொசுக்கும் - இனிக்
கனிந்துளம் அன்றிக் கசக்கியே மனிதரைக்
காவும் அரசெனில் நசுக்கும்!

நல்லார் யாரெனத் தீயார் யாரென
நம்மோர் எதையிங் கறிவார் - பின்
சொல்வா ரொன்றைச் செய்வா ரொன்றை
சூட்சுமக் கணைதொடுத் தெய்வார்!

தமக்கொரு நீதியை நமக்கொரு நீதியைத்
தந்தே சிறையிடும் வர்க்கம் - இனி
நமக்கென வாழாத் தமக்கென வாழ்வரே
அவர்தம் வாழ்வதே சொர்க்கம்!

மனிதனை மனிதன் தின்றே தீர்க்கும்
மாபெருந் தீதோர் யுகமோ...? - ஓர்
புனிதனை இனியுங் காண்பதற் கரிதாம்
புலருமோ..? இருள்சூழ் அகமோ!?

கவிஞர் திருமலை ஏ.ஆர். நாகூர்,
- கந்தளாய் -

## சீதனம் கேட்கின்றான்...!

*மாடாய் உழைத்து மகளைக் கரைசேர்க்க*
*ஓடாகத் தேய்ந்த ஒருமனிதன் - வீடொன்றை*
*மாடியுடன் கட்டியபின் மாப்பிள்ளை பார்ப்பதற்காய்*
*ஓடுகிறான் ஓய்வொழிச்சல் இன்றி!*

*கட்டழகு மேனியுங் கற்புடனே நற்குணமும்*
*பட்டப் படிப்பும் பதவியும் - கட்டாக*
*வேதனமும் மாதாந்தம் வேறாகப் பெற்றிருந்தும்*
*சீதனமுங் கேட்கின்றான் சீச்சீ!*

*பத்தரை மாற்றுப் பசும்பொன்போற் பெண்ணுக்கு*
*பத்தேக்கர் நெற்காணி பால்மாடும் - சொத்தாக*
*ஆதனமுந் தந்தும் அரைக்கோடி ரூபாக்கள்*
*சீதனமுங் கேட்பானேன் சொல்!*

*கல்லூரிக் காதல் கலையகஞ் சென்றவுடன்*
*நெல்லின் உமிபோல் நெருங்கியதால் - கல்யாணத்*
*தேதி முடிவெடுக்கத் தந்தை வரக்கண்டு*
*சீதனத்தை முன்வைத்தான் சிறி!*

*முற்போக்கு வாலிபர்காள்! முன்வாரீர் நாமெல்லாம்*
*தற்கால மாதிரியைக் கைவிட்டு - பொற்காலம்*
*பெண்ணினம் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்திடவே*
*பண்ணிடுவோம் நல்ல பணி!*

**- எம்.எச்.ஏ. ஹலீம், ஏறாவூர் -**

## சரித்திரம் படைப்போம்

வந்தார்க்கு நல்வாழ்வு தந்த - எங்கள்
வன்னியாம் அன்னையின் அவலங்கள் கேளீர்
பந்தாடி மக்களைக் கொன்று - குவித்த
போரினால் வளமெல்லாம் இழந்தமைப் பாரீர்!

பச்சைப் பசேலென்னும் காட்சி - இன்று
பார்க்கவே நெஞ்சமும் பதறிடல் காணீர்
அச்சமற் றெம்மண்ணில் வாழ்ந்தோம் - அந்தோ
அழகுறும் இல்லங்கள் அழிந்தமைப் பாரீர்!

தோப்புகள் சீர்கெட்டுப் போச்சு - இன்று
செழிப்பற்றுச் சிதைவுற்று அழிந்தமைப் பாரீர்
மூப்புற்றக் கனிமரங்க ளெல்லாம் - இன்று
மூச்சின்றித் தரைமீது சாய்ந்தமைப் பாரீர்!



மாடங்கள் கூடங்கள் யாவும் - சொந்த
மண்ணினில் உருக்குலைந் தழிந்தமைப் பாரீர்
கேடுறும் செயல்களில் மகிழ்ந்தார் - தமிழ்
மக்களின் வாழ்வினில் மண்ணள்ளிப் போட்டார்!

கைவினை நல்வினை யாக்கி - பெரும்
கருந்தனம் சேர்த்திங்கு வைத்தவர் எல்லாம்
கைநீட்டி யாசகங் கொள்ளும் - பொலா
காட்சிகள் எங்களின் நெஞ்சத்தைப் பிளக்கும்!

மீள்குடி யேற்றியே விட்டார் - மக்கள்
மீண்டெழும் சக்தியற் றலைவதைப் பாரீர்
ஏழைகள் ஆனதால் அந்தோ - நித்தம்
ஏங்கியே தவித்திங்கு கலங்குதல் பாரீர்!

*- ஞானம், வவுனியா -*

## ஆறுதல் தந்த அம்மா!!

வாடி இருக்கையிலே - என்னை
வாட விடவில்லை
ஆடித் திரிகையிலே - என்னை
அடக்கி வையவில்லை!

தேடக் கிடைக்காத - போற்றும்
தெய்வம் என்னம்மா
ஓடம் போலிருந்து - என்னை
ஊக்கிக் கரைசேர்த்தார்!

எட்டி யிருக்கையிலே - பசியால்
ஏங்கித் தவிக்கையிலே
ஊட்டி உயிர்காத்தாள் - யானும்
உயர வழிசமைத்தாள்!

அம்மா சென்றிடாதீர் - உள்ள
அமைதி சிதைந்துவிடும்
விம்மிப் புலம்பிடுவேன் - வலையில்
வீணர் வீழ்த்திடுவர்!

கவிஞர் செ. ஞானராசா
- திருமலை -






## கிண்ணம்

**அந்தக் குங்குமக் கிண்ணம்**
**யாருக்காகவோ ஏங்கியது**
**ஊரார் பலர் வந்தனர்**
**உவகையுடன் குங்குமத்தை**
**கையிட்டு விரல் தொட்டு**
**பொட்டிட்டுச் சென்றனர்**
**பூரித்துச் சென்றவர்களின்**
**முகங்களைப் பார்த்து**
**ஏக்கத்தோடு மௌனித்தது!**

நீண்ட காலத்துக்குப் பின்
கிண்ணம் எதிர்பார்த்த
சொந்தக்காரி வந்தாள்
கருவறையில் இருந்த
திருவுருவை கை குவித்தாள்
நெற்றி நிறைய
திருநீற்றினைப் பூசினாள்
கிண்ணத்தைப் பார்த்து
கண்ணீரால் செய்தியை
பரிமாறிக் கொண்டாள்
குங்குமச் சிமிழ்
ஏக்கத்தால் - மீண்டும்
மௌனித்தது...!

**- இல. நாகலிங்கம் -**

## சொற்சிலம்பம் போட்டி இல. 441

சொற்சிலம்பம் 441 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித்தினம் 2010 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 21 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 439 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 441

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | ■ | 4 | |
| 5 | | | ■ | ■ | 6 | | ■ |
| 7 | | ■ | 8 | | | | |
| ■ | 9 | 10 | | ■ | ■ | 11 | |
| 12 | | | | ■ | 13 | ■ | ■ |
| | ■ | ■ | ■ | 14 | | | ■ |
| 15 | 16 | | 17 | ■ | | ■ | 18 |
| ■ | | ■ | | ■ | 19 | | |

**இடமிருந்து வலம்**

1. நிறுவனம். 4. மை. 5. கழுத்தை இறுக்கிக் கொல். 6. சொல் (வினைச் சொல்). 7. செயலைச் செய்வதற்கு பிறர் தன்னை மிகவும் வேண்டிக்கொள்ள வைக்கும் முறை.

8. சாக்குப் போக்கு. 9. உருக்குலைந்து போகும் வகையில் சிதறச் செய்தல்.

11. பறவை. 12. இரவில் பூக்கும் வாசனையான மலர். 14. மழை பெய்த சில நாட்களுக்குப் பின் நிலத்தில் முளைக்கும் ஒரு வகைத் தாவரம்.

15. தவறுகளை நீக்கிச் சரி செய்தல்.

19. காதல் மயக்கம்.

**மேலிருந்து கீழ்**

1. கோயில் தூண். 2. அடித்தல், வெட்டுதல் முதலியவற்றுக்கு உட்படுத்துதல். 3. பிரி.

4. ஒரு கருத்தின் நிராகரிப்பு.

6. புடைத்த இடைப் பகுதியும் மூடியும் கொண்ட கலன். 8. ஒன்றைச் சார்ந்திருத்தல்.

10. நான்கு யுகங்களில் தீமையானதாகக் கருதப்படும் கடைசி யுகம். 12. ஞாபகத்துக்கு வராதிருத்தல். 13. ஊக்கம், முயற்சி. 16. (பெண்) பூப்பெய்தல்.

17. புடைவை. 18. மாட்டிலிருந்து கறப்பது.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி' 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

### சொற்சிலம்பம் போட்டி இல. 439


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | 2 கு | ப் | 3 பு | ■ | 4 அ | வ | 5 தி |
| தி | ரு | ■ | 6 த | வ | று | ■ | க |
| 7 க | வி | 8 ஞ | ன் | ■ | 9 சு | ரு | தி |
| ம் | ■ | ம | ■ | 10 து | வை | ■ | ■ |
| ■ | 11 மே | லி | ட | ம் | ■ | 12 ஆ | 13 வி |
| 14 சா | ல | ■ | ■ | 15 ம | ரி | யா | தை |
| 16 மி | தி | ■ | 17 ஆ | ல் | ■ | ச | ■ |
| ■ | 18 க | யி | று | ■ | 19 அ | ம் | மி |

**பரிசு பெறுவோர்**

1. **பொ.பாலசுப்பிரமணியம்,** பிரதான வீதி, தம்பிலுவில் - 01.
2. **ஏ.எம்.முஸ்தபா,** பெரிய பாலத்தடி, ஆர்.சி. வீதி, ஏறாவூர் - 01.
3. **இந்துமதி வடிவேல்,** தமிழ் மகா வித்தியாலயம், ஏறாவூர் - 04, செங்கலடி.

**பாராட்டுப் பெறுவோர்**

. க.சகீலா பேகம், ஏறாவூர் - 02.
. எஸ்.பி.விஸ்வநாதன், மடுல்சீமை.
.செல்வி. டி.ஆர்.ஆன்டிலுக்ஷி, கொழும்பு - 13.
. பெ.நமசிவாயம், திருநெல்வேலி.
. வை.எல்.முகமட் றமீஸ், அட்டாளைச் சேனை.
. ஞான செந்தமிழ்ச் செல்வன், ஏழாலை.
. சந்திராணி துங்கத்துரை, பெரிய நீலாவணை.
. திருமதி. ரி.செல்லத்துரை, கொழும்பு - 06.
. சி.பாலசுந்தரம், சண்டிலிப்பாய்.
. ஏ.பி.எம்.இர்ஷாட், பாலமுனை - 04.
. சேரன் அமரலிங்கம், கொழும்பு 06.
. வி.செல்வநாயகம், புத்தூர்.
. எஸ்.றியாஸ் முஹம்மத், ஏறாவூர் - 03.




**ராஜா,**
**முல்லைத்தீவு.**

**கேள்வி:-** வராக மிகிரரின் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் யார்? அவரை அறிமுகப்படுத்தி வைப்பீர்களா?

**பதில்:-** இவர் சோதிடக் கலையின் தந்தை என மதிக்கப்படுபவர். புகழ் பெற்ற வானவியல் அறிஞரும் கூட. பிருகத் ஸம்ஹிதா என்ற இவரது நூல் கிரகங்களின் இயக்கங்கள் பற்றி விபரிக்கிறது. சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட இந்நூல் அரபு மொழிக்குப் பெயர்க்கப்பட்டு, மத்திய காலப் பிரிவில் முஸ்லிம்களின் வானவியற் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தது. இவர்களிடமிருந்தே நவீன வானவியலை ஐரோப்பியர் கற்றுக் கொண்டனர். இன்று முஸ்லிம்களும் ஹிந்துக்களும் வானவியல் துறையிலிருந்து ஒதுங்கிக் கொண்டமை மாபெரும் துரதிர்ஷ்டமாகும். வராக மிகிரரின் காலம் கி.ப. 505- 587 என்பர்.

**றியாஸ்,**
**அட்டாளைச் சேனை.**

**கேள்வி:-** தற்காலத் தமிழ்த் திரைப்படங்கள் யதார்த்தமானவையா?

**பதில்:-** இந்திய மக்களில் 80 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற ஏழைகள். கிராமச் சூழ்நிலையுடன் கூடிய அவர்களது வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் திரைப்படங்கள் மிகவும் குறைவு. நகரத்தின் பகட்டு வாழ்க்கையை மையமாகக் கொண்ட திரைப்படங்களே பெரும்பாலும் தயாரிக்கப்படுவதால், தற்காலத் தமிழ்த் திரைப்படங்கள் யதார்த்தமானவை என்று சொல்ல முடியாது. ஆனால் வங்காள மொழில் சத்யஜித்ரேயினால் தயாரிக்கப்பட்ட திரைப் படங்கள் கிராமிய மக்களின் வாழ்வை மையமாகக் கொண்டவை. அதனால் தான் அவை உலகப் புகழ் பெற்றன.

**தீபிக்கா,**
**ஹற்றன்.**

**கேள்வி:-** தீபாவளி என்ற சொல்லின் பொருள் யாது?
**பதில்:-** தீபங்களின் வரிசை என்பது.

**கதீஸன்,**
**யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** சமீபத்தில் வத்தளையில் வைத்து ஏ.ரீ.எம் எம்மில் வைப்பலிட எடுத்துச் சென்ற ஐந்து கோடி ரூபாவைப் பொலிஸார் போன்று நடித்து, கொள்ளையடித்தது எதைக் காட்டுகிறது?

**பதில்:** அட! பொலிஸார் போன்று நடிப்பவர்களுக்கு இவ்வளவு வசூல் ஆகிறது என்றால், உண்மையிலேயே பொலிஸ்காரர்களாக இருப்பவர்களுக்கு எவ்வளவு வசூல் ஆகும்.

**துர்க்கா,**
**மானிப்பாய்.**

**கேள்வி:** பதி, பசு, பாசம் என்ற சைவ சித்தாந்தத்துக்கு விளக்கம் கொடுத்த முதன்மையான சமயக் குரவர் யார்?

**பதில்:** உமாபதி சிவாச்சாரியார்.

**மதி,**
**முல்லைத்தீவு.**


**கேள்வி:** நான் எவ்வளவு படித்தும் பட்டங்கள் பெற்றும் போதிய சம்பளமோ வேறு வருவாய்களோ கிடைப்பதில்லையே, இதற்குக் காரணம் என்ன?

**பதில்:** ஒருவருக்கு இறைவனால் விதிக்கப்பட்டது தான் கிடைக்கும். இறைவன் ஒருவனுக்குக் கொடுக்க நாடினால் அதை எவருக்கும் தடுக்கவும் முடியாது தடுக்க நாடினால் உலகிலுள்ள அத்தனை பேரும் சேர்ந்தாலும் கொடுக்கவும் முடியாது. அதற்காக நாம் முயற்சி செய்யாமல் இருக்கவும் கூடாது.

**எம்.எச்.எம். ஆப்டீன்,**
**புத்தளம்.**

**கேள்வி:** சாகித்ய அகடெமி விருதுபெற்ற தோப்பில் முஹம்மது மீரான் பற்றிய ஓர் அறிமுகத்தைத் தர முடியுமா?

**பதில்:** இவர் 1968 க்கும் 1989 க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். பிறை, மதிநா, முஸ்லிம் முரசு ஆகிய இதழ்களில் இவரது கதைகள் பிரசுரம் பெற்றுள்ளன. 1990, 93, 97 ஆகிய ஆண்டுகளில் இவரது சிறுகதைத் தொகுதிகளான 'அன்புக்கு முதுமை இல்லை', 'தங்கராசு', 'அனந்த சயனம் காலனி' என்பன முறையே வெளிவந்துள்ளன. தென்னிந்தியாவின் கடற்புறக் கிராமமான நாஞ்சில் பகுதி மக்களின் அவல வாழ்வையும், மூடநம்பிக்கைகளையும் இவர் மண்ணின் மணம் கமழ தனது கதைகளில் மிகவும் சுவாரஸ்யமாக எடுத்துக்காட்டியுள்ளார். ஒரு கடலோரக் கிராமத்தின் கதை, கூனன் தோப்பு, துறைமுகம் என்பன இவர் படைத்தளித்துள்ள அருமையான நாவல்களாகும். ஒரு கடலோரக் கிராமத்தின் கதை என்ற நாவலுக்கே இவருக்கு சாகித்ய அகடெமி விருது கிடைத்தது.




**விமல்,**
**வெள்ளவத்தை.**

**கேள்வி:** விக்ரமாதித்தன் கதை என்ற நூல் முதன்முதலாக எப்போது நூலுருவில் வெளியிடப்பட்டது? அதை எழுதிய நூலாசிரியர் யார்?


**பதில்:** இந்நூல் 1871 ல் அச்சுவாகனம் ஏறியது. இதை எழுதியவர் முஹம்மது இபுறாகீம் சாயபு என்பவர் என்று மயிலை சீனி வேங்கடசாமி தெரிவிக்கிறார்.

**ஏ. அருளாநந்தம்,**
**கொழும்பு.**

**கேள்வி:** மீள்குடியேற்றப்பட்ட மக்களின் நிலைமை எப்படி இருக்கிறது? அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டார்களா?

**பதில்:** மீள் குடியேற்றம் என்பது பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் அரசியல்வாதிகளின் வாய்களிலும் நடமாடும் சம்பிரதாயபூர்வமான ஒரு வார்த்தை. அவர்களும் உண்மையில் ஒரு வகையான அகதிகள் தான். குடியேற்றப்பட்ட இடங்களில் மின்சாரம் இல்லை; மலசலகூட வசதிகள் இல்லை. உருப்படியான வீடுகள் இல்லை. வேலை வாய்ப்பு இல்லை. இப்படியிருக்கும் போது இயல்பு வாழ்க்கை என்பது வெறும் பகற்கனவுதான்

போர் முடிவடைந்து ஓராண்டு கடந்த பின்னரும் சிங்களத் தலைவர்களுக்குத் தமிழ் மக்கள் மீது இன்னமும் நம்பிக்கை உண்டாகவில்லை போலும்.






**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

பழகுவோரிடம் கனிவாகப் பேசும் தன்மை கொண்ட மேஷ ராசி அன்பர்களே!

தடைகளைத் தாண்டி சாதனை செய்ய சிந்திப்பீர்கள். எண்ணங்களைச் செயல்படுத்த முழுமையாகச் செயலில் இறங்குவீர்கள். முக்கிய காரியங்களை அதிக முயற்சியோடு செய்து வெற்றி அடையலாம். உறவினரில் ஒருவர் மனவேறுபாடு காரணமாக விலகிச் செல்ல நேரலாம். கல்வி சம்பந்தமான செலவுகளைச் சமாளிக்கக் கடன்வாங்க முற்படலாம். வெளியில் இருந்து நல்ல தகவல்களைக் கேட்கக்கூடும். சுயவேலை செய்பவர்கள் ஓய்வில்லாமல் பணிகளில் ஈடுபடுவதால் ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அவற்றைச் சாமர்த்தியமாகத் தீர்த்து வைப்பீர்கள். பெண்கள் பிரிந்த உறவுகளை ஒன்று சேர்க்க முயற்சி எடுப்பார்கள். சேமிப்பை நல்ல விதத்தில் செலவு செய்வீர். பங்குச்சந்தை வியாபாரம் லாபகரமாக நடக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக் கிழமை: வியாழன்.



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

கம்பீரமான தோற்றப் பொலிவுக்குச் சொந்தக்காரரான ரிஷப ராசி அன்பர்களே!

உங்களது பொறுமையான குணத்திற்கு பெருமை சேர்க்கும்படி சிறு வெற்றிகள் தேடி வரும். முக்கியமான சில செயல்களில் தீவிரமாகப் பாடுபட்டு நல்ல பலன்களைப் பெறுவீர்கள். சில காரியங்கள் உங்கள் எண்ணத்திற்கு மாறாக நடக்கக் கூடும். வரவேண்டிய தன வரவுகள் சிறிது முயற்சிக்குப் பின் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் வியாபார மூலப்பொருள் பற்றாக்குறை உற்சாகத்தைக் குறைக்கலாம். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால், கலகலப்பு காணப்படும். செலவுகள் அதிகம் இருந்தாலும் அதற்கேற்ற வருமானமும் இருக்கும். பெண்களில் சிலருக்கு ஆரோக்கியக்குறைவு ஏற்படலாம். பங்குச்சந்தை வியாபாரத்தில் புதிய முடிவுகளைத் தள்ளிப்போடவும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,3,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

செயல்களில் தெளிவான சிந்தனைகள் கொண்ட மிதுன ராசி அன்பர்களே!

உங்கள் திறமையான உழைப்பால் செயல்கள் பலவற்றில் சிறப்பான வெற்றிகளை அடைவீர்கள். நண்பர்கள் தகுந்த சமயத்தில் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். திட்டமிட்டபடி பணவரவுகள் வந்து உற்சாகம் அளிக்கும். பல வேலைகள் சேர்ந்தாலும் மனம் சோராமல் செய்து முடிப்பீர்கள். சுயவேலை செய்பவர்கள் வாடிக்கையாளரின் திருப்திக்காக ஓய்வு இல்லாமல் பணிகளில் கவனம் செலுத்துவீர்கள். கூட்டுத் தொழில் முயற்சியில் வியாபாரம் நன்கு நடைபெறும். எதிர்பார்த்த லாபம் ஏற்படும். குடும்பத்தில் சீரான போக்கு காணப்படும். உறவினர்கள் தொடர்பான விஷயங்களில் கவனமுடன் நடந்து கொள்வது அவசியம். பெண்கள் உறவுகளில் ஏற்படும் விரிசல்களை சரிசெய்ய சமாதானப் போக்கை மேற்கொள்வர். பங்குச்சந்தை வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,2,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

நுண்ணறிவுடன் செயலாற்றி காரியங்களில் வெற்றி பெறும் கடக ராசி அன்பர்களே!

உங்கள் வார்த்தைகளில் கவனம் இல்லாவிட்டால், சிறு கசப்பைச் சந்திக்க வேண்டி வரும். முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்தாவிட்டால், அதை சரிசெய்ய மேலும் அதிக உழைப்பு தேவைப்படலாம். நண்பர்கள் உங்கள் பணிகளுக்கு அதிக ஒத்துழைப்பை அளிப்பார்கள். பணவரவுகள் தாமதமானாலும் திட்டமிட்டபடி வந்து சேரலாம். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் போட்டிகளால் லாபம் குறையக்கூடும். குடும்பத்தில் பழைய கடன் தொல்லையால் அங்கத்தினர்களிடையே சிறுசிறு மனச்சஞ்சலங்கள் உருவாகலாம். எதிர்பார்க்கும் முன்னேற்றம் தடைபடலாம். பெண்கள் சேமிப்பைப் பெருக்குவர். சிலருக்கு பொருள் வரவால் பிரச்சினைகள் தீரும். சுப காரியங்கள் செய்ய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் சுமாரான லாபம் கொண்டு வரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை. அதிர்ஷ்டக் கிழமை: புதன்.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

சிறிய செயலையும் கலையழகுடன் செய்யும் சிம்ம ராசி அன்பர்களே!

நீங்கள் செய்யும் பல காரியங்களில் முயற்சியோடு செயல்பட்டாலும், சிலவற்றில் மட்டுமே எதிர்பார்க்கும் முன்னேற்றம் காணப்படும். உங்களுக்கு வெள்ளிக்கிழமை சந்திராஷ்டமம் இருப்பதால் அன்றைய தினம் முக்கிய காரியங்களைத் தள்ளி வைப்பது நல்லது. நிலம், பூமி விவகாரங்களில் கவனத்தோடு நடந்து கொள்வது அவசியம். குடும்பத்தில் மகன் அல்லது மகளுக்கு வேலை கிடைத்து, குடும்ப வருமானம் அதிகரிக்கலாம். உறவினர் தொடர்பான விவகாரங்களில் ஒதுங்கி இருப்பது நன்மை தரும். பெண்கள் முக்கிய காரியத்திற்காகச் சேமிப்பைச் செலவழிக்க நேரும். படித்து முடித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு, படிப்புக்கு ஏற்ற வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,3,5. அதிர்ஷ்ட நிறம்: வெண்மை. அதிர்ஷ்டக் கிழமை: திங்கள்.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

எந்த வேலையையும் அச்சம் இல்லாமல் செய்யும் கன்னி ராசி அன்பர்களே!

பெரிய மனிதரின் சந்திப்பால் பாராட்டும் பரிசும் காத்திருக்கிறது. முக்கிய மனிதரின் உதவியால் நல்ல பலன்களை அடைவீர்கள். சிலவற்றில் எதிர்பார்த்த அனுகூலம் இல்லாவிட்டாலும், பிரச்சினைகள் தீர வழி உண்டு. குடும்பம் சீராக நடைபெற்றாலும், அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் இருக்கக்கூடும். பெண்கள் தங்கள் சாமர்த்தியத்தால் அவற்றை சமாளிப்பார்கள். சுபகாரியத்தடை ஏற்படும் என்பதால், அதுதொடர்பான பேச்சில் நிதானம் தேவைப்படும். அவசரப்பட்டு எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம். பங்குச்சந்தை வியாபாரத்தில் ஓரளவு லாபம் ஏற்படும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,3,5. அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்டக் கிழமை: புதன்.



**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

கருணை, அன்பு, பாசமுடன் எல்லோரிடமும் பழகும் துலாம் ராசி அன்பர்களே!

நீண்ட நாட்கள் எதிர்பார்த்த ஒரு முக்கிய நண்பரின் சந்திப்பு நல்ல திருப்பத்தை தரும். சிலவற்றில் எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்காமல் போகக்கூடும். புதிய ஒப்பந்தங்கள் போடுவதை தவிர்க்கவும். பயணங்களைத் தள்ளிப் போடவும். சுயவேலை செய்பவர்களுக்கு வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். கூட்டு வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கலாம். வாடிக்கையாளர்களின் திருப்தி காணப்படும். குடும்பத்தில் சில்லறைக் கடன்களை அடைத்து விடுவீர்கள். பெண்களுக்கு அதிக வேலைப்பளு இருக்கும். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பெண்கள், அளவோடு பேசுவது நல்லது. பங்குச்சந்தை வியாபாரம் நன்றாக நடைபெறும். எதிர்பார்த்த வருமானம் இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,6. அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி.



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

நீதி நெறிகளில் அதிகப் பிடிப்புக் கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே!

கடந்த கால கசப்புணர்வுகளை மாற்ற முயற்சி செய்வீர்கள். சில காரியங்களில் நண்பர்களின் உதவியோடு, முன்னேற முயற்சிப்பீர்கள். பணவரவுகள் தாமதமாகலாம். உங்களுக்கு மறைமுக விரோதிகளால் குழப்பமும் தடுமாற்றமும் ஏற்படலாம். என்றாலும், உங்களது வழக்கமான வெற்றியில் மாற்றம் இருக்காது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலையில் பொறுப்புகள் அதிகமாகலாம். கூட்டுத் தொழிலில் எதிர்பாராத லாபம் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி காணப்பட்டாலும், சிறுசிறு பிரச்சினைகளும் தலைகாட்டலாம். சிறு கடன்களை அடைத்து நிம்மதி அடைவீர்கள். பங்குச்சந்தையில் வியாபாரம் நன்கு நடைபெற்று ஓரளவு லாபம் இருக்கும். நண்பர்கள் சேருவதால் முதலீடு அதிகமாகலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 6,7,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி.



**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

வேலைகளை நுணுக்கமாகச் செய்யும் தனுசு ராசி அன்பர்களே!

உங்களுக்கு நெருக்கமானவர்களின் ஆதரவு பெருகுவதால் நினைத்த பலனை அடைய முடியும். பணவரவுகள் வந்து சேரத் தாமதமாகலாம். தந்தை வழியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகி பாசம் அதிகமாகலாம். சுயவேலை செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர் மூலமாக தொழில் ரீதியான முன்னேற்றம் ஏற்படும். மூலதனங்களை அதிகரிக்க வாய்ப்பு உண்டாகும். கூட்டுத்தொழில் வியாபாரம் செய்பவர்கள் பணியாளர்களின் நடவடிக்கைகளைக் கவனித்து அவர்களுக்குள் இருந்த விரோதத்தைச் சரிசெய்வார்கள். குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். கடன்காரர்களின் தொல்லைகளைச் சமாளிப்பீர்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் சுமாரான வியாபாரம் நடந்தாலும், வழக்கமான லாபம் காணப்படும். அன்றாட நிலவரங்களைக் கவனிப்பது நல்லது.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்.



**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

சாஸ்திரங்களில் அதிக ஈடுபாடு கொண்ட மகர ராசி அன்பர்களே!

இந்த வாரம் ஆரம்பித்த பணிகள் முடியும் வரை அதில் தீவிரமாக உழைத்து வெற்றி காண்பீர்கள். நண்பர்கள், இடையில் வந்து உங்கள் வேலைகளுக்கு ஆதரவு தருவார்கள். புதிய முயற்சிகளில் எதிர்பாராத முன்னேற்றம் கண்டு மகிழ்வடைவீர்கள். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு அலுவலகம் சம்பந்தமாக வெளியே செல்லும் சந்தர்ப்பம் உண்டாகலாம். சிலருக்கு வெளிநாட்டு பயணங்கள் ஆரம்பிக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் போட்டிகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். குடும்பத்தில் உள்ள கடன் தொல்லைகளைத் தீர்ப்பதற்கு முன் கடன் வாங்குவீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் செய்வதற்கு முன்னேற்பாடுகளைத் தொடங்குவீர்கள். வேலைக்குப் போகும் பெண்கள், பயணங்களில் பாதுகாப்பாக இல்லாவிட்டால், பொருள்கள் திருட்டுப் போகலாம். பங்குச்சந்தையில் உள்ளவர்கள் பழைய பங்குகளை விற்க முயற்சிக்க வேண்டாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,6. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

இனிமை மிகுந்த பேச்சுகளோடு நண்பர்களிடம் பழகும் கும்ப ராசி அன்பர்களே!

நல்ல தகவல்கள் உங்களைத் தேடி வருவதால் செயல்களில் அதிக உற்சாகத்துடன் பாடுபடுவீர்கள். சில செயல்கள் நீங்கள் நினைத்தபடி நடந்து மகிழ்ச்சி தரும். தளர்வடைந்த வேலைகளைச் செய்து முடிக்கத் தகுந்த நண்பர்களின் உதவியை நாடுவீர்கள். அதிக சிரமத்துடனேயே வரவேண்டிய பணங்கள் வசூலாகும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வும், சம்பள உயர்வும் சிலர் பெறுவர். சுயவேலை செய்பவர்களுக்கு தொழில் ரீதியாக உதவுவதற்காக புதிய வாகனங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படலாம். குடும்பத்தில் அமைதியான போக்கு காணப்பட்டாலும், சிறு சிறு பிரச்சினைகளும் ஏற்படலாம். பங்குச்சந்தை சுமாராக நடைபெறும். வழக்கமான லாபம் காணப்படும். அதிகலாபம் பெற தினசரிகளில் கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,6. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம். அதிர்ஷ்டக் கிழமை: சனி.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

செய்யும் வேலைகளைக் கலையழகுடன் செய்யும் மீன ராசி அன்பர்களே!

சிந்தனை செய்து, திட்டமிட்டுச் செய்யும் வேலைகளில் சிறந்த பலன்களை பெறுவீர்கள். நல்ல நண்பர்கள் உங்களுக்கு பக்க பலமாகச் செயல்பட்டு காரியங்களில் முன்னேற்றமடைய உதவுவார்கள். வரவேண்டிய தன வரவுகள் சிறிது தாமதமானாலும், குறையின்றி வந்து சேரும். நீங்கள் எதிர்பார்த்த தகவல் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்காகத் திட்டமிடுவீர்கள். சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். பெண்கள் சேமிப்பைப் பெருக்குவார்கள். செலவுகளைத் திட்டமிட்டு செய்வர். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடந்தாலும், வழக்கமான வருமானம் காணப்படும். கூடுதல் லாபம் பெற பெரிய மனிதர்களின் ஆலோசனை பயன் தரலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,8,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம். அதிர்ஷ்டக் கிழமை: சனி.

# தீபாவளியை முன்னிட்டு 11 இனிப்பு வகைகள்!

## முந்திரி-தேங்காய் பால்கோவா

**தேவையானவை:** பால் - 8 கப், குங்குமப்பூ - ஒரு சிட்டிகை, சீனி - 2 கப், ஊற வைத்த முந்திரி - 10, தேங்காய் துருவல் - ஒரு கப், நெய் - 4 டீஸ்பூன், ஏலக்காய்த்தூள் - சிறிதளவு.



**செய்முறை:** அடி கனமான பாத்திரத்தில் பாலை விட்டு, அடுப்பை மிதமான தீயில் வைத்துக் கிளறிக் கொண்டே இருக்கவும். பால் பாதியாகும் அளவுக்கு சுண்டக் காய்ச்சவும். முந்திரி, தேங்காய் துருவலை சேர்த்து அரைத்து, காய்ச்சிய பாலுடன் கலந்து, மீண்டும் பாதியாக வந்ததும், சீனி சேர்த்துக் கெட்டியாகக் கிளறவும். ஏலக்காய்த்தூள், குங்குமப்பூ போட்டு, நெய் விட்டு, சிறிது நேரம் கிளறி இறக்கவும்.

வழக்கமாக செய்யும் பால்கோவாவைவிட, இது அதிக சுவையோடு இருக்கும்.

## ட்ரை ஃப்ரூட் போளி

**தேவையானவை:** ஊற வைத்து தோல் உரித்த பாதாம், பஸ்தா, முந்திரி - தலா 10, உலர்ந்த திராட்சை, பேரீச்சம்பழம் - தலா 4, நறுக்கிய வெல்லம், தேங்காய் துருவல் - தலா ஒரு கப், கோதுமை மாவு - ஒரு கப், கேசரி பவுடர் - ஒரு சிட்டிகை, ஏலக்காய்த்தூள் - சிறிதளவு, நெய் - ஒரு சிறிய கப், நல்லெண்ணெய் - 4 டீஸ்பூன்.



**செய்முறை:** பாதாம், பஸ்தா, முந்திரி, பேரீச்சை, திராட்சை ஆகியவற்றை 10 நிமிடம் ஊற வைத்து... தேங்காய் துருவல் சேர்த்து கெட்டியாக அரைக்கவும். இதனுடன் வெல்லம் சேர்த்து கெட்டியான பூரணமாகக் கிளறி, ஏலக்காய்த்தூள் சேர்த்து உருட்டிக் கொள்ளவும்.

கோதுமை மாவுடன் கேசரி பவுடர், நல்லெண்ணெய் சேர்த்து சிறிது தண்ணீர்விட்டு கெட்டியாகப் பிசைந்து, சிறிய சப்பாத்திகளாக இட்டுக் கொள்ளவும். இதை ஒரு வாழை இலையில் வைத்து, நடுவில் பூரண உருண்டை வைத்து மூடி, போளியாக தட்டி, தோசைக் கல்லில் போட்டு மிதமான தீயில் இருபுறமும் நெய் விட்டு எடுக்கவும்.

பல்வேறு சத்துக்கள் நிறைந்த இந்த போளியை, முந்தைய நாளே பூரணம் செய்து வைத்துக் கொண்டு, மறுநாள் தயாரிக்கலாம். வேலை சுலபமாக இருக்கும்.

## மைசூர்பாகு

**தேவையானவை:** கடலை மாவு, நெய் - தலா ஒரு கப், சீனி - 2 கப்.



**செய்முறை:** பாதி அளவு நெய்யில் கடலை மாவை பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். சீனி மூழ்கும் அளவுக்கு தண்ணீர் விட்டு சீனிப் பாகு (தண்ணீரில் சிறிது பாகை விட்டு பார்த்தால், முத்து போல் திரண்டு வரும் பதம்) காய்ச்சி, வறுத்து வைத்த கடலை மாவை சேர்த்துக் கிளறவும். மீதமுள்ள நெய்யை சிறிது சிறிதாக விட்டு, கடலை மாவு கெட்டியாகி தட்டில் கொட்டும் பதம் வந்ததும் இறக்கவும். நெய் தடவிய குழிவான தட்டில் கொட்டி, ஆறியதும் துண்டுகள் போட்டால்... மைசூர்பாகு ரெடி.

கடலை மாவுக்குப் பதிலாக கடலைப்பருப்பு வாங்கி ஊற வைத்து, மாவாக அரைத்துச் செய்தால்... இன்னும் டேஸ்ட்டாக இருக்கும்.

## சாக்லேட் லாலி பாப்

**தேவையானவை:** பால் - இரண்டரை கப், சாக்லேட் பவுடர் - 4 டீஸ்பூன், சீனி - ஒரு சிறிய கப், முந்திரி, பாதாம் - தலா 10, லாலிபாப் ஸ்டிக் - 5.



**செய்முறை:** முந்திரி, பாதாமை அரைத்துக் கொள்ளவும். பாலை சுண்டக் காய்ச்சி, அரைத்த முந்திரி, பாதாம் விழுதை அதில் சேர்த்துக் கிளறி... சீனி, சாக்லேட் பவுடர் சேர்த்து சிறு உருண்டைகளாக உருட்டவும். இதை லாலிபாப் ஸ்டிக்கில் பொருத்தி, ஃப்ரீசரில் அரை மணி நேரம் வைத்து சாப்பிடவும்.

சாக்லேட் பவுடருக்குப் பதிலாக போர்ன்விட்டா சேர்த்தும் செய்யலாம்.

## பயற்றம் மாவு உருண்டை

**தேவையானவை:** பாசிப்பருப்பு - 2 கப், சீனி - ஒன்றரை கப், ஏலக்காய்த்தூள் - சிறிதளவு, நெய் - ஒரு சிறிய கப், நெய்யில் வறுத்து உடைத்த முந்திரிப் பருப்பு - 10.



**செய்முறை:** வெறும் கடாயில் பாசிப்பருப்பை பொன்னிறமாக வறுத்து மிக்ஸியில் நைஸாக அரைத்து சலித்துக் கொள்ளவும். நெய்யை உருக்கிக் கொள்ளவும். அரைத்த மாவுடன் சீனியைக் கலந்து... ஏலக்காய்த்தூள், முந்திரிப் பருப்பு, காய்ச்சிய நெய் சேர்த்துக் கலந்து, சிறு உருண்டைகளாக படிக்கவும்.

பாசிப்பருப்பு உடலுக்கு மிகவும் நல்லது. சூப்பர் டேஸ்ட்டில் இருக்கும் சத்தான உருண்டை இது.

## புரோட்டீன் லட்டு

**தேவையானவை:** பொடித்த பாதாம், உடைத்த முந்திரி, பஸ்தா - தலா 10, வறுத்து தோல் உரித்த கச்சான்கடலை - ஒரு கைப்படி, பொட்டுக்கடலை - ஒரு கப், வெள்ளரி விதை, நெய் - தலா 4 டீஸ்பூன், பாகு வெல்லம் - 200 கிராம், ஏலக்காய்த்தூள் - சிறிதளவு.




**செய்முறை:** வெல்லத்தை தண்ணீர் விட்டுக் கரைத்து, வடிகட்டி கொதிக்க வைத்து பாகு காய்ச்சவும் (தண்ணீரில் சிறிது பாகை விட்டால் முத்து போல் திரண்டு வரும் பதம்). பாதாம், முந்திரி, கச்சான் கடலை, பொட்டுக்கடலை, வெள்ளரி விதை, பஸ்தா ஆகியவற்றை நெய் விட்டு வறுத்து, எல்லாவற்றையும் பாகுடன் கலந்து, ஏலக்காய்த்தூள் சேர்த்து சிறு உருண்டைகளாக படிக்கவும்.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு போஷாக்கான லட்டு. தினமும் இரண்டு சாப்பிட்டால் உடல் வளர்ச்சி கூடும்.

## பாதாம் அல்வா

**தேவையானவை:** பாதாம், முந்திரி - தலா 20, பால்கோவா - ஒரு டேபர்ஸ்பூன், ஏலக்காய்த்தூள், குங்குமப்பூ - தலா ஒரு சிட்டிகை, நெய் - 4 டீஸ்பூன், சீனி - 2 கப்.



**செய்முறை:** பாதாம், முந்திரியை ஊற வைத்து அரைத்துக் கொள்ளவும். இதை கடாயில் போட்டு சீனி, பால் கோவாவை சேர்த்து நெய் விட்டுக் கிளறவும். குங்குமப்பூ, ஏலக்காய்த்தூள் சேர்த்து இறக்கவும்.

திருமணங்களில் முக்கிய இடம் வகிக்கும் இனிப்புகளில் பாதாம் அல்வாவும் ஒன்று. செய்வது எளிது... சத்தும், சுவையும் அதிகம்.

## லட்டு

**தேவையானவை:** கடலை மாவு - ஒரு கப், அரிசி மாவு - ஒரு டேபிள்ஸ்பூன், ஏலக்காய்த்தூள் - கால் டீஸ்பூன், கேசரி பவுடர் - ஒரு சிட்டிகை, முந்திரி, திராட்சை, டைமண்ட் கல்கண்டு, எண்ணெய் - தேவையான அளவு, சீனி - 2 கப், பச்சைக் கற்பூரம் (விருப்பப்பட்டால்) - ஒரு சிட்டிகை.



**செய்முறை:** கடலை மாவு, அரிசி மாவுடன் கேசரி பவுடர், தேவையான தண்ணீர் சேர்த்து தோசை மாவு பதத்தில் கரைத்துக் கொள்ளவும். சட்டியில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும், பூந்திக் கரண்டியில் மாவை ஊற்றித் தேய்த்து, பூந்தி தயாரிக்கவும். பிறகு, சீனியில் தேவையான தண்ணீர் சேர்த்து இளம்பாகாக காய்ச்சவும். இந்தப் பாகில் பூந்தி, முந்திரி, கல்கண்டு, திராட்சை, ஏலக்காய்த்தூள், பச்சைக் கற்பூரம் சேர்த்து புரட்டவும். சூடாக இருக்கும்போதே உருண்டைகளாகப் படிக்கவும்.

கையில் நெய் தடவிக் கொண்டு லட்டு பிடிக்க வேண்டும். ஆறிவிட்டால் பிடிக்க வராது.

## பொட்டுக்கடலை மாவு உருண்டை (மாலாடு)

**தேவையானவை:** பொட்டுக்கடலை, சீனி - தலா ஒரு கப், ஏலக்காய்த்தூள் - அரை டீஸ்பூன், முந்திரி, திராட்சை - சிறிதளவு, நெய் - அரை கப்.



**செய்முறை:** பொட்டுக்கடலை, சீனி இரண்டையும் நைஸாக அரைத்துக் கொள்ளவும். இந்த மாவில் முந்திரி, திராட்சை, ஏலக்காய்த்தூள் சேர்க்கவும், நெய்யை சூடாக்கி, மாவில் கொட்டி சிறு உருண்டைகளாக படிக்கவும்.

திருமண நிச்சயதார்த்தத்தின் போது இந்த உருண்டை செய்வது சில இனத்தினரிடையே சம்பிரதாயமாக இருக்கிறது.

## தேங்காய் பர்ஃபி

**தேவையானவை:** தேங்காய் துருவல், சீனி - தலா 2 கப், ஏலக்காய்த்தூள் - அரை டீஸ்பூன், நெய் - சிறிதளவு.




**செய்முறை:** ஒரு பாத்திரத்தில் சீனி, தண்ணீர் சேர்த்து கம்பிப் பதம் வரும்வரை பாகு காய்ச்சவும். இதில் தேங்காய் துருவலை சேர்த்துக் கிளறி, ஏலக்காய்த்தூள் சேர்க்கவும். மிதமான தீயில், கைபடாமல் கிளறவும். கலவை சுருண்டு வரும்போது இறக்கி, நெய் தடவிய தட்டில் கொட்டி, ஆறியதும் விருப்பமான வடிவில் வெட்டிக் கொள்ளலாம்.

தேங்காயை அடி ஓடுவரை துருவாமல், மேலோட்டமாகத் துருவி செய்தால், பர்ஃபி வெள்ளை வெளேரென இருக்கும்.

## ரவை லட்டு

**தேவையானவை:** ரவை, சீனி - தலா ஒரு கப், முந்திரி - சிறி தளவு, நெய் - அரை கப்.



**செய் முறை:** ரவையை வறுத்துக் கொள்ளவும். இதனுடன் சீனி சேர்த்து நைஸாக அரைக்கவும். முந்திரியை நெய்யில் வறுத்து, அதில் சேர்த்துக் கலக்கவும். சட்டியில் நெய் விட்டு சூடாக்கி, மாவில் கொட்டிக் கிளறி, சூடாக இருக்கும்போதே உருண்டைகளாகப் படிக்கவும். நெய் பாதி, வனஸ்பதி பாதியாக சேர்த்தும் உருண்டை படிக்கலாம்.



# எவர்கிரீன் ஐஸ்வர்யா ராய்

★ ஐஸ்வர்யா ராய் அபார அழகு தேவதை! தகுதியும் திறமையும் அழகாகச் சங்கமித்த ஹைக்கூ கவிதை. பசையாக இழுக்கும் பச்சைக் கண்கள்தான் இன்று உலக அழகின் உச்சம்!

★ மங்களூரில் 1973 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் திகதி பிறந்தார். பெற்றோர் கிருஷ்ணராஜ் ராய் மற்றும் விருந்தா ராய். ஒரே ஓர் அண்ணன் ஆதித்யா ராய்!

★ அப்பா, அண்ணா இருவரும் கடற்படையில் பணி புரிந்தவர்கள். இதனால், தாயின் அரவணைப்பிலேயே வளர்ந்த ஐஸ், 'என் அம்மாவின் உற்சாக ஊட்டல்தான் என் இப்போதைய சாதனைக்குக் காரணம்' என்பார்!

★ தேர்ந்த கட்டடக் கலைஞர் ஆக வேண்டும் என்பது தான் ஐஸ்வர்யாவின் லட்சியம். ஆனால், கட்டடக் கலைஞர் படிக்கும்போதே, மாடலிங் வாய்ப்புகள் குவிய, அழகுப் புயல் அப்படியே திசை திரும்பிவிட்டது!

★ கேமலின் நிறுவன விளம்பரத்தில் முதன்முதலில் ஐஸ் நடித்தபோது, அவருக்கு வயது ஒன்பது. பகுதி நேரப் புகைப்படக்காரரான தனது ஆசிரியர் ஒருவரின் வற்புறுத்தல் காரணமாகத்தான், அந்த விளம்பரத்தில் நடித்தார்!

★ பள்ளி நாட்களில் டான்ஸ், டிராமா என ஏரியா வாரியாக வெளுத்துக்கட்டினாலும், கணக்கில் ஐஸ்வர்யா கொஞ்சம் வீக். 'நீ எல்லாவற்றிலும் சிறந்தவள் என்று என்னால் சொல்ல முடியாது!' என்று அவருடைய கணித ஆசிரியை சொன்னதை இன்றுவரை மறக்கவில்லை ஐஸ். அன்று முதல் இன்று வரை, கடுமையான விமர்சனங்களுக்குச் சரியாக மனம் வருந்துவார்!

★ 1994 'மிஸ் இந்தியா' போட்டியில் சுஷ்மிதா சென் அழகிப் பட்டம் வென்றார். அதில் ஐஸ்வர்யாவுக்கு இரண்டாவது இடம். அதே வருடத்தில், உலக அழகிப் போட்டியில் இன்னும் தைரியம், நம்பிக்கை சேர்த்து கலந்துகொண்டார் ஐஸ். உலக அழகிப் பட்டத்தோடு மிஸ் போட்டோஜெனிக் பட்டமும் ஐஸ் வசம்!

★ ஐஸ்வர்யாவின் 21 ஆவது பிறந்த நாள் பரிசாகக் கிடைத்தது 'உலக அழகிப் பட்டம்'! அழகி கீரிடம் சூடிய உடன், அரங்கில் இருந்து அனைவரும் தத்தமது மொழிக ளில் 'பிறந்த நாள் வாழ்த்து' பாடிய பெருமை இவரைத் தவிர, வேறு அழகிகளுக்குக் கிடைக்கவில்லை!

★ 'மற்ற நாட்டுப் போட்டியாளர்கள் 'இந்தியர்களைப் படிப்பறிவு இல்லாதவர்கள். துளியும் ஆங்கிலம் பேசத் தெரியாதவர்கள்' என்று மட்டம் தட்டிக்கொண்டே இருப் பார்கள். அதைப் பொய்யாக்கும் வேகம்தான் உலக அழகிப் பட்டம் பெற எனக்கு உத்வேகம் ஏற்படுத்தியது!' என பேட்டிகளில் அடிக்கடி குறிப்பிடுவார் ஐஸ்வர்யா!

★ மாடலிங் நாட்களில் இருந்தே ஐஸ்க்ரீமைத் தவிர்ப்பவர். நாள் ஒன்றுக்கு எட்டு டம்ளர் தண்ணீர், கொஞ்சம் உடற்பயிற்சி, காய்கறி மற்றும் பழங்கள்தான் ஐஸின் அழகின் ரகசியம்!

★ 1997 இல் மணிரத்னத்தின் 'இருவர்' படம்தான் சினிமாவுக்கு ஐஸின் அறிமுகம். அதே ஆண்டு பாப தியோலுடன் ஐஸ் நடித்த முதல் இந்திப் படம் 'Aur pyar Ho Gaya'. இதற்காக, 'சிறந்த புதுமுகம்' விருது வென்றார் ஐஸ்!

★ 1999 இல் இவர் நடித்து வெளியான 'Hum Dil De Chuke Sanam' படம் பிலிம்பேர் விருது பெற்றுத் தந்தது. 'அழகு பொம்மை' அடையாளம் உடைத்து 'திறமையும் நிரம்பியவர்' என்று, முதல் அழுத்த முத்திரை பதித்தார்!

★ இளவரசி டயானாவுக்குப் பிறகு காதல், திருமணச் செய்திகளுக்காக பத்திரிகையாளர்கள் அதிகமாகப் பின் தொடர்ந்தது ஐஸ்வர்யாவை என்கிறார்கள்!

★ கர்நாடகம் மற்றும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தை முறையாகக் கற்றவர். தொடர்ந்து பரத நாட்டியமும் கற்றுக்கொண்டார். சினிமாக்களில் ஐஸ்வர்யாவின் பரத அசைவுகள் அனைத்தும் சொந்த முனைப்புதான்!

★ ஆயுர்வேதப் பொருட்களை மட்டுமே உபயோகிப்பார். வீட்டு சமையல் பொருட்களையே மேனிப் பராமரிப்புக்கும் பயன்படுத்துவார். இரவு உறங்கச் செல்லும் முன் மேக்கப் கலைக்க ஐஸ் பயன்படுத்தும் மாய்சரைஸர்... சுத்தமான பசும் பால்!

★ 17 ஆயிரம் இணையத்தளங்கள் ஐஸ்வர்யாவுக்காகத் தங்கள் தளத்தில் பிரத்தியேக இடம் ஒதுக்கி இருக்கின்றன. இவருக்கு அடுத்தபடியாக அதிக பக்கங்களை ஆக்கிரமித்து இருப்பவர் பொப் பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ்!

★ 2004 இல் 'டைம்ஸ்' பத்திரிகை, உலக அளவில் மக்களை ஈர்த்த 100 அழகுப் பெண்களில் ஐஸ்வர்யாவையும் ஒருவராகத் தேர்ந்தெடுத்தது!

★ 2005 இல் பார்ப நிறுவனம், இங்கிலாந்தில் ஐஸ்வர்யா ராயைப் போல் தோற்றம்கொண்ட பார்ப பொம்மைகளை விற்பனைக்கு வெளியிட்டது. ஒரே நாளில் எல்லாப் பொம்மைகளும் விற்றுத் தீர்ந்து விட்டன. இன்றும் அந்த கலெக்ஷன் பொம்மைகளுக்கு ஏக டிமாண்ட் உண்டு!

★ அமெரிக்காவின் பிரபல 'ஒப்ரா வின்ப்ரே ஷோ'வில் கலந்துகொண்ட முதல் இந்திய நடிகை ஐஸ்தான். அந்த ஷோவில், 'நீங்கள் மிக விரைவாக சேலை கட்டிக்கொள்வீர களாமே!' என்று ஒப்ரா கேட்க, பதில் சொல்லவில்லை ஐஸ் வர்யா. ஒரு சேலையை நான்கே நிமிடங்களில் ஒப்ராவுக்கு அணிவித்து அப்ளாஸ் அள்ளினார்!

★ லண்டனில் உள்ள மேடம் டுஸாட்ஸ் மெழுகு மியூஸியத்



தில் இடம் படித்த முதல் இந்தியப் பெண் மெழுகுச் சிலை, அழகுச் சிலை ஐஸ்வர்யாவினுடையதுதான்!

★ இவரிடம் உள்ள கைக்கடிகாரங்களை வைத்து ஒரு கண்காட்சியே நடத்தலாம். அவ்வளவு பெரிய கலெக்ஷன். இவர் பிராண்ட் அம்பாஸடராக இருக்கும் வகை கைக்கடிகாரங்களின் ஆரம்ப விலையே 18 ஆயிரம்!

★ 'குரு' படப்பிடிப்பின்போது, ஹோட்டல் லாபியில் ஐஸ் நின்று கொண்டு இருந்தார். கையில் ஒற்றை ரோஜாவோடு வந்து அப்போது காதலைச் சொன்னார் அபிஷேக் பச்சன். தன்னைவிட, மூன்று வயது இளையவரான அபிஷேக் பச்சனுக்கு உடனே ஓ.கே. சொல்லிவிட்டார் ஐஸ்வர்யா ராய்!

★ சமீபத்திய பேட்டி ஒன்றில், 'என் அப்பாவைப் போல இரண்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ள ஆசை!' என்று பூரித்தார் அபிஷேக் பச்சன். அடுத்த நொடியே, 'ஆனால், இதற்கு ஐஸ்வர்யா ஈடுபாடு காட்டவில்லை!' என்று தன் வருத்தத்தையும் பதிவு செய்துவிட்டார்!

★ நிஜ வாழ்வில் ஐஸ்வர்யா – அபிஷேக் கெமிஸ்ட்ரி அபாரமாக இருந்தாலும், நிழல் பதிவான 'குரு' மற்றும் 'ராவணா'வில் அது எடுபடவில்லை என்பது தம்பதிகளுக்கே சற்று வருத்தம் தான்!

★ எத்தனையோ விளம்பரங்கள், சினிமாக்களில் உடல் மறைக்கும் நகைகள் அணிந்து நடித்து இருந்தாலும், தங்கத்தின் மீது ஒரு துளிகூட விருப்பம் இல்லாதவர்!

★ தன் நீலம் கலந்த பச்சை விழிகளே தனது இத்தனை புகழுக்கும் காரணம் என்று நம்புகிறார் ஐஸ்வர்யா!

## மாதிரிக் கவிதைகள்

எதிர் காலத்தின் மேனியில்
எவன் கல் எறிந்தானோ...?
வறுமைக் காயங்கள்
நிறைந்து விட்டன.

★ ★ ★

தத்துவப் பாடல்களுக்கு
கொலை வாள்களால்
இசை மீட்டுவதா...?

★ ★ ★

பயிர்களுக்கு தூவப்பட்ட
பசளைகளைப் பறித்து
வயிறு நிறைக்கின்றன
ஓரத்து களைகள்.... ஓ
அங்கேயும் மனித மூளையோ....

★ ★ ★

முற்றுப் புள்ளிகள்
முன்னுரிமை
கொடுக்கின்றன
கேள்விக் குறிகளுக்கு!

★ ★ ★

பழுது போகாமல்
பத்திரப்படுத்தி
வைத்திருக்கிறேன்
குளிர்சாதனப் பெட்டிக்குள்
உன் நினைவுகளையும்...

★ ★ ★

நீ
குடையில் போனாலும்
எனக்கு மழையைப் பிடிக்காது
உன் நிழல்
நனைந்து விடுமே....

★ ★ ★

எங்கு நான்
தேநீர் குடித்தாலும்
ஒருபோதும்
இனித்ததில்லையே
உன்னைப் போல....

★ ★ ★

உயிரோடு
புதைக்கப்பட்டேன்
உன் கன்னக்குழியில்!

★ ★ ★

புல்லாங்குழல்
ஆசைப்படுகிறது
உன் உதடுகளை
ஊதுவதற்கு

★ ★ ★

இந்த இருபத்தியோராம்
நூற்றாண்டில்
உங்களோடு இருப்பதற்கும்
உயிரோடு இருப்பதற்கும்
மரித்தால்
மறுபிறவிக்காவது
விண்ணப்பிக்கலாம்!

★ ★ ★

என் காதலையும் சேர்த்து
வாழ்ந்து கொண்டிரு
உனக்காகவும் செத்துப்போகிறேன்!

★ ★ ★

உன் பின்னாலே
என்னால் இனியும் வரமுடியாது
என்னை நிராகரிப்பது
நீ மட்டுமல்ல
உன் நிழலும் தான்!

(மாதிரிகள் தொடரும்)

நெடுந்தீவு முகிலன்



## அடுத்தடுத்து இசை வெளியீடு சந்தோசத்தில் ஹாரிஸ் ஜெயராஜ்

ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்த இரண்டு படங்களின் இசை வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. தமிழில் ஒரு படம், தெலுங்கில் ஒரு படம் என கலந்து இசையமைக்கிறார் ஹாரிஸ் ஜெயராஜ். தமிழில் இவர் இசையமைத்து பிரபுதேவா இயக்கி, ஜெயம் ரவி, ஹன்ஷிகா மோத்வானி நடித்துள்ள படம் 'எங்கேயும் காதல்'. இந்தப் படத்தின் பாடல் வெளியீட்டு விழா அண்மையில் சென்னையில் நடந்தது. கல்பாத்தி எஸ்.அகோரத்தின் ஏ.ஜி.எஸ் என்டர்டெய்ன்மண்ட் நிறுவனம் இந்தப் படத்தை தயாரித்திருக்கிறது. தெலுங்கில் இவர் இசையமைத்து பொம்மரிலு புகழ் பாஸ்கர் இயக்கத்தில் ராம்சரண் தேஜா, ஜெனிலியா நடித்துள்ள படம் 'ஆரஞ்ச்'. இந்தப் படத்தின் பாடல் வெளியீட்டு விழாவும் அண்மையில் நடந்தது. இதனால் ஹாரிஸ் ஜெயராஜ் மிகுந்த சந்தோஷத்தில் உள்ளார்.

## உதயநிதியுடன் ஜோடி சேர மறுத்தார் நயன்தாரா

உதயநிதி ஸ்டாலின் நாயகனாக அறிமுகமாகும் புதிய படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க மறுத்துவிட்டார் நயன்தாரா எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன . ஆதவன், விண்ணைத்தாண்டி வருவாயா, மதசாரப்பட்டினம், பாஸ் என்கிற பாஸ்கரன் ஆகிய வெற்றிப் படங்களைக் கொடுத்தவர் உதயநிதி ஸ்டாலின். தற்போது தயாரிப்பாளர் என்ற நிலையிலிருந்து நாயகனாக அவர் அவதாரம் எடுக்கவிருக்கிறார். பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தின் இயக்குநர் ராஜேஷ்தான், உதயநிதியை நாயகனாக்குகிறார். அவர் சொன்ன கதையைக் கேட்டதும் ஹீரோவாக நடிக்க ஒப்புக்கொண்டு விட்டாராம் உதயநிதி. தற்போது உதயநிதிக்கு ஜோடி தேடிக்கொண்டிருக்கிறார்கள். உதயநிதிக்கு ஜோடியாக நடிக்குமாறு கேட்டு நயன்தாராவை அணுகியபோது, அவர் சரி என்று சொல்லமறுத்துவிட்டாராம். மேலும், இப்படத்தில் நடிக்கும் ஆர்வத்திலும் அவர் இல்லையாம். அவர் தற்போது வேறு மாதிரியான சூழலில் சிக்கியிருப்பதால் புதிய படங்களில் நடிக்கும் எண்ணம் இல்லை என்பதே இந்த நிராகரிப்புக்குக் காரணம் என்கிறார்கள்.

இருந்தாலும் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கிறாராம் இயக்குநர். அதேசமயம், வேறு நாயகிகள் குறித்தும் பரிசீலனை நடந்து வருகிறதாம்.

இப்படத்திற்கு நண்பேன்டா என்ற பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தில் இடம்பெற்ற பிரபலமான வசனத்தையைத் தலைப்பாக் கலாம் என்று தெரிகிறது.



## ஹிந்திப் படங்களில் நடிக்கச் சென்றதால் அதிக பட வாய்ப்புகளை இழந்தேன் - சதா

ஹிந்திப் படங்களில் நடிக்கப் போனதால், தமிழ் உள்ளிட்ட தென்னிந்தியப் பட வாய்ப்புகளை இழந்தேன் - என்கிறார் நடிகை சதா.

பல வெற்றித் தமிழ்ப் படங்களில் நடித்தவர் சதா. ஆனால் அந்நியன் மற்றும் உன்னாலே உன்னாலே ஆகிய படங்களுக்குப் பின்னர் அவர் தமிழ்ப் படங்களில் நடிக்கவில்லை. ஹிந்திப் படங்களில் நடிப்பதாகச் செய்திகள் வந்தன. சில வருடங்கள் கழித்து மீண்டும் புலிவேஷம் படத்தில் நடிக்கிறார் சதா. இதுகுறித்து அவர் கூறுகையில், தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் ஜெயம் படம் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, அதிக பட வாய்ப்புகள் என்னைத் தேடிவந்தன. இதில் ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் ஜோடியாக நடித்த அந்நியன் தென்னிந்திய மொழிகளுக்கு என்னை மேலும் அடையாளம் காட்டியது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் 20 படங்களில் நடித்துவிட்டு ஹிந்திப் படங்களில் நடிக்க முடிவுசெய்தேன். 'லவ் கிச்சடி', 'கிளிக்' ஆகிய படங்களில் நடித்தேன். இந்தப் படங்கள் சரியான நேரங்களில் வெளிவரவில்லை. படப்பிடிப்புத் தொடந்து நீண்டகாலமாக நடந்தது. எனது ஏனைய படவாய்ப்புகளும் வீணாகின. ஒப்பந்தப்படி, இந்தப் படங்களை முடித்துவிட்டுதான் அடுத்த படங்களில் நடிக்கவேண்டும் என்ற விதி இருந்ததால் பல வாய்ப்புகளை இழக்க வேண்டியதாகிவிட்டது.

இதற்காக யாரையும் குற்றம் சொல்லவில்லை. இப்போது தமிழில் புலி வேஷம் படத்தில் நடித்து வருகிறேன். ஹிந்தியில், கல்பாலி, கன்னடத்தில் மல்லரி, துண்டா துண்டி ஆகிய படங்களில் நடித்து வருகிறேன் - என்றார்.



## அனுஷ்காவுக்கு நண்பர்கள் அறிவுரை

சிங்கம் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து தமிழில் அனுஷ்காவுக்கு நிறைய வாய்ப்புகள் குவியத் தொடங்கியுள்ளன. தற்போது சிம்பு ஜோடியாக 'வானம்' படத்தில் நடித்து வருகிறார். இதையடுத்து விஜய் இயக்கும் புதிய படத்தில் நடிப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார். இதற்கிடையில் தெலுங்கிலும் படவாய்ப்புகள் தேடிவரத் தொடங்கியுள்ளன. தமிழ், தெலுங்கு இரண்டிலும் வாய்ப்பு வருவதால் எதைத் தேர்வுசெய்வது என்பதில் குழப்பம் அடைந்துள்ளார். இந்நிலையில் மகேஷ் பாபுவுடன் அவர் நடித்த தெலுங்கு படம் 'கலீஜா' வெற்றி பெறாததால் அதிர்ச்சியடைந்துள்ளார். தெலுங்கில் முதல்நிலை நடிகை என்ற அந்தஸ்தில் இருக்கும் அனுஷ்காவுக்கு இதனால் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இவருக்கு அடுத்த வரிசையில் உள்ள இலியானா, காஜல் அகர்வால் ஆகியோர் எப்படியாவது முதலிடத்தைப் பிடிக்கவேண்டும் என்று களத்தில் கவனம் செலுத்த தொடங்கிவிட்டனர்.

இரண்டு மொழிகளிலும் நடித்துக்கொண்டிருந்தால் தெலுங்கில் உள்ள முதல் இடத்தை இழக்க வேண்டியிருக்கும். தமிழைவிட தெலுங்கு படங்களில் அதிக கவனம் செலுத்துமாறு அவரது நெருங்கிய நண்பர்கள் அனுஷ்காவுக்கு அறிவுரை கூறியிருக்கிறார்கள்.

## எந்திரனில் ரஜினி, ஐஸ் பயன்படுத்திய உடைகள் இணையத்தளத்தின் மூலம் ஏலத்துக்கு விடப்படும்

ஹொலிவூட்டின் பிரபல நடிகர், நடிகைகள் பயன்படுத்திய உடைகளை ஏலத்தில் விடுவது வழக்கம். அவை மிகப் பெரிய விலைக்கு ஏலம் போய் ரசிகர்களை வியப்பில் ஆழ்த்துவது வழக்கம். இந்த வழக்கம் இப்போது தமிழ் சினிமாவுக்குள் நுழைந்துள்ளது.
தமிழில் எந்திரன் என்ற ஹொலிவூட்டுக்கு நிகரான படத்தைக் கொடுத்த சன் பிக்சர்ஸ் நிறுவனம், இப்போது அந்தப் படத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினியும் ஐஸ்வர்யா ராயும் பயன்படுத்திய உடைகளை ஏலம் விட இருக்கின்றது. இணையத் தளத்தின் மூலம் இந்த ஏலம் நடக்கும் என்றும், இதற்கான அறிவிப்புகள் விரைவில் வெளியாகும் என்றும் சன் பிக்சர்ஸ் தெரிவித்துள்ளது. இந்தியப் படம் ஒன்றின் உடைகள் ஏலத்தில் விடப்படுவது இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.



## எந்திரன் படத்துக்கு கிடைத்த வெற்றி எனக்குப் புத்துணர்வை அளிக்கிறது

மெய் நெகிழ்கிறார் பட இயக்குநர் சங்கர்

எந்திரன் படத்துக்குக் கிடைத்த வரவேற்பும் பாராட்டுகளும் தனக்குப் புத்துணர்வைத் தந்துள்ளன என நெகிழ்கிறார் இயக்குனர் ஷங்கர்.

படத்தை ஆரம்பித்ததில் இருந்து இசை வெளியீடு வரை, சங்கர் அவ்வப்போது தனது எண்ணங்களையும் அனுபவங்களையும் அதிகாரப்பூர்வ இணையத்தளத்தின் மூலமாகப் பதிவுசெய்துவந்தார். இந்த மகிழ்ச்சி குறித்து சங்கர் கூறியவை வருமாறு:-
எந்திரன் படத்தை பார்த்து ரசித்து ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி. விமர்சனம் செய்து பாராட்டிய அனைத்து ஊடகங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.
தெற்கு, வடக்கையும் தாண்டி, உலக அளவில் எந்திரன் சாதனையை நிகழ்த்தியிருப்பது பெருமகிழ்ச்சியளிக்கிறது. எந்திரனைப் பார்த்த பின்னர், எனக்கு நேரடியாகவும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு இந்தியத் திரையுலகின் முக்கிய கலைஞர்கள் பாராட்டினார்கள். அமீர் கான் படத்தைப் பார்த்துவிட்டு, என்னை வீட்டுக்கு அழைத்துப் பாராட்டியதில் நெகிழ்ந்துபோனேன். அமீர்கான், அவருடைய மனைவி கிரண் ராவ் மற்றும் இயக்குநர் ராஜ்குமார் ஹிரானி ஆகியோருடன் எந்திரன் படத்தைப் பற்றி விடிய விடியப் பேசினோம். எந்திரனை ரசித்துவிட்டு தனது பரவசத்தைப் பகிர்ந்துகொண்டார், ஹிர்த்திக் ரோஷன். பூச்செண்டுடன் அழகான வாழ்த்துச் செய்தியையும் அனுப்பி அசத்தினார், நடிகர் கமல்ஹாசன். கன்னட நடிகர் உபேந்திரா, நடிகர் பிரகாஷ் ராஜ் மற்றும் இயக்குநர்கள், நடிகர்கள் பலரும் தங்களது பாராட்டைப் பகிர்ந்துகொண்டனர். இயக்குநர் பாலச்சந்தரிடம் இருந்து வந்த வாழ்த்துச் செய்தியைக் கண்டு வியந்துவிட்டேன். திரையுலகில் 30 ஆண்டுகளாக வெற்றிகரமான இயக்குநராக பாலசந்தர் வலம் வருகின்றார். அவரைப் போல் 15 ஆண்டுகளேனும் இயக்குநராக நிலைக்கவேண்டும் என்பதே எனது லட்சியம். அவரது வாழ்த்துக் கடிதத்தைப் படித்தபோது, உணர்வெழுச்சியின் உச்சத்துக்கே சென்றுவிட்டேன். கடிதத்தை முழுவதாகப் படித்து முடித்த அந்தத் தருணத்தில், எனது கண்ணீரை அடக்க முடியவில்லை. எனது தொழிலில் பணிவுடனும், கூடுதல் உற்சாகத்துடனும் இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. - இப்படித் தெரிவித்தார் ஷங்கர்.





## நான் எந்த இணையத்தளத்தையும் பாவிப்பதில்லை - அசின்

என் பெயரில் இணையத் தளத்தில் தொடர்ந்து மோசடி நடப்பதாகவும், இதைத் தடுக்கக் கோரியும் முடியாததால், ரசிகர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் நடிகை அசின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இது குறித்து அவர் தெரிவித்ததாவது, எனது பெயரில் போலி இணையத்தளங்கள் இயங்குகின்றன. நான் பேசுவதுபோல் அவற்றில் தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன. ட்விட்டர், ஆர்குட், பேஷ்புக் போன்ற எந்த இணையத் தளங்களையும் நான் பாவிப்பது கிடையாது. எனது ரசிகர் இந்தப் போலி இணையத்தளங்களைப் பார்த்து ஏமாறக் கூடாது - என்றார்.




## நான் சம்பளத்தை மட்டும் பார்ப்பதில்லை ~ தமன்னா

தமன்னா சம்பளத்தை உயர்த்தி விட்டார் என்றும், இதில் எழுந்த பிரச்சினை காரணமாகத்தான், லிங்குசாமியின் புதிய படத்தில் கூட நடிக்க அவர் மறுத்துவிட்டார் என்றும்கூறப்பட்டது.
இது குறித்து தமன்னா தெரிவிக்கையில், நான் சம்பளத்தை உயர்த்தி விட்டதாகக் கூறுவதில் உண்மையில்லை.
எனக்குப் பணம் முக்கியமல்ல. அதைவிட நல்ல படங்களில் நடிக்கவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. கதை, இயக்குநர், நடிகர், தயாரிப்பாளர் எனப் பல விடயங்களைப் பார்த்துத்தான் நான் படங்களை ஒப்புக்கொள்கிறேன். சம்பளம் அதிகமா குறைவா என்று நான் பார்ப்பதில்லை. நல்ல கதை இருக்கா என்றுதான் பார்க்கிறேன்.
லிங்குசாமியின் 'வேட்டை' படத்தில் நடிக்காததற்குச் சில காரணங்கள் உள்ளன. இயக்குநர் லிங்குசாமியை நான் மதிக்கிறேன். அவரது 'பையா' படத்தில் நான்தான் நாயகியாக நடித்தேன். ஆனால் அவர் கேட்ட திகதிகளில் நான் வேறு படங்களில் நடித்துக்கொண்டிருப்பதால் மறுத்துவிட்டேன் - என்றார்.

## கமலை புகழ்கிறார் ~ த்ரிஷா

எனது தமிழ் உச்சரிப்பு அவ்வளவு நன்றாக இருக்காது. அதை கமல் சேர் தான் சரிசெய்கிறார் என்கிறார் நடிகை த்ரிஷா. கமலுடன் த்ரிஷா ஜோடி சேர்ந்திருக்கும் படம் மன்மதன் அம்பு.
உதயநிதி ஸ்டாலின் தயாரிக்க, கே.எஸ். ரவிக்குமார் இயக்கும் படம் இது.
இந்தப் படத்தில் நடித்த அனுபவம், கமல்ஹாஸனுடனான அனுபவம் எனப் போகின்ற இடமெல்லாம் மன்மத அம்பு குறித்து த்ரிஷா ஒரு செய்தியாவது சொல்லத் தவறுவதில்லை.
இந்தமுறை, கமல் எப்படித் தனக்குத் தமிழ் சொல்லிக்கொடுத்தார் என்பதை இப்படிக் கூறுகிறார் த்ரிஷா,
'கமல் சேருடன் நடிக்கவேண்டும் என்பது எனது பல வருடக் கனவு. தசாவதாரம் படத்தில் கமல் சேர் நடிப்பதற்காகக் அழைத்திருந்தார். அப்போது எனக்கு நேரம் கிடைக்கவில்லை.
இனிமேல் அவருடன் நடிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்காது என்று நினைத்திருந்தேன். இந்த நேரத்தில், மன்மதன் அம்பு வந்தது. எனது தமிழ் உச்சரிப்பு அவ்வளவு சரியாக இருக்காது. என் உச்சரிப்பை கமல் சேர் திருத்தினார். இப்போது நான் அட்சர சுத்தமான தமிழ் பேசுவதற்கு ஆரம்பித்துவிட்டேன். இதற்குக் காரணம் கமல்தான்'' - என்றார்.


# ரஸியா ஸுல்தானா

புத்தாக்கம் : கே.கான்



# புறாவும் குருவிகளும்

ஒரு காட்டிலே மரமொன்றின் மீது ஒரு புறாக் கூடு இருந்தது. அதில் ஒரு சோடிப் புறாக்கள் தமது குஞ்சுகளோடு மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தன. காட்டிலுள்ள ஏனைய பறவைகளும் பக்கத்திலேயே தமது குஞ்சுகளோடு தத்தம் கூடுகளில் வாழ்ந்து கொண்டிருந்தன. ஆனால், அந்தக் கூடுகளுக்கு அருகில் குஞ்சுகளைப் பிடித்துத் தின்னுகின்ற



பூனையொன்றும் வாழ்ந்து வந்தமை அவற்றுக்குப் பிரச்சினையாக இருந்தது.

ஒரு தடவை புறா தனது கூட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. அப்போது மற்றொரு புறாவின் அவலக் குரலொன்று அதற்குக் கேட்டது. வெளியே எட்டிப் பார்த்தபோது, பூனை புறாக் குஞ்சுகளைத் துக்கிக்கொண்டு ஓடுவதைக் கண்டது. புறா உடனே பெருந்துணிச்சலோடு செயல்பட்டு குஞ்சுகளை அதனிடமிருந்து விடுவித்தது.

இந்தச் செய்தியை காட்டின் அரசன் கேள்விப்பட்டதும், அது புறாவைப் பறவைகளின் சிப்பாயாக நியமனம் செய்தது. பறவைக் குஞ்சுகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப் பட்டது.

சிப்பாயான பிறகு புறாவுக்குக் கர்வம் தலைக்கேறி விட்டது. சில நாட்கள் கழித்து ஓநாய்கள் சிலவற்றைச் சந்தித்தது. அவற்றிடம் சென்று குறும்பு செய்ய ஆரம்பித்தது. அதனால் அவை புறாவைக் கடும் சினத்தோடு நோக்கின. அப்போது புறா, 'உங்களால் எனக்கு என்ன செய்துவிட முடியும்? எல்லாப் பறவைகளும் எனக்குப் பக்கபலமாக இருக்கின்றன' என்று பண்பாடற்ற முறையிலும் கர்வத்தோடும் சொன்னது.

இதனைக் கேட்ட ஓநாய்கள் அதனைத் துரத்திச் சென்றன. புறாவும் பறக்க ஆரம்பித்தது. தொடர்ந்து பறக்க முடியாமல் போகவே களைப்புற்றுக் கீழே விழுந்துவிட்டது. சிறிது நேரத்துக்குப் பின்னர் சில எலிகள் அப்பக்கமாக வந்தன. புறா விழுந்து கிடப்பதைக் கண்டு, "உங்களுக்கு உதவி செய்ய எம்மால் முடியும்" என்று அவை சொன்னபோது, திமிர் பிடித்த புறா, "இவ்வளவு பெரிய சிப்பாயான எனக்கு மிகச் சின்னவர்களான நீங்கள் என்ன உதவி செய்ய முடியும்?" என்று கிண்டலாகக் கூறியது.


எலிகள் போன பிறகு புறா பறப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தது. ஆனால், அது களைப்பினால் மிகவும் சோர்ந்து போயிருந்ததால், அதற்குப் பறக்க முடியவில்லை.

அப்போது ஓநாய்கள் வந்து கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. புறா எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்தது. எலிகளிடமிருந்து உதவி பெற்றிருக்கலாமே என்று அப்போது தான் அதற்கு யோசனை வந்தது. அதே நேரத்தில் சில குருவிகள் அந்த வழியால் சென்று கொண்டிருந்தன. அந்தக் குருவிகள் புறாவைப் பார்த்து, "நீங்கள் பறவைகளான எங்களைக் காப்பாற்றுகிறீர்கள். வேண்டுமானால் நாங்கள் உங்களுக்கு உதவி செய்கிறோம்" என்று கூறின.

புறா அவற்றின் உதவியைப் பெற எண்ணியது. எனவே, குருவிகள் அதனைப் பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் சென்றன. அதன் பிறகு "துன்பத்தின்போது சின்னஞ்சிறிய பிராணிகளின் உதவிகூடப் போதுமாகிறது" என்பதை அது உணர்ந்து கொண்டது. ✱

இணையத்தளக் கதை - உருது

**தமிழில்: ஸீயெம்மே**



**சின்னக்கண்மணிகளே!**

இந்த இரண்டு படங்களும் ஒன்றல்ல. குறைந்தது 7 வித்தியாசங்கள் உண்டு. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.






முன்னொரு காலத்தில் பூமாதேவிக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் நரகாசுரன். அவன் வளர்ந்த பிறகு மிகவும் கொடிய அரக்கனாக மாறினான். முனிவர்கள், தேவர்கள், மக்கள் என எல்லோரையும் மிகவும் துன்புறுத்தினான். இந்திர லோகத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இதனால் இந்திரனும் தேவர்களும் பூலோகத்தில் கண்ணனாக அவதரித்த மகாவிஷ்ணுவிடம் சென்று நரகாசுரன் செய்யும் அட்டகாசங்களைக் கூறினர்.

கண்ணனும் அவர்களைக் காப்பாற்றுவதாக வாக்களித்தார். நரகாசுரனுடன் போர் புரிவதற்காகப்

# தீபாவளி பிறந்த கதை

புறப்பட்டார். கண்ணனின் மனைவி சத்தியபாமா வில் வித்தை மற்றும் போர் முறைகளை நன்றாகக் கற்றிருந்தாள். இதனால், போர் செய்யப் புறப்படும் கண்ணனின் ரதத்தை ஓட்ட, சாரதியாக வருவதாகப் பணிவுடன் கேட்டாள். மாயக் கண்ணனும் அதற்குச் சம்மதித்தார். சத்தியபாமாவும் கண்ணனும் நரகாசுரனை வதம் செய்யப் புறப்பட்டனர்.



கண்ணனுக்கும் நரகாசுரனுக்கும் கடும் போர் நடந்தது. நரகாசுரனுக்கு கண்ணனால் தன்னைக் கொல்ல முடியாது என்ற இறுமாப்பு! நரகாசுரன் கடும் தவம் புரிந்து சிவனிடம் தன்னைத் தேவர்களும் மானிடர்களும் கொல்லக் கூடாது என்றும், தாயின் அம்பினால் மட்டுமே தான் கொல்லப்பட வேண்டும் என்றும் விநோதமான வரத்தைப் பெற்றிருந்தான். தாய் தன்னைக் கொல்ல மாட்டாள் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

அப்போது நரகாசுரன் சாமர்த்தியமாக ஓர் அம்பை கண்ணன் மேல் எய்தான். மாயக் கண்ணனும் அம்பின் விஷத்தால் மயக்கமானது போல் சாய்ந்தார். சத்தியபாமா உடனே தன் வில்லில் அம்பை ஏற்றி நரகாசுரன் மார்பில் பாயச் செய்தாள். சத்தியபாமா எய்த அம்பு குறி தவறாமல் நரகாசுரன் மேல் பாய்ந்தது. அம்பு மார்பில் பதிந்தவுடன், அவன் அம்மா என்று அலறியபடியே வீழ்ந்தான். நரகாசுரனின் தாயான பூமாதேவி தான் சத்தியபாமாவாக அவதரித்திருந்தாள்.

இதை ஏற்கனவே அறிந்திருந்த கண்ணன், சத்தியபாமா நரகாசுரன் மேல் அம்பு எய்ய வேண்டும் என்பதற்காகவே மயக்கமானது போல் நடித்தார். இதற்குத் தான் சத்தியபாமாவைத் தனக்குச் சாரதியாக போருக்கு வரச் சம்மதித்தார்.

நரகாசுரன் வரம் வாங்கியிருந்தபடியே தன் தாயால் கொல்லப்பட நேர்ந்தது. அவன் சாகும் தறுவாயில் தான் செய்த தவறுகளை மன்னித்தருள வேண்டினான். மற்றும் தன் வீழ்ச்சியை மக்கள் எல்லோரும் அதிகாலையில் எண்ணெய் ஸ்நானம் செய்து, புது உடைகளை அணிந்து நிறைய விளக்குகளை ஏற்றிவைத்து, ஆனந்தமாக விருந்து சாப்பிட்டு, பட்டாசுகள் கொளுத்தி தீபாவளியாகக் கொண்டாட வேண்டும் என்று வரம் கேட்டான்.

கண்ணனும் சத்தியபாமாவும் அவனை மன்னித்து மோட்சத்தை அளித்தனர். இப்போது தெரிந்து கொண்டீர்களா, தீபாவளி பிறந்த கதையை! ★

# கேள்வி நேரம்


**சில மரங்களின் அடிமரத்தைச் சுற்றிக் கொத்தி விடுகிறார்களே, அதற்கு காரணம் என்ன?**

ஆம், அதனை நீங்கள் கவனித்தீர்களா? அந்த மாதிரி தென்னை மரங்களில் கூடக் கொத்தி விடுவதுண்டு. அது எதற்காகத் தெரியுமா? அந்த மரங்கள் நன்கு காய்க்க வில்லை என்றால் அவ்விதம் செய்வார்கள்.

கல்கத்தாவில் ஸர் ஜகதீஸ் சந்திர போஸ் என்று ஒருபெரிய விஞ்ஞானி இருந்தார். அவர்தான் செடிகளுக்கும் உணர்ச்சி உண்டு என்று கருவிகள் மூலம் காட்டியவர். அவர் ஒருசெடியை வெயிலிலும் காற்றும் மழையும் தாக்காதபடி ஒரு கண்ணாடிப் பாத்திரத்தின் கீழ் மிகவும் கருத்தாக வளர்த்தார். ஆனால், போதுமான உரமும், நீரும், காற்றும் வெயிலும் கிடைத்த போதிலும் அது நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வந்தது. அதன்மேல் மெதுவாக அடிமேல் அடியாகப் பல அடிகள் கொடுத்தார். அவ்வளவுதான், அந்தச் செடி மெலிவு நீங்கிச் செழிப்பாக வளரத் தொடங்கிற்று.

ஆகவே மரங்களும் செடிகளும் எவ்வித வருத்தமுமின்றி வளர்ந்தால் அவை சீக்கிரம் மெலிந்து இறந்து போகும். அவ்வாறேதான் நாமும் சொகுசாய் வாழ்ந்தால் நல்ல பலமுடையவர்களாக ஆகமாட்டோம். எந்தச் சிறு துன்பத்தையும் பொறுக்க முடியாத கோழைகளாக ஆகிவிடுவோம். ★

# ரசிகையை முத்தமிட்டதற்காக சிறைவாசத்துக்கு முகம் கொடுக்கும் ஈரானிய உதைபந்தாட்ட வீரர்கள்




ஈரானின் சட்டதிட்டங்களை மீறி பெண் ரசிகை ஒருத்தியை முத்தமிட்ட குற்றத்துக்காக மூன்று ஈரானிய உதைபந்தாட்ட வீரர்கள் சிறைத்தண்டனைக்கு முகம் கொடுத்துள்ளனர். உறவு முறையற்ற ஆணோ, பெண்ணோ உடல்ரீதியாக தழுவிக்கொள்வதோ அல்லது முத்தமிடுவதோ இஸ்லாமியச் சட்டப்படி குற்றமென வரையறுக்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டில் இஸ்லாமியப் புரட்சியின் பின்பு அறிமுகப்படுத்தப்பட்ட இஸ்லாமிய ஷரியா சட்டதிட்டங்களுக்கமைய இத்தகைய குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக கசையடிகள், அபராதம் அல்லது சிறைத் தண்டனை வழங்கப்படலாம்.

குற்றமிழைத்துள்ள மூன்று உதைபந்தாட்ட வீரர்களையும் கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இணையத்தளம் ஒன்றின் செய்தியின்படி, இந்த மூன்று விளையாட்டு வீரர்களும் ஈரானின் விமான நிலையமொன்றில் இந்த ரசிகையை முத்தமிட்டனர் என்று கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட மூன்று விளையாட்டு வீரர்களையும் சிறைத்தண்டனையில் இருந்து காப்பாற்றிக்கொள்ள அணியின் பயிற்சியாளர் பகீரதப்பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளார் எனக்கூறியுள்ள அந்த இணையத்தளம் தாம் இழைத்த தவறுகளுக்கு அந்த வீரர்களே பொறுப்பேற்க வேண்டுமென்றும் அவர்கள் சார்பாக மன்னிப்புக்கேட்க அவர்களது பயிற்சியாளருக்கோ, மற்றவருக்கோ உரிமையில்லை எனவும் நீர்க்கமாகக் கூறியுள்ளது.



2003 ஆம் ஆண்டு ஈரானிய நடிகை ஒருவர் திரைப்பட இயக்குநர் ஒருவரைப் பகிரங்கமாக முத்தமிட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒத்திவைக்கப்பட்ட 74 கசையடித் தண்டனையைப்பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

2005 ஆம் ஆண்டில் கன்சர்வேட்டிவ் ஆதரவாளர்களின் பங்களிப்புடன் ஆட்சிக்கு வந்த ஈரானிய ஜனாதிபதி மஹ்மூட் அஹமட் நஜாட் ஈரானில் கடுமையான இஸ்லாமியச் சட்டங்களை அமுலுக்குக்கொண்டு வந்தார். அதன் அடிப்படையிலோ, வேறு மார்க்கத்திலோ அவர் இரண்டாவது தடவையும் ஈரான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை இன்றளவும் எதிர்க்கட்சிகளால் விமர்சனம் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

— கப்பார்

## ஆரூடம் கூறிய ஒக்டோபஸ் மறைவால் உலகமே சோகத்தில் ஆழ்ந்தது

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் முடிவுகளைத் துல்லியமாக - சரியாகக் கணித்துச் சொன்ன ஒக்டோபஸ் போல் இறந்துவிட்டது. இந்தச் செய்தி கேட்டு உதைபந்தாட்ட உலகமே சோகத்தில் மூழ்கியுள்ளது.

தென்னாபிரிக்காவில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடந்துகொண்டிருந்தபோது, உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட ஒரு விடயம் என்றால் அது போல் என்ற பெயரைக் கொண்ட கடல்வாழ் உயிரினமான ஒக்டோபஸ் பற்றியதுதான்.

மேற்கு ஜேர்மனியின் ஒபர் அவுசனில் கடல்வாழ் உயிரினங்கள் அருங்காட்சியகம் ஒன்று உள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் வசித்த ஒக்டோபஸ் 'போல்', உலகக் கிண்ண உதைபந்தாட்ட முடிவுகளை மிகத்துல்லியமாகக் கணித்துக் கூறியது. தாய்நாடான ஜேர்மனி மோதிய 7 ஆட்டங்கள் மற்றும் இறுதிப்போட்டி ஆகியவற்றின் முடிவுகளை மிகவும் துளியும் சிதறாமல் கச்சிதமாக ஒக்டோபஸ் போல் கணித்துச் சொன்னது. இதனால் உலகக் கிண்ணப் போட்டியை விட ஒக்டோபஸ் போல் பற்றி அப்போது அதிகமாகப் பேசப்பட்டது.

அரையிறுதியில் ஜேர்மனி அணி, ஸ்பெயினிடம் தோற்கும் என்று ஒக்டோபஸ் போல் கணித்துச் சொன்ன மாதிரியே பலித்தபோது, அந்த நாட்டு ரசிகர்கள் கொதித்துப் போனார்கள். இதேவேளை, உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணி நெதர்லாந்தைத் தோற்கடிக்கும் என்று சொன்னது. சொன்ன மாதிரியே நடந்தமையால், ஸ்பெயின் நாட்டு அரசு ஒக்டோபஸுக்குத் தங்கள் நாட்டின் கௌரவ நண்பன் குடியுரிமையை வழங்கிச் சிறப்பித்தது. இப்படி உலகக் கிண்ணத் தொடரின்போது ஆரூடம் கூறியதன் மூலம் குறுகிய காலத்தில் பிரபலமடைந்த ஒக்டோபஸ் போலின் ஆயுள் கடந்த திங்கட்கிழமை இரவுடன் முடிந்தது.






இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எடைர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2010, ஒக்டோபர் 31ஆம் திகதி வெளியிடப்பட்டது.